KALKI 7.3.2004 ரூ.6.00

கல்கி



தேர்தல் ஸ்பெஷல்–1



உள்ளே...

களிப்பூட்டும் உடற்பயிற்சி

மினி கல்கி

ஸ்ரீராமஜெயம்

சதாபிஷேகம்

ஸ்ரீ M. ராஜாமணி

ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மி ராஜாமணி

2.3.2004



பாய்ந்து விளையாடிடும் பந்தாட்ட வீரர்
ஓய்வு என்பதே ஒருநாளும் அறியார்
ஆயிரம் பிறை கண்ட அருங்குண நாயகர்!
'இல்லத்தரசி'க்கு இலக்கணமாய் விளங்குபவர்
சொல்வளம் செயல்திறன் சேர்ந்த நன் மனையாள்
எல்லோரும் நலங்காண எந்நாளும் உழைப்பவர்!
பல்லாண்டு இவ்விருவர் பாரினில் வாழ்கவென
வாழ்த்தவோ வயதில்லை வேண்டுவோம் இறையருளை!

அருள்வாக்கு



எப்படிப்பட்ட தனி மனுஷ்யர்களின் பின்னே ஜனங்கள் ஓடுகிறார்களென்று பார்த்தால், யாருக்குக் கவர்ச்சிச் சக்தி இருக்கிறதோ, அவருக்குப் பின்னேதான். ஒருவருக்கு நல்ல அரசியல் ஞானம் இருக்கலாம், தேச நலனுக்கான கொள்கைகளை வகுத்து அவற்றைத் திறம்பட நடத்தி வைக்கிற சக்தி இருக்கலாம், நேர்மையான நடத்தை இருக்கலாம்; இதெல்லாம் அவரிடம் இருந்தாலும், இவற்றில் எதுவுமே இல்லாத இன்னொருவருக்கு நன்றாக ஜோடித்து மேடையிலே பேச முடிகிறது, வசீகரமான பெர்ஸனாலிடியிருக்கிறது என்றால், இவற்றின் கவர்ச்சியிலேயே இவர் விஷயம் தெரிந்த அந்த இன்னொருவரைவிட ஜனங்களின் பெரிய ஆதரவைப் பெற்று விடுகிறார். இந்த துர்தசையில் தான் இப்போது தேசமிருப்பதாகத் தெரிகிறது. ஸமூஹத்தின் எல்லா நிலைகளில் உள்ளவர்களுமே இப்படிப்பட்ட கவர்ச்சியில் மயங்கத்தான் செய்கிறார்களென்றாலும், இதிலேயும் விஷயம் தெரியாத பாமர ஜனங்களைத்தான் விசேஷமாக வளைத்துவிட முடிகிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்



உள்ளே...

2, 3 - "அந்தக் கண்ணாடித்தம்பி யாருப்பா?"
4 - வைகோ பதுங்குவது ஏன்?
5 - போணியாவாரா சோனியா?
10, 11 - செல்லப்பிள்ளைக்கு தண்டனை!
28, 29 - ஆஹா! 50,000/- தேர்தல் ஸ்பெஷல் பரிசுப் போட்டி!
74 - உஷ்!
84, 85 - திருமாவளவனைக் கலாய்க்கும் மொக்கராசு!
88, 89 - செய்திகள் திரிப்பது செம்பியன்
90, 91 - குளறுபடியில் பாண்டி
96 - ஐயோ - டேட்டா! (புதிய பகுதி)



சந்திரரெட்டிப்பட்டிக்கு அடித்தது அதிர்ஷ்டம். விருதுநகர் - மதுரை சாலையில், நகரை ஒட்டியே மூன்று கி.மீ தூரத்தில் இருக்கிறது சந்திர ரெட்டிப்பட்டி. இரண்டு நாள் தென் மண்டல மாநாட்டை தி.மு.க இந்த கிராமத்தில் நடத்த முடிவு செய்த போது, 'தாங்குமா விருதுநகர்?' என்ற சந்தேகம் எழுப்பப்பட்டது. மாநாட்டுக்கு வந்த வாகனங்களால் உருவான போக்குவரத்து நெருக்கடி, அந்தச் சந்தேகத்தை உண்மையென்று நிரூபித்தது. வழக்கமான திருவிழாவுக்கே உரிய எல்லா அம்சங்களும் மாநாட்டு வெளித் திடலில் தெளிவாகவே தெரிந்தன.

நுழைவுக்கட்டணம் உண்டு. அதற்கு ஒரு பெரிய வரிசை. உள்ளே நுழைந்த கும்பல் நேராக மேடையை நோக்கி விரைகிறது. காரணம், மேடையில் கலைஞருடன் இருந்த சரத்குமார். முன் வரிசையில்





“அந்தக் கண்ணாடி

கருப்பு - சிவப்பு கரை வேட்டிகளின் நடுவில் பாண்ட் போட்டுக் கொண்டு புது நட்சத்திரம் தயாநிதி மாறன். “அந்த கண்ணாடித் தம்பி யாருப்பா? மாறன் பிள்ளையா?” கேட்கிறது கிராமத்துப் பெரிசு.

சரத்குமார் பேச எழுந்த போதும், பேசியபோதும் ஏக உற்சாகம். இது 'இரண்டாவது சுதந்திரப் போர்' என்று போரடித்தார் சரத். “இந்தப் பகுதியில் மாநாடு போட்டது எங்களுக்கு ரொம்ப சந்தோஷமுங்க. ஆனால் தென் மாவட்டங்களில் ராமநாதபுரம், திருச்செந்தூர் ஆகிய இரு தொகுதிகளில் மட்டும் தி.மு.க போட்டியிடுவது வருத்தமுங்க” என்றார் நைனார்குளம் பாண்டி.

இரண்டாம் நாள் இன்னும் அதிகக் கூட்டம். எல்லோ





ரையும் வாழ்த்தி வர வேற்க ஸ்டாலின், அழகிரி, கலைஞர் படம் வரைந்த பேனர்கள். ரொம்ப தைரியசாலிகள் அழகிரி படத்தை மட்டும் பேனரில் வரைந்து இருந்தனர். ஆனால் மாநாட்டுக்கு வரவில்லை அழகிரி. அவரது அன்பு எதிரி பி.டி.ஆர் மட்டும் மேடைக்கு வந்து கலைஞருக்குச் சால்வை அணிவித்தார்.

கூட்டணிக் கட்சித் தலைவர்களில் எடுபட்டது வைகோவின் பேச்சு மட்டுமே. ஸ்டாலின் பேசும்போது கூட்டம் கவனமாகக் கேட்டதே தவிர, எந்த எழுச்சியும் இல்லை. இறுதியில் பேசிய கலைஞர் "புயல் சின்னம் (கூட்டணி) உருவாகி விட்டது. இந்தக் கூட்டணி கரையைக் கடக்கும் போது, அக்கிரம ஆட்சி அடித்துச் செல்லப்படும்'' என்றார்.

அம்மாவின் அதிரடிப் பிரசாரத்தை எதிர்கொள்ள, ஜனநாயக முற்போக்குக் கூட்டணி வைகோவையும், சிதம்பரத்தையும் மட்டுமே பிரசாரத்துக்கு நம்பியிருக்கிறது. பாராளுமன்றத்துக்கு நடக்கும் தேர்தலை, ஒரு

நம்பி யாருப்பா?''



மாநில அரசுக்கு எதிராக நடக்கும் வோட்டெடுப்பாக தி.மு.க மாற்றுவது, எந்த அளவுக்கு வெற்றிக்கு உதவி புரியும் என்பது சஸ்பென்ஸ்தான். சில புயல்கள் கடலிலேயே பலவீனமடைந்து விடுவதும் கலைஞருக்குத் தெரியாததல்ல!

\- ப்ரியன்

படங்கள்: மீடியா ராமு

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு



வைகோ பதுங்குவது ஏன்?

தி.மு.க, விருது நகரில் நடத்திய தென்மண்டல மாநாட்டில், ஹீரோவாக ஒளிர்ந்தவர் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோதான். வைகோ, இப்படி தி.மு.கவை நெருங்கி வருவது, ஏற்கெனவே ம.தி.மு.க.விலிருந்து தி.மு.க.வுக்கு வந்திருக்கும் பொன். முத்துராமலிங்கம், திருச்சி செல்வராஜ், கே.எஸ். ராதாகிருஷ்ணன், தங்கவேலு ஆகியோரை, சங்கடத்தில் நெளிய வைத்திருக்கிறது.

வைகோ சிறைக்குள் இருந்தபோது அவருடைய கட்சி கலகலத்துப் போனது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், தேர்தலில் நிற்காததற்கு இது மட்டும் காரணம் அல்ல. ஆளுங்கட்சி தனது முழு பலத்தைப் பயன்படுத்தி, வைகோவைத் தோற்கடித்து விட்டால், வைகோவை 'பொடா'வில் போட்டதை மக்கள் ஒப்புக் கொண்டார்கள் என்றாகி விடும். இதைத் தவிர்த்திருக்கிறார் வைகோ. ஒரு வேளை வெற்றி பெற்றால் 'பொடா' வழக்கில் தண்டனை கிடைக்கும் பட்சத்தில், ராஜினாமா செய்ய வேண்டியிருக்கும். அது பெரிய தர்ம சங்கடமாகவும், சறுக்கலாகவும் இருக்கும்.

தேர்தலில் நிற்காமல் பிரசாரம் மட்டும் செய்யும் பட்சத்தில், தி.மு.க தொண்டர்களிடமும் நெருக்கம் உண்டாகும். இது எதிர்கால அரசியலுக்கு உரமேற்றும் சங்கதியாயிற்றே!

ஆனால் சிவகாசி தொகுதியை வைகோவுக்காகத்தான் தி.மு.க ஒதுக்கியது. "அவர் முதலிலேயே தலைவரிடம் சொல்லியிருந்தால், வேறு ஏதாவது தொகுதியை ம.தி.மு.கவுக்குக் கொடுத்து, தி.மு.க சிவகாசியில் போட்டியிட்டிருக்கும். அவர் நடந்து கொண்ட விதத்தைப் பார்க்கும்போது, தி.மு.கவில் உள்ள சிலருக்கு சிவகாசி தொகுதியில் போட்டியிட வாய்ப்புக் கிடைக்கக் கூடாது" என்ற அடிப்படையில் நடந்து கொண்டதாகத் தோன்றுகிறது. இப்போது ம.தி.மு.க சார்பில் போட்டியிடும் சிப்பிப்பாறை ரவிச்சந்திரன், அந்தத் தொகுதியில் செல்வாக்குப் பெற்றவர் அல்ல. கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும்" என்கிறார்கள், மாநாட்டில் நாம் சந்தித்த சிவகாசி தொகுதி தி.மு.க பிரமுகர்கள்.

— சஞ்சயன்





“உங்கள் அணி வெற்றி பெற்றால், யார் பிரதமர் என்று சொல்வதில் என்ன தயக்கம்?” என்று தொலைக் காட்சி நிறுவனம் ஒன்று சோனியா காந்தியைக் கேட்டது.

“பா.ஜ.கவுக்கு வேறெந்தப் பிரச்னைகளும் கிடைக்காததால் ‘அந்நிய தேசத்தில் பிறந்தவர்’ என்று என்னைப் பற்றி மலிவாகப் பிரசாரம் செய்து வோட்டு வாங்க முயற்சிக்கிறார்கள். இப்படிப்பட்ட பிரசாரமெல்லாம் அவர்கள் மீதே திரும்பப் பாயும். என்னைப் பொறுத்தவரை, பிரதமர் பதவிக்கு முன்னுரிமை கொடுக்க மாட்டேன். காலம் கனியட்டும்; பார்க்கலாம்” என்று பதில் சொல்லியிருக்கிறார் சோனியா.

சோனியாவின் இந்த பதில், சர்ச்சையை உண்டாக்கியிருக்கிறது. “போட்டி துவங்கும் முன்னரே, பந்தய மைதானத்தை விட்டு ஓடி விட்டார் சோனியா” என்று பா.ஜ.க கிண்டல் செய்திருக்கிறது. “சோனியாவின் கருத்தைத் திரித்து அர்த்தப்படுத்தி, பிரசாரம் செய்கிறது பா.ஜ.க; தனக்கு இருக்கும் பொறுப்புகளைப் பட்டியலிடும்போது, வகுப்புவாத சக்திகளை முறியடிக்க வேண்டிய பணி முதன்மையாக இருக்கிறது என்றும், மற்றவை அதற்குப் பின்னால்தான் என்பதையும் மட்டும்தான் சொல்லியிருக்கிறார் சோனியா. உடனே பிரதமர் பதவிக்கு முன்னுரிமை இல்லை என அர்த்தம் பண்ணிக் கொள்வதா?” என்று பதிலடி கொடுத்திருக்கிறது காங்கிரஸ் தரப்பு.

“இந்தப் பிரச்னையில் பா.ஜ.கவின் வாயை முற்றிலும் அடைக்க, பிரதமர் பதவிக்கு மன்மோகன்சிங் போன்ற தலைவரை முன்னிறுத்திப் பிரசாரம் செய்யலாமே?” என்று தமிழ்நாடு காங்கிரஸ் செய்தித் தொடர்பாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான ஞானதேசிகனிடம் கேட்டோம். “மக்களை உறுத்தும் மற்றப் பிரச்னைகளிலிருந்து திசை திருப்ப, ‘அந்நியர்’ பிரசாரத்தை பா.ஜ.க எடுத்துக் கொண்டுள்ளது.

போணியாவாரா சோனியா?



காங்கிரஸ் கட்சிக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கும் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் தகுதி படைத்தவர் சோனியா. எங்களைப் பொறுத்த மட்டில், காங்கிரஸ் அணி வெற்றி பெறும். அவர்தான் பிரதமர்” என்கிறார்.

இந்தப் பாராளுமன்றத் தேர்தலை, ஜெயலலிதா ஆட்சியைப் பற்றிய வாக்கெடுப்பாகக் கருதுகிறது தி.மு.க. “சோனியா காந்தி இவ்வாறு சொல்லியிருப்பது அவரது பெருந்தன்மையைக் காட்டுகிறது. 1991ம் வருடம் நடந்த தேர்தலில், காங்கிரஸ் ‘இன்னார்தான் பிரதமர்’ என்று சொல்லி பிரசாரம் செய்யவில்லை. தேர்தலில் வென்ற பிறகு நரசிம்மராவைத் தேர்ந்தெடுத்தார்கள். இன்று காங்கிரஸ்காரர்களுக்கு மட்டுமல்ல, ஒட்டு மொத்த இந்தியாவில், மதவாதச் சக்திகளுக்கு எதிரான அணியின் முக்கியத் தலைவராக இருக்கிறார் சோனியா. அவர் பிரதமராக வரக் கூடாது என்று சொல்ல, பா.ஜ.கவுக்குக் கொஞ்சமும் தகுதியில்லை” என்கிறார், தி.மு.க.வின் அமைப்புச் செயலாளரான டி.கே.எஸ். இளங்கோவன்.

தேர்தல் நெருங்க நெருங்க, இந்த விவகாரத்தில் பல அதிரடித் திருப்பங்கள் இருக்கக்கூடும்.

- கௌசி



• நாகிரெட்டியுடன் ஏவி.எம்.

மாயாபஜார் மனிதர்

"எனது அண்ணன் முருகன், மற்றும் சகோதரி மீனா இருவரது திருமணமும் 1957ல் ஒன்றாக நடந்தது. முகூர்த்தம் முடிந்து முதல் பந்தி சாப்பாடு முடிந்தது. அடுத்த பந்திக்கு சாப்பிட, கூட்டம் அலை மோதியது. ஆனால், முதல் பந்தி சாப்பிட்ட இலையை எடுப்பதில் தாமதம் ஏற்பட்டது. நிலைமையை உணர்ந்த நாகிரெட்டி, கொஞ்சமும் தயங்காமல் மடமடவென்று சாப்பிட்ட இலைகளை எடுத்து, கூடையில் போட ஆரம்பித்து விட்டார். எவ்வளவு பெரிய மனிதர் நாகிரெட்டி! அவரது இந்தச் செயல், அங்கிருந்த அனைவரையும் பெரும் வியப்பில் ஆழ்த்தியது. நெகிழ்ந்து போன என் தந்தை ஏவி.எம்., நாகிரெட்டியை அப்படியே கட்டிப்பிடித்து கண் கலங்கி விட்டார்" என்று நெகிழ்ச்சியுடன் அண்மையில் மறைந்த நாகிரெட்டியைப் பற்றி நினைவு கூர்கிறார் ஏவி.எம். சரவணன்.

'மாயாபஜார்', 'மிஸ்ஸியம்மா' போன்ற வெற்றிப் படங்களைத் தயாரித்த நாகிரெட்டி மிகவும் எளிமையானவர். இயற்கையோடு இணைந்த வாழ்க்கையை விரும்பியவர். தோட்டத்தின் மத்தியில் ஆசிரமம் மாதிரியான வீடு, செடிகள் நிறைந்த ஆபீஸ் ரூம் என்று வைத்துக் கொண்டிருந்தார்.

வெங்காய வியாபாரியாக தமது வாழ்க்கையை ஆரம்பித்தவர், இரண்டாம் உலகப் போரின்போது, பெரும் நஷ்டத்துக்குள்ளானார். பின், சிறு அச்சகம் ஒன்றை ஆரம்பித்து, காலூன்றிய சமயம், ஜப்பானியர்கள் சென்னை மீது குண்டு வீசிய சம்பவத்தால், மீண்டும் பெரும் கஷ்டத்துக்குள்ளானார். அதன்பிறகு திரைப் படத்துறையில் நுழைந்து, காலூன்றி, பெரும் வளர்ச்சி கண்டு, தாதா சாகிப் பால்கே விருது வாங்கினார்.

நாகேஸ்வர ராவ், தமது மகன் நாகார்ஜுனாவுக்குத் திருமணம் நடத்த, சென்னையில் பெரிய கல்யாண மண்டபம் கிடைக்காமல் திண்டாடி, நாகிரெட்டியின் உதவியை நாடினார். "உங்களுக்கென்ன! ஒரு புதிய கல்யாண மண்டபமே கட்டித் தந்து விடுகிறேன்' என்று வாக்குறுதி கொடுத்து விட்டு, ஐம்பதே நாட்களில் பிரம்மாண்டமாய்க் கட்டி முடிக்கப் பட்டதுதான் விஜய சேஷ் மகால் கல்யாண மண்டபம். இன்றைக்கும் இரண்டாயிரம் பேர் அமரக் கூடிய, சென்னையின் பெரிய கல்யாண மண்டபம் அதுதான்.

நாகிரெட்டியின் தந்தையார் உடல் நலமின்றி தனியார் ஆஸ்பத்திரியில் இருந்த போது, அங்கிருந்த ஆரோக்கியமற்ற சூழலில் பல கஷ்டங்களை அனுபவித்தார். அப்போது, 'நாம் ஒரு மருத்துவமனை கட்ட வேண்டும். அதில் சகல வசதிகளும் இருக்க வேண்டும்' என்று நினைத்தார். அந்த எண்ணம்தான், பலவருடங்களுக்குப் பின் விஜயா மருத்துவமனையாக உருவெடுத்தது.

'காளி' தமிழ்ப்படத்தின் ஷூட்டிங்கின் போது ஏற்பட்ட தீவிபத்தில், பதின்மூன்று ஸ்டண்ட் நடிகர்களுக்கு பலமான தீக்காயம் ஏற்பட்டு விட்டது. விஷயத்தைக் கேள்விப்பட்டு, காயமடைந்தவர்களை, விஜயா ஆஸ்பத்திரிக்கு அழைத்து வரச் சொல்லிவிட்டு, நேரே விஜயா ஆஸ்பத்திரிக்கு வந்து விட்டார் அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். "தீக்காயம் பட்டவர்களைக் காப்பாற்ற வேண்டியது உங்கள் பொறுப்பு" என்று நாகிரெட்டியிடம் எம்.ஜி.ஆர் சொல்ல, அதை சிரமேற்கொண்டு, ஆஸ்பத்திரியின் பிரத்யேக சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தவர் நாகிரெட்டி. காயமடைந்தவர்கள் முற்றிலும் குணமடைந்து, தங்கள் தொழிலுக்குத் திரும்பினார்கள்.

- எஸ். சந்திரமௌலி

உங்கள் ஆரோக்கியமான உடல் நலத்திற்கு எங்களின்

முழுஉடல் பரிசோதனை வசதியை பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

SREE BALAJI MEDICAL COLLEGE & HOSPITAL

ஸ்ரீ பாலாஜி மருத்துவக்கல்லூரி & மருத்துவமனை

(Approved by the Medical Council of India & Govt. of India)

7, ஒர்க்ஸ் ரோடு, நியூகாலனி, குரோம்பேட்டை, சென்னை - 600 044.



இந்தியாவின் புகழ்வாய்ந்த நிபுணத்துவம் பெற்ற மருத்துவப் பேராசிரியர்களைக் கொண்டு 500 படுக்கைகள் கொண்ட 24 மணி நேர சிறப்பு மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது. அனைத்து சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளும், வசதிகளும் கொண்ட மிகப்பெரிய புகழ்வாய்ந்த மருத்துவமனை, சென்னை, குரோம்பேட்டையில் அமைந்துள்ளது.

1. விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு
2. 24 மணி நேர எலும்பு முறிவு பிரிவு
3. முடநீக்குவியல் மற்றும் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை பிரிவு
4. மகளிர், மகப்பேறு, மலட்டுத்தன்மை மருத்துவம்
5. குழந்தைகள் நல மருத்துவம் மற்றும் குழந்தைகள் அவசர சிகிச்சை பிரிவு
6. அறுவை சிகிச்சை மற்றும் அறுவை மருத்துவம் தீவிர சிகிச்சை பிரிவு
7. கண் மருத்துவம் மற்றும் கண்புரை அறுவை சிகிச்சை
8. பொது மருத்துவம் மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு
9. லேப்ரோஸ்கோப்பி சிகிச்சை , லேசர் சிகிச்சை க்ரையோ சிகிச்சை
10. காது, மூக்கு, தொண்டை பிரிவு
11. இருதய நோய் மருத்துவம்
12. சிறுநீரக நோய் பிரிவு மற்றும் டயலாசிஸ் பிரிவு
13. நரம்பியல் பிரிவு

இங்கு முழு உடல் பரிசோதனை தினமும் செய்யப்படும் (Master Health Checkup)

முன் பதிவுக்கு அணுகவும்: ☎ 22415600 - 601, 602 & 603



'Customer Smile' is an ever growing account with us!

- Attractive Deposit Schemes
- Innovative Loan Schemes
- Over 125 Branches Nationwide
- Authorised Dealers in Foreign Exchange
- Computerised operations
- ATM facility at select branches

1904 2004
100 years
A Legend in Customer Care

CUB/2179/04

CITY UNION BANK LIMITED

Registered Office : Kumbakonam - 612 001, Tamilnadu.
Phone : 0435-2432322 Fax : 0435-2431746.
E-mail : cubco_kmb@sancharnet.in Website : http://www.cityunionbank.net

THE HUMANE BANK



புதிர்க் கோட்டை
தொகுதி விசிட்



புதுக்கோட்டை பாராளுமன்றத் தொகுதி, பி.ஜே.பிக்கு ஒதுக்கப் படாததை திருநாவுக்கரசரின் அபி மானிகளால் ஜீரணிக்கவே முடிய வில்லை. "உங்களுக்கும் அந்தம்மாவுக் கும் என்ன அத்தனை கசப்பு?" எனக் கவிதை மொழியில் வாஜ்பாயே வினவும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது இந்த விஷயம்.

செல்லப்பிள்ளைக்கு தண்டனை!

அறந்தாங்கி சட்ட மன்றத் தொகுதியிலிருந்து ஆறு முறை தொடர்ந்து வெற்றி பெற்றவர் திருநாவுக்கரசர். கட்சிக்கு வோட்டா? குறிப்பிட்ட சின்னத்துக்கு வோட்டா? என்கிற கேள்வியெல்லாம் எடுபடவில்லை. இரட்டை இலை - சேவல் - குடை - இரட்டை இலை என சின்னங்கள் மாறி மாறி வந்தாலும் வெற்றிக் கனி அவருக்குத் தான்.

அறந்தாங்கி, பட்டுக்கோட்டை, பேராவூரணி, புதுக்கோட்டை, குளத்தூர், ஆலங்குடி என ஆறு சட்டமன்றத் தொகுதிகள் அடங்கியது புதுக்கோட்டை நாடாளுமன்றத் தொகுதி. படு அப்செட்டாகிப் போயிருக்கிறவர்கள் அறந்தாங்கி சட்ட மன்ற வாக்காளர்களே.

கடந்த நான்காண்டுகளில் மட்டும் எட்டு கோடி ரூபாய் பெறப்பட்டு பல்வேறு திட்டப்பணிகளுக்குச் செலவிடப்பட்டுள்ளது. தொகுதியெங்கிலுமாக இருநூற்றைம்பது பள்ளிகளில் புதிய கட்டடங்கள், கணிப்பொறிகள், நூலகங்கள், சத்துணவுக் கூடங்கள் என்று புள்ளி விவரம் தருகின்றனர் அவரது கட்சியினர்.


பாரி நிறுவனத்தினரின் சர்க்கரை ஆலை அறந்தாங்கி குருங்கூரில் அமைந்திடக் காரணமாய் இருந்தவர் திருநாவுக்கரசர்.

மத்திய சாலை மேம்பாட்டு நிதியென ஐம்பது கோடி ரூபாய் பெறப்பட்டிருக்கிறது. முதல் கட்டமாக புதுக்கோட்டை - அறந்தாங்கி 32கி.மீ. சாலை புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர அவர் நிறுவியுள்ள எம்.ஜி.ஆர் நினைவு அறக்கட்டளை செய்யும் மருத்துவ சேவையும் பாராட்டுக்குரியது. ஆறு சட்ட மன்றத் தொகுதிகளில் ரோட்டரி, அரிமா சங்கங்களின் உதவியுடன், மஞ்சள் காமாலை தடுப்பு ஊசி மருத்துவ முகாம் நடத்தி வருகிறது இவ்வறக்கட்டளை.

• பெரி. அரசு


• ஆர். பாலகிருஷ்ணன்



• எஸ். கோகுலதாஸ்

தாங்கள் வைத்திருக்கும் அபிமானத்துக்கு இவை மட்டுமே காரணமல்ல என்கின்றனர் அறந்தாங்கி வாக்காளர்கள். ரத்தினக் கோட்டை கிராமத்து நபர் ஆர். பாலகிருஷ்ணன் (51) தையல்காரர். "எங்க பக்கத்துல யார் வூட்லேயும் ஒரு சேதம்ன்னு

(துக்க காரியம்) தகவல் தெரிஞ்சிட்டாப் போதும். அன்னைக்கி வர முடியாட்டியும் அடுத்து அந்தப் பக்கமா வரும்போது கேதம் விசாரிச்சுட்டுத்தான் போவாரு. இது இல்லாம, கல்யாணம், காது குத்துன்னாலும் சமயம் கிடைக்கும் போதெல்லாம் வந்து நின்னுடுவாரு!'' என்கிறார் அவர். அறுபத்தைந்து வயதாகும் விவசாயி ஆர். முத்துவேல். "நான் தி.மு.க அனுதாபி. ஆனால் தேர்தல்ல திருநாவுக்கரசர் நின்னா, நா அவருக்குத்தான் இதுவரைக்கும் வோட்டுப் போட்டு வந்திருக்கேன். இப்போ என்னோட வோட்டு யாருக்குன்னு உங்களுக்குப் புரிஞ்சிருக்கும்!'' என்று மர்மமாகப் புன்னகைக்கிறார் அவர்.


• ஆர். முத்துவேல்


• ஆமிஷா பீவி


• ப. அரசன்

''எங்களோட இஸ்லாத்து மக்கள்லே பெரும்பாலோர் அவருக்குத்தான் இதுவரைக்கும் வோட்டுப் போட்டு வந்திருக்கோம். எங்க தொகுதிக்கு அவுரு செல்லப் பிள்ளை மாதிரி. அவுரு நிக்கலேங்கவும், எனக்கொண்ணும் விளங்கலை!'' என அங்கலாய்க்கிறார் ஆயிஷா பீவி.

"இது எங்களுக்குப் பெரும் அதிர்ச்சியே. இருந்த போதிலும் எங்கள் தலைவர் திருநாவுக்கரசர் அறிவுரையின்படி செயல்படுவோம்!'' என்கிறார் பி.ஜே.பியின் புதுக்கோட்டை நகர மன்றத் தலைவர், துரை. திவ்யநாதன்.

''கூட்டணிக் கட்சி வேட்பாளரின் வெற்றிக்குப் பாடுபடுவதே எங்கள் குறிக்கோள்!'' என்கிறார் அறந்தாங்கி தொகுதி பி.ஜே.பி. எம்.எல்.ஏ., ப. அரசன்.

நமது கௌரவத்தைக் குறைத்துக் கொண்டு கூட்டணியை அமைப்பது கட்சியின் வளர்ச்சிக்கு நல்லதல்ல என்று வாஜ்பாய்க்கு ஃபேக்ஸ் அனுப்பியுள்ளார் பி.ஜே.பி. புதுக்கோட்டை மாவட்ட அறிஞர் அணி பொதுச் செயலாளர் எஸ். கோகுலதாஸ்

புதுக்கோட்டை நாடாளுமன்றத்தின் அ.தி.மு.க. வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருப்பவர் அ.ரவிச்சந்திரன் (38). அரசு பொது வக்கீலாகப் பணியாற்றி வருகிறார். நரங்கியப்பட்டு கிராமம் சொந்த ஊர். தேர்தலில் புதுமுகம். தி.மு.க. வேட்பாளரின் பெயர் இன்னும் அறிவிக்கப்படவில்லை. ஆனால் தொகுதி முழுதும் முன்னாள் அமைச்சர் ரகுபதி பெயரே அடிபடுகிறது.

பாண்டிச்சேரி
தொகுதி விஸிட்
பக்கம் 90,91

"தி.மு.க.- காங்கிரஸ் கூட்டணி, திருநாவுக்கரசர் போட்டியிடாதது போன்றவை எங்கள் வெற்றியை எளிதாக்கியுள்ளது'' என்கிறார் புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க. செயலாளர் பெரி. அரசு.


சமீபத்தில் அமைச்சர் எம்.ராதா கிருஷ்ணன் தலைமையில், அ.தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் நடந்தது. அங்கு பேசிய மாவட்ட அவைத்தலைவர் ரத்தினசபாபதி, "ஒரு துரோகியை (திருநாவுக்கரசரை) மாநில அரசியலில் இருந்து விரட்டி விட்டோம். இன்னொரு துரோகியை (ரகுபதியை) தோற்கடிக்க வைப்பதன் மூலம், அரசியலில் இருந்தே ஓட ஓட விரட்டுவோம்!" என்று பேசியதாகச் சொல்லப்படுகிறது. இது புதுகை மாவட்ட பி.ஜே.பியினரிடையே சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.



வழக்கமாய் திருநாவுக்கரசருக்கு விழுந்து வந்த வாக்குகள், எப்படியும் திசை திரும்பும் வாய்ப்புகள் இருக்கின்றன. திருநாவுக்கரசர் அங்கம் வகிக்கும் பி.ஜே.பி கட்சியினர், அ.தி.மு.கவுக்கு ஆதரவாகத் தேர்தல் வேலைகள் செய்ய முனைந்தாலும், குறிப்பிட்ட அபிமான வாக்காளர்களின் வோட்டு இரட்டை இலைக்குதான் கிடைக்கும் என்பதில் எந்த நிச்சயமும் இல்லை. கடைசியாய் அந்த வாக்குகளே வெற்றியை நிர்ணயிக்கும் சூழலையும் ஏற்படுத்தலாம்.

தேர்தல் களத்தில் புதுக்கோட்டை என்பது ஒரு புதிர்க் கோட்டை தான்.

கட்டுரை, படங்கள்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



முப்பத்தொரு புதுமுகங்கள்!

அ.தி.மு.க.-பா.ஜ.க தேர்தல் கூட்டணி உறுதியாவதற்கு முன்னரே ஜனநாயக முற்போக்குக் கூட்டணி அமைக்கப்பட்டுவிட்டது. அதில் அங்கம் வகிக்கும் காங்கிரஸுக்குரிய பத்து தொகுதிகளும் ஒதுக்கப்பட்டுவிட்டன. ஆனால், இன்னமும் அத்தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் யார் என்பது முடிவாகவில்லை.

நேர் மாறாக, அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணி முடிவான சூட்டி லேயே, அ.தி.மு.க. வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டு விட்டது. ஆனால், இந்தச் சுறுசுறுப்பைப் போற்றும் அளவுக்கு நாம் வேட்பாளர் தேர்வை வரவேற்பதற்கில்லை. பெரியகுளம், தென்காசி தொகுதிகள் தவிர, மற்ற தொகுதிகள் அனைத்திலும் புதுமுக வேட்பாளர்களையே நிறுத்தியிருக்கிறார் கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா.

தமிழ்நாட்டின் 39 தொகுதிகளுள் 33 தொகுதிகளில் அ.இ. அ.தி.மு.க. போட்டியிடுகிறது. இவற்றுள் 31 தொகுதிகளில் நாடாளு மன்றத்தில் முன் அனுபவம் இல்லாத நபர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். எஞ்சிய இருவர், ஏற்கெனவே எம்.பி.க்களாக இருந்தவர்கள் என்ற போதும், முதிர்ந்த அனுபவஸ்தர்கள் அல்ல.

இந்தப் புதுமுக வேட்பாளர்களுள் பலர் பட்டதாரிகள்; ஓரிருவர் மருத்துவர்கள், பதினொரு பேர் வழக்குரைஞர்கள். இதற்காக நாம் மகிழ்ச்சி கொண்டுவிட முடியாது. ஏனெனில், இந்த ஏட்டறிவு நாடாளு மன்றத்தில் தமிழகத்தின் தேவைகளை எடுத்துரைக்கவும், அவசியமா னால் வாதாடவும் உதவப்போவதில்லை.

நாடாளுமன்ற உறுப்பினரின் பொறுப்பை வகிப்பதற்கு வலுவான




கல்கி



2004 மார்ச் 7
சுபானு மாசி 24
மலர் : 62
இதழ் : 32

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




அரசியல் பின்னணியோடு, பட்டறிவும் தேவை. பிரச்னைகளை எதிர்நோக்கும் தீர்கதரிசனம்; பரந்த நோக்கு; கட்சி, தொகுதி, என்று மட்டும் சிந்திக்காமல், நாட்டுக்கு என்ன அவசியம், எது நல்லது என்று எடைபோடும் திறன்; சுதந்திரச் சிந்தனை; முடிவெடுக்கும் ஆற்றல் என்று ஒரு எம்.பி. சராசரிக்கு மேற்பட்ட தலைமைக் குணங்கள் உடையவராக இருக்க வேண்டும்.

கடந்த காலத்தில் தமிழ்நாட்டிலிருந்து தேர்வான எம்.பி.க்கள் பலர், முக்கிய இலாகாக் களில் அமைச்சர் பொறுப்பு வகித்து, வியத்தகு திட்டங்கள் வகுத்து, தங்கள் மாநிலத்தை மட்டுமின்றி, நாட்டையும் முன்னேற்ற உதவியிருக்கிறார்கள்.

பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட சி.எஸ், தமிழகத்தில் சிறு தொழில் வளர்ச்சிக்குக் காரண மாயிருந்த ஆர்.வி., பிற்காலத்தில் பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கு வழி வகுத்துச் செயல்படுத்திய ப.சிதம்பரம், தொழில் வர்த்தகத் துறை அமைச்சராக இருந்து, உலக அரங்கில் இந்திய, தொழில் உரிமைகளுக்காகப் போராடிய முரசொலி மாறன் என்று பெருமிதத்துக்குரிய பட்டியல் இருக்கிறது. அமைச்சர்களாகாவிட்டாலும், எம்.பிக்களாக இருந்து சாதனை புரிந்தவர்களும் உண்டு.

தற்போது ஜெயலலிதா தேர்வு செய்துள்ள வேட்பாளர்கள் யாரேனும் இத்தகைய உயரங் களைத் தொடக்கூடியவர்களா என்பது சந்தேகம்தான். சட்ட சபை அனுபவம் என்பதுகூட அவர்களுக்குக் கிடையாது. இந்நிலையில், தமிழகத்தின் தேவைகளை இவர்கள் நாடாளு மன்றத்தில் எந்த அளவுக்கு முன் வைப்பார்கள்? நாட்டுக்கு எந்த அளவுக்கு உபயோகமாய்ச் செயல்படுவார்கள்...?

'எல்லோருமே முன் அனுபவத்துடன், முதிர்ந்த அறிவுடன் நாடாளுமன்றத்துக்குள் நுழைய முடியாது. யாருக்குமே முதல் முறை என்பதாக ஒன்று இருந்துதான் ஆகவேண்டும்' என்று வாதாடலாம். இந்த வாதத்தில் நியாயம் இருக்கிறது. ஆனால் 33 வேட்பாளர்களுள் இரண்டு பேருக்குத்தான் முன் அனுபவம்; மற்ற அனைவருக்கும் இது முதல் அனுபவம் என்ற நிலைமை ஆரோக்கியமானதல்ல. முப்பத்து மூன்றில், இருபது அனுபவஸ்தர்களும், பதின்மூன்று புதுமுகங் களும் இருந்தால்கூட தமிழகத்தின் உரிமைகள் எடுத்துரைக்கப்படும்; காக்கப்படும் என நம்பலாம். தேர்தலில் வெற்றி பெறும் அனுபவஸ்தர்கள், புதுமுக உறுப்பினர்களை வழிகாட்டி



அழைத்துச் செல்வார்கள் என்றும் நம்பிக்கை கொள்ளலாம். தற்போதைய நிலையில் அந்த நம்பிக்கை தகர்ந்து போகிறது.

முப்பத்து மூவருள், முப்பத்தொருவர் புதுமுகங்களாகத் தேர்வு செய்யப்படுவதற்குக் காரணம் என்ன?

பண்பட்ட, அனுபவசாலிகளான வேட்பாளர்கள் யாருமே அ.தி.மு.கவில் இல்லையா...?

அவ்வாறு இருக்கக் கூடிய அனுபவஸ்தர்களை, வேட்பாளர்களாக்க கட்சித் தலைமை விரும்பவில்லையா...?

புதுமுக வேட்பாளர்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வது சுலபம் என்று கருதி, கட்சித்தலைமை பெரும்பாலானவர்களைப் புதுமுகங்களாகத் தேர்வு செய்திருக்கிறதா..?

காரணம் எதுவாக இருந்தாலும், இது ஆரோக்கியமான போக்கு அல்ல.

இளைய தலைமுறையினருக்கும், புதுமுகங்களுக்கும், எந்தக் கட்சியும் வாய்ப்பளிக்கத்தான் வேண்டும். ஆனால், அந்த வாய்ப்புகளுக்கு அடிப்படையாக, அஸ்திவாரமாக அமைய வேண்டியது உட்கட்சி ஜனநாயகம்.

அ.இ.அ.தி.மு.கவைப் பொறுத்தவரை, உட்கட்சி ஜனநாயகம் என்பது சமாதி கட்டப்பட்டு விட்ட விஷயம். கட்சித் தலைவியின் தேர்வாக நியமிக்கப்பட்டுள்ள வேட்பாளர்களுக்கு அக்கட்சியின் தொண்டர்கள் வேண்டுமானால் பயந்து கொண்டோ, பணிந்து போயோ வேலை செய்யலாம்.

ஆனால், வாக்காளர்கள் இந்த வேட்பாளர்களை ஆதரிப்பதா என்று ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அ.இ.அ.தி.மு.கவின் கொள்கை, தேர்தல் அறிக்கை, இதுநாள் வரையிலான செயல்பாடு போன்றவற்றை ஒரு பக்கம் எடைபோட்டுப் பார்க்க வேண்டும். அதோடு, வேட்பாளர்களின் தகுதியையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவர்களால் தமிழ்நாட்டுக்கு நியாயம் செய்ய முடியுமா? நாட்டுக்கு நல்லது செய்ய முடியுமா என்று எடைபோட்டு முடிவுக்கு வரவேண்டும்.

நமது வோட்டு ஒவ்வொன்றும் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் சக்திபெற்றது என்பதை மறவாமல் செயல்பட வேண்டும். ○





பறவையாக இருந்தால்...

அழகான அந்தியில்
கடவுள் கேட்டார்
பறவையாகும் வரம் வேண்டுமா?

யோசித்தேன்
சுகமாய்த்தான் இருந்தது

சோம்பல் என்பதை
என் அகராதிதான்
அறியுமா?

தகிக்கும்
எந்தன் வாய்க்கு
தண்ணீரே போதும்,
தானியங்களும்
கொஞ்சமே போதும்
நான் பறவையாக இருந்தால்...

இறகுகள் போலவே
எந்தன் இலக்குகளும்
இலேசானவைதான்,
ஆனால் அர்த்தம் பொதிந்தவை

இன்னும் பலவும்
கிடைத்திடும்,
நினைத்த பலவும்
நடந்திடும்

ஆனால்
சொர்க்கம் கிடைக்குமா,
அம்மா உன் மடியில்
உறங்கும் சுகம் எனக்குக்
கிடைக்குமா?

மறுத்து விட்டேன்,
கடவுளின் கோரிக்கையை

— இரா. பகுத்தறிவு

மொட்டை மாடியில் 101 கிளிகள்!

ஒரு தாய், தன்னுடைய குழந்தைகளுக்குப் பிறந்த நாள் கொண்டாடுவது வழக்கமானது தான். ஆனால் நூறு பெண்கள் சேர்ந்து, பிரியத்துக்குரிய தாய்க்குப் பிறந்த நாள், அதுவும் முதல் ஆண்டு பிறந்த நாள் விழா கொண்டாடியிருக்கிறார்கள்!

இந்த அதிசயத்தை நிகழ்த்தியவர்கள் கவிஞர் பொன்மணி வைரமுத்து சென்னையில் நடத்தும் 'தாய்'மகளிர் விடுதிப் பெண்கள். நட்சத்திர ஓட்டல் போன்ற சுத்தம், கோயில் போன்ற அமைதி, தாய்வீடு போன்ற பாதுகாப்பு கொண்ட விடுதியில் வசிக்கும் பெண்கள் அல்லவா? அந்தத் திருப்தியும், சந்தோஷமும் எல்லா முகங்களிலும் பிரதிபலித்தன.

இளம் மாலைப் பொழுது... ஐந்தாவது தள மொட்டைமாடி... ஜிலுஜிலு காற்று வீச, ஆட்டம், பாட்டம், என அசத்தி விட்டார்கள். கவிதைப் போட்டி இல்லாமலா...? கவிஞர் வைரமுத்து, பாராட்டிய முதல் பரிசுக் கவிதை பிரசுரிக்கப் பட்டுள்ளது.

நூறு பெண்கள் விடுதியில் வசிப்பவர்கள். ஓ.கே! நூற்றியோராவது கிளி யார்? சிறப்பு விருந்தினராக வந்து, 'சாந்தி நிலவ வேண்டும்' பாடிய இசைக் கிளி நித்யஶ்ரீ மகாதேவன் தான்!

- டாலி



• சிறப்பு விருந்தினருடன் கவிஞர்; பரிசு பெறும் நடனமங்கை அபூர்வா

கல்கி சதாசிவம் நினைவு அறக்கட்டளை



கல்கி சதாசிவம் நினைவு விருது வழங்கும் விழா

- 2003ம் ஆண்டில் தமிழ் இதழ்களில் வெளியான, கலை நயமும் சமுதாய நோக்கும் இணைந்த தலைசிறந்த விளம்பரத்துக்கான விருது வழங்குதல்
- படிப்பில் சிறந்த, பொருளாதாரத்தில் பின்தங்கிய இதழியல் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்

தலைமை உரை : **டாக்டர் சி.வி. கிருஷ்ணஸ்வாமி**

சிறப்புரை : **ஸ்ரீமதி லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி**

துகாராம் கணபதி மஹராஜ்

வழங்கும்

வாரகரீ ஸம்ப்ரதாய ஸங்கீர்த்தன ஹரிகதை

நாள் : 6, மார்ச் 2004, சனிக்கிழமை
நேரம் : மாலை 6.00 மணி
இடம் : பாரதிய வித்யாபவன் அரங்கம்,
சென்னை - 600 004

அனைவரும் வருக!



* பா. ராகவன்

விழாவில் கிடைத்த வெளிச்சம்

"அந்த விழாவில் கலந்து கொண்ட பலருக்கு கி.ரா.வையும், ஜெயமோகனையும் மட்டுந்தான் தெரிந்திருக்கிறது. வேறு யாரையும் தெரியவில்லை" - தமிழின் சமகால இலக்கியக் குளத்தில் இப்படியொரு சிறு கல்லை எடுத்து வீசுகிறார் எழுத்தாளர் பா. ராகவன்.

கடந்த வாரம் கல்கத்தாவுக்குச் சென்று வந்தவரின் செயல்களில் நிறைய மாற்றங்கள். கண்களில் நிறைய ஏக்கம். சம கால தமிழ்ப் படைப்புகளை ஆங்கிலத்தில் கொண்டு வரும் முயற்சிகளை, உடனடியாக மேற் கொண்டிருக்கிறார். தாம் பணியாற்றும் The New Horizon Media சார்பாக ஒரு மொழி பெயர்ப்புக் காலாண்டிதழ் உடனே ஆரம்பிக்கச் சிபாரிசு செய்துள்ளார். கல்கத்தா விழாவும் இதற்கு ஒரு தூண்டுதல் என்கிறார்.

"உங்கள் மொழியில் வேறு யார் யாரெல்லாம் முக்கியப் படைப்பாளிகள்? என்னென்ன சிறந்த படைப்புகள் வந்து கொண்டிருக்கின்றன? என்று அங்கு வந்த பலரும் என்னிடம் கேள்வி மேல் கேள்விகளை அடுக்கினார்கள். அப்போதுதான் தெரிந்தது. இங்கு சண்டையும் சச்சரவும் மிகுந்த எவ்வளவு ஒரு குறுகிய வட்டத்திற்குள் தமிழ் இலக்கிய உலகம் அடங்கிப் போய் விட்டது என்பதும், வெளி ஆட்களுக்கு இங்கு நடப்பது எதையும் தெரியப் படுத்த, எந்த முயற்சியும் நாம் மேற்கொள்ளவில்லை என்பதும்" என்று தம் ஆதங்கத்தை வெளிப்படுத்தும் பா. ராகவன், கல்கத்தா சென்றது, பாரதிய பாஷா பரிஷத் விருது பெறுவதற்காக.

விருது வழங்கும் விழாவில்தான் இந்தக் கேள்விக் கணைகள்...! 'சரி, அதற்கு உங்கள் பதில் என்னவாக இருந்தது?' என்று நமது ஆர்வத்தை மறைக்காமல் கேட்க, அவரும் யோசிக்காமல், "எந்தக் குழுவிலும் அடங்காத ஆர். வெங்கடேஷ், நாகூர் ரூமி ஆகிய இருவரின் பெயரைத்தான் முன் மொழிந்தேன்" என்று பளீரென்று சொன்னார்.

விழா பற்றி...?

"பாரதிய பாஷா பரிஷத், நாட்டில் உள்ள எல்லா மொழிகளிலும், சிறந்த எழுத்தாளரின் படைப்புகளை இந்தியிலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து உலகறியச் செய்பவர்கள். ஆண்டுதோறும் இந்திய அளவில் நல்ல எழுத்தாளர்களை இனம் கண்டு, அவரின் ஒட்டுமொத்த பணிகளுக்கு விருது வழங்குகிறார்கள். இந்த ஆண்டு இளைய எழுத்தாளர்களை மட்டும் தேர்ந்தெடுத்து, உற்சாகப்படுத்த முடிவெடுத்திருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட நால்வரில் நானும் ஒருவன். மற்ற மூவர் மராட்டிய கவிஞர் ஹேமந்த் த்விதே, ஒரிய எழுத்தாளர் ஷர்மிளா போஹ்ரா, இந்தி எழுத்தாளர் பரோமிதா ஷத்பதி. விழாவில், 'என் காலம் என் கவலை என் கருத்து' என்ற தலைப்பில் பேசும் வாய்ப்பும் கிடைத்தது."

விருது கிடைத்தது குறித்து என்ன நினைக்கிறீர்கள்...?

"எனக்கு மட்டும் கொடுக்கப்பட்ட விருதாகக் கருதவில்லை. இப்போது தமிழில் எழுதிக் கொண்டிருக்கும் இளம் படைப்பாளிகளுக்குக் கிடைத்த கௌரவமாகத்தான் இதை நான் கருதுகிறேன். என் ஆளுமையை வளர்த்த மதிப்பிற்குரிய நண்பர்கள், சக எழுத்தாளர்களை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன். என் அம்மாவுக்கும் மனைவிக்கும் நன்றி பாராட்ட கடமைப் பட்டுள்ளேன்.

உலகிலேயே பாவப்பட்ட ஜீவன் யாரென்றால் அது எழுத்தாளரின் மனைவிதான்! தாஸ்தாவ்ஸ்கியின் மனைவியாக இருந்தாலும் சரி, புதுமைப்பித்தனின் மனைவியாக இருந்தாலும் சரி! இம் மாதிரி விருதுகள்தான் எழுத்தாளனால் கஷ்டப்படும் மனைவிக்கு தற்காலிக ஆறுதல்!" என்றார் இதய பூர்வமாக.

- பால்நிலவன்

SRI SADGURU SABHA (REGD.) VEDA PADASALAI

No. 31, Subramaniam Street, West Mambalam, Chennai - 600 033.



Vedokilo Dharma Moolam! Vedo Rakshathi Rakshitham

Sri Sadguru Sabha's humble request to our Asthika friends:

Vedas are our Treasure and ever lasting. Even today our "bharath kandh" is so proud because of our Vedas which is a known fact to every one of us:

Everyone's duty is to learn and practice Vedas to attain eternal divine. Now-a-days we could not learn and practice vedas due to various reasons and hence it is our endeavour to help by all means to those students who have shown vigour and will in learning Vedas. By doing such noble thing we can get the blessings of Vedamatha!! Under the guidance of his holiness Sri Sri Sri Kanchi Mahaswamigal the school is running for the past twelve years.

For this reason this Sri Sadguru Sabha is establised and nearly 25 students are under going 'Gurukulavasa' after completing "Upanayana Karma".

For such students it is our bounded duty to provide facilities like clothes, food, place to stay and learn; and other necessary facilities, to get the blessings of Vedamatha!!

We invite you all to our Sadguru Veda Patasala. In memory of our living deity Sri Kanchi Acharya's wish, we all have to implement "PIDI Arisi" scheme at our homes and your offerings must be offered in person to our Vedapatasala, twice in a month and get the blessings.

Please undertake 'Annadhana Samaradhana' on any day of your choice viz; Birth day, Weddingday, Ancestor's Day or any other day, and get the blessings of the Almighty.

Patasala has decided to collect Rs.1000 for a day's Annadhana expenses.

Offering food to those students who learn veda is termed as "bikhsha". One day Sri Adhi Sankara came to a poor Lady's House and asked "Bhavathe bhikhshanthehi" one day and that poor lady could offer only 'Nellikani'. Immediately Sri Adhi Sankarar chanted "Kanakadhara Sthothram" and gave her all good fortunes in her Life and this story is known to all of us.

Like wise for vedic students you offer 'bicksha' and this is not a "PITCHAI"

Please deposit Rs. 10,000/- and we conduct Samaradha on any day of your choice out of the interest on the above deposit. Your co-operation for this noble cause is solicited.

Your Donations are exempted under 80G of I.T. Rules

For futher details please contact at the following address :


The Headmaster, Sri Sadguru Sabha

Ved bashya Vidwan **T.S. BALA SUBRAMANYA GANAPATIGAL**

Old No. 31, New No. 64, Subramayam Street,

West Mambalam, Chennai - 600 033. Phone : 23710602

Awaiting your visit and response. Director Sri Sadguru Sabha Veda Patasalai.



ஸ்ரீ விருத்தாம்பிகை

அருள்புரியும் ஆகமேசுவரன்!

விருத்தாசலம் என்ற திருமுதுகுன்றம் கோயிலில் வேறு எந்தக் கோயிலிலும் காணக் கிடைக்காத ஆகமக் கோவில் அமைந்திருக்கிறது. ஆறுமுகமான பொருளாகிய குமரன் தன் தந்தையை ஆகம வடிவிலேயே கண்டு, இருபத்தெட்டு ஆகமங்களையும் சிவலிங்க வடிவமாக எழுந்தருளச் செய்து வழிபட்டாராம். ஒரு பக்கம் மூத்தவரான கணபதியும், இன்னொரு பக்கம் வள்ளி தெய்வானையுடன் முருகனும், இந்த ஆகமேசுவரர்களை வழிபடுகிறார்கள். சிவலிங்கங்களின் பின்னால் காமிகேசுரர், யோகேசுரர், காரணேசுரர் என்று ஆகமங்களின் பெயருடன் சேர்த்து எழுதப்பட்டிருக்கிறது.

ஞானக் கூத்த சிவப்ரகாச சுவாமிகள் விருத்தாசலபுராணம் இயற்றி ஈசனைப் போற்றியிருக்கிறார். பழமலை அந்தாதி முதலிய பல நூல்கள், விருத்தாசலத்தைப் பற்றி இயற்றப்பட்டுள்ளன.

மணிமுத்தாறு நதிக் கரையில் அமைந்திருக்கிறது கோயில். சுந்தர மூர்த்தி நாயனார் பொன் கேட்டுப் பாடிய தலம்.

"தோற்றுவித்த நான் முகனார் துஞ்சிய நாள், கடல் ஏழும்
வீற்று ஒன்றாய்க் கீழ்தாழ மேல் உயர்ந்து நின்றபதி!
நாற்றிசை என் நம்பிக்கு நம்பிக்கை கனகம் அளித்து
ஆற்றிலிட்டுத் திரு ஆரூர் குளத்து அளிக்கும் அரியபதி"


சுந்தரர் காலத்தில் மணிமுத்தாற்றில் "எத்திசையும் திரையேற மோதிக் கரைகளை மேல் முத்தி முத்தாறு" என்று பாடும்படியாக வெள்ளம் ஓடியிருக்கிறது.

இதை தெரியுமல்லவா? பரவையார் சிவனடியார்களுக்கு அமுது செய்விக்கப் பொருள் கேட்டார் கணவரை. சுந்தரர் தம்பிரான் தோழர் அல்லவா? முதலில் விருத்தாசலம்

ஆனந்தி

வந்தபோது, கிழவனையும் கிழவியை யும் பாடமாட்டேன் என்றவர், சிவபெருமான் அழைத்தவுடன் விருத்தாசலத்துக்கு வந்து பாடினார். சும்மா பாடிவிடவில்லை. "பொன் செய்த மேனியினீர்" என்று கொஞ்சம்

தெய்வத் தமிழ் நாட்டினிலே 19




• ஸ்ரீ பழமலை நாதர்

ஐஸ் வைத்துவிட்டு,

"உம்பரும் வானவரும் உடனே நிற்கவே எனக்குச்
செம்பொனைத் தந்தருளித் திகழும் முதுகுன்றமர்ந்தீர்
வம்பரும் குழலாள் பரவை இவள் வாடுகின்றாள்
எம்பெருமான் அருளீர் அடியேன் இட்டளம் கெடவே"

என்று பாடியதும், சிவபெருமான் பன்னிரண்டாயிரம் பொன் கொடுத்தாராம். "இதை எப்படி ஆரூர் வரை தூக்கிக் கொண்டு போவேன்?" என்று கேட்டார் சுந்தரர்.

"ஆற்றிலிட்டுக் குளத்தில் எடுத்துக் கொள்" என்று பகவானின் குரல் கேட்டது. கொடுத்த பொன்னில் கொஞ்சம் வெட்டி எடுத்துக் கொண்டு, மணி முத்தாற்றில் பொன் மூட்டையைப் போட்டு விட்டு, நிம்மதியாகக் கையை வீசி நடந்து சென்றார் சுந்தரர். வெட்டிக் கொண்டது எதற்குத் தெரியுமா? திருவாரூர் கமலாலயத்தில் மூழ்கி எடுக்கும் போது, மாற்றுக் குறையாமல் இருக்கிறதா என்று சோதிப்பதற்காக!



இந்தக் கோயிலிலும், பொன்னை இழைத்துக் காட்டிய மாற்றுரைத்த பிள்ளையார் சந்நிதி இருக்கிறது. பிறகு திருவாரூர் கமலாலயத்தில் பரவையாரும் இவரும் போய், பொன்னைக் கண்டெடுத்ததாக சுந்தரர் வரலாறு. கமலாலயக் கரையில் ஒரு மாற்றுரைத்த பிள்ளையார் இருப்பது அனைவரும் அறிந்ததே!

தலபுராணத்தில் பல கதைகள் இருக்கின்றன. குகை நமச்சிவாயர் என்று புகழ் பெற்ற ஞானியின் சீடரான குருநமச்சிவாயர், திருவண்ணாமலை யிலிருந்து சிதம்பரம் போகும் வழியில் பழமலைநாதரையும் பெரியநாயகி அம்மையையும் தரிசித்து விட்டு, இரவு சாப்பிடாமல் கோயிலில் படுத்துக் கொண்டு விட்டார். பசியால் தூக்கம் வரவில்லை.

"நன்றி புனையும் பெரிய நாயகி எனும் கிழத்தி
என்றும் சிவனார் இடக் கிழத்தி - நின்ற
நிலைக் கிழத்தி மேனி முழு நிலக் கிழத்தி
மலைக் கிழத்தி சோறு கொண்டு வா!"

என்று பெரிய நாயகி அம்மையை உணவு கொண்டு வரும்படி கேட்டார். பெரிய நாயகி கிழவியாக கையில் தடியை ஊன்றிக் கொண்டு வந்து, "என்னைக் கிழவி கிழவி என்றால் நான் உனக்கு எப்படி உணவு கொடுப்பேன்?" என்றாளாம். குருநமச்சிவாயர் பாடலை மாற்றி இளைய நாயகியாகப் பாடியதும், அம்மை உணவளித்தாளாம். கேட்க சுவாரஸ்யமாகத்தான் இருக்கிறது.

அம்மை தன்னை இளம் பெண்ணாகக் கருத வேண்டும் என்று ஆசைப்பட்டதால், தேவிக்கு இந்தக் கோவிலில் "இளைய நாயகி" என்ற பெயரில் இன்னொரு சந்நிதி இருக்கிறது. பாலாம்பிகை என்ற பெயரே இளைய நாயகியாக இருக்கலாம். பள்ளியறையின் பக்கத்தில் இளையநாயகியைத் தரிசிக்கலாம்.

பழமலைநாதர், விருத்த கிரீச்வரர் என்றெல்லாம் சொன்னாலும், மலையைக் காணவில்லை. ஒரு காலத்தில் மலை இருந்ததற்கு ஆதாரம் இருக்கிறதாம்.

மலை ஏறுவதற்குப் பதிலாக ஆழத்தில் இறங்கி, ஆழத்துப் பிள்ளையாரைத் தரிசிக்கிறோம். பிரும்மதேவர் கலங்கி நின்ற போது அவருடைய மயக்கத்தைத் தீர்த்து அறிவொளி பெறச் செய்தவர், ஆழமான ஆன்மிகத்தைப் போதிக்கும் பிள்ளையார்.

தலமரம் உள்ள பிராகாரத்தை வன்னியடிப் பிராகாரம் என்கிறார்கள். இந்தப் பிராகாரத்துக்கு வரும் கோபுரத்துக்குச் சிவநேசச் செல்வராக விளங்கிய சோழ மன்னர் பெயர் சூட்டி, கண்டராதித்த கோபுரம் என்று வழங்குகிறார்கள்.

பழமலை நாதர் கோவிலின் இன்னொரு சிறப்பு பிராகாரங்கள், கோபுரங்கள், நந்தி, தீர்த்தம், கொடி மரம் எல்லாம் ஐந்து ஐந்தாக அமைந்திருப்பது. கோபுர வாயிலில் ஐந்து படிகள் ஏறி உள்ளே செல்ல வேண்டும்.

மிகப் பெரிய நந்தியைக் காண்கிறோம். ஏகப்பட்ட கல்வெட்டுகள் உடைய கோயில். கோபுர வாசல் கதவுகளுக்கு இரு பக்கங்களிலும் பரத நாட்டியக் கரண

சிற்பங்கள் இருப்பதைக் கண்டு ஆச்சரியமாக இருந்தது.

பெரிய நாயகர் சந்நிதியில் அழகான உற்சவமூர்த்திகளைக் கண்டு மலைத்து நிற்கிறோம். பழமலைநாதர், பெரிய நாயகி, இளைய நாயகி, ஸோமாஸ்கந்தர் எல்லாரும் அருள் பார்வையுடன் அழகு பிம்பங்களாக மனம் கவர்கிறார்கள்.

ஆகமக்கோயிலில் உள்ளது போல ஏகாதசருத்ரர்களுக்கும் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்டு விளங்குகிறது. தலபுராணப் புத்தகத்தில் விச்வேச்வரன், மகாதேவன், திரியம்பகன், திரிபுராந்தகன், திரிகாக்னி காலன், காலாக்னிருத்ரன், நீலகண்டன், நித்யானந்தன், நிருத்யுநிசயன், ஸர்வேச்வரன், ஸதாசிவன் என்ற ஏகாதச ருத்ரர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. இந்த பிராகாரத்தில் மாற்றுரைத்த பிள்ளையாரைத் தரிசிக்கலாம்.

மேற்கு நோக்கி தரிசனம் தருகின்ற கால பைரவரின் தோற்றம், அபூர்வமான அழகோடு மாறுபட்டு விளங்குகிறது. கையில் வில் ஏந்தியிருக்கிறார்.

மாசிமகம் 'பெரு விழா' என்று புகழ் பெற்றிருக்கிறது. விபசித்து என்ற முனிவருக்கு, குபேரனுடைய தங்கை தன் அணிகலன்கள் அனைத்தையும் கொடுத்தாளாம். அவர் பெற்றுக் கொள்ள விரும்பவில்லை. பழமலை நாதர் கோயிலைப் புதுப்பித்து, கோயிலுக்குத் திருப்பணிகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டாளாம். வன்னி மரத்தில் ஆபரணங்களை வைத்து விட்டு, உரோமச முனிவரிடம் உபதேசம் பெற்ற பிறகு வன்னி மரத்துக்கு வந்தார். அது கற்பக விருக்ஷமாகி வேண்டிய பொருளையெல்லாம் வாரி வழங்கியது. வன்னி மரத்தில் இலைகளே பொன்னாகி, வேலை செய்தவர்களுக்குக் கூலியாக வழங்கப்பட்டதாம்.

அத்தன் முது குன்றைப்
பத்தியாகி நீர்
நித்தம் ஏத்துவீர்க்கு
உய்த்தல் செல்வமே

என்று ஞானசம்பந்தர் பாடி வைத்திருக்கிறார். பொன்னையும் பொருளையும் காட்டிலும், நிலையான ஞானச் செல்வத்தையும், மோனச் செல்வத்தையும் வீடுபேற்றையும் இந்த விருத்த கிரீசுவரன் வழங்க வல்லவன்!

(தொடரும்)

ஆத்தா அடித்து எழுப்பியது. முதலில் சத்தம் போட்டுத்தான் எழுப்பியது. நான்தான் எழுந்திருக்கவில்லை. நான் தான் வௌவால்களோடு கூட்டுச் சேர்ந்து, அதுக மாதிரியே தொங்கிக்கிட்டு விளையாடிக் கிட்டிருந்தேனே.

நான் கறுப்பாக (அட்டக் கறுப்பு) இருப்பதாலும் அதிகம் பேசாமல் ஒதுங்கியே இருந்து வேடிக்கை பார்ப்ப தாலும், ஆத்தா என்னை 'வல்வால்பயலே' என்று அழைக்கிறதாம்.

அம்மாவுக்குக் கோபம் வந்தாலும், ஆத்தாவிடம் ஒன்றும் பேசாமல் என்னை அழைத்து அருகில் வைத்துக் கொண்டு, "மூத்தது தான் பொண் ணாப் போச்சு. இவனாச்சும் நமக்குக் கஞ்சி ஊத்த பையனாப் பொறந்தானே. ஹும். ஆனை கறுத்தாலும் ஆயிரம் பொன்" என்று சொல்லி தலையைத் தடவும்.

ஆத்தாவுக்கும் என் மேல் கொள்ளைப் பிரியம். ஆண்டே வீட்டில் கிடைக்கும் தீனி களும் எப்பவாவது வரும். நல்ல பலகாரம் எல்லாம் எனக்குத்தான்.

அக்கா பொன்னம்மா, "யேய் யேய்"னு கெஞ்சும். நானும் பாவம்னு கொடுத்துடுவேன்.

ஆத்தா எங்க வீட்டில் ராவுலே மேலே தொங்கும் வௌவால்களை வேடிக் கைக் காட்டும். ஒரு முறை வயலுக்குப்



அ.சந்திரா தஞ்சை

வௌவால் பயல்!

போயிட்டு இரவு பொழுது சாய வரும்போது. ஒரே அளவுடன் கத்திக் கப்பல்கள் மாதிரி பறந்து போன வெளவால் கூட்டத்தைக் காண்பிச்சுது.

''அது எப்படி இரை தின்னும்?''னு ஆத்தாவைக் கேட்டேன். ''அதுவும் உன்னைப் போலத்தான், கூச்சப்பட்டுக்கிட்டே ஒதுங்கிச் சாப்பிடும்''னு சொல்லிச்சு.

ஆத்தா அதிலிருந்துதான் என்னை 'வவ்வால்பயலே!' என்று செல்லமா கூப்பிடுது. ஆனால் நிஜத்தில் என் பெயர் பள்ளியில் ராசேந்திரன். வீட்டில 'ராசா'னு கூப்பிடுவாங்க.

பள்ளிக்கு லீவு விட்டு விட்டாங்க. தினமும் கிடைக்கும் மதிய உணவு இல்லை. முன்னெல்லாம் அம்மாவும், ஆத்தாவும் வயல் களையெடுப்பு, நடவு வேலைக்குப் போவாங்க.

இப்போ ஆத்துல தண்ணீ வராம அது இல்லை. ஆண்டே வீட்டில் ரொம்ப செலவு பண்ணி, போர் எறக்கி மோட்டார் வைச்சாங்க. அதிலும் தண்ணீ வரலியாம்.

செலவு செய்து போர் போட்ட பலரின் நிலைமையும் இப்படித்தானாம். ஆத்துல தண்ணீ வந்தா எல்லாம் சரியாயிடும்.

'அதுதான் எப்பன்னு தெரியலியே'ன்னு ஆத்தா, அம்மா, அப்பா பேசிக்கிட்டாங்க.

ஆத்துல தண்ணீ வந்தா வாய்க்கால்லாம் தண்ணீ ஓடும். மதிய உணவு சாப்பிட்டுட்டு, கை



The following particulars regarding the ownership of 'KALKI' the Tamil Weekly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication	:	Chennai
2. Periodicity of Publication	:	Weekly
3. Name of Printer	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	Old No. 35, New No. 14, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020.
4. Name of Publisher	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	Old No. 35, New No. 14, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020.
5. Name of Editor	:	Seetha Ravi
Nationality	:	Indian
Address	:	'Mangala Ganesh', Second Floor, 15, IV Seaward Road, Valmiki Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041.

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital : **Bharathan Publications Private Limited, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.2004

K. Rajendran
Publisher

கழுவிட்டு வர்றேனு சார்கிட்ட சொல்லிட்டு, வாய்க்கால்ல ஆட்டம் போட்டுக் குளிச்சுட்டு வருவோம்.

மழை பெஞ்சாலாவது கிணறு வாய்க்கால்ல கொஞ்சம் தண்ணீ வரும். 'வானமும் நம்பளைப் பகைக்குதே'ன்னு ஆத்தா கண்ணு கலங்குது. அப்பா ஏர் உழுது சம்பாதிக்க வைச்சிருந்த எருமைக்கிடா ரெண்டில் ஒன்னை வித்து, அந்தப் பணத்தில் கொஞ்ச நாளு ஓடிச்சு. இன்னொரு கிடாவையும் வித்திருக்கலாம். அது இப்போ சரியான மேய்ச்சல் இல்லாமல் சீக்காய்க் கெடக்குது.

அப்பா திருப்பூரில் நல்ல வேலை கிடைக்கும்னு சுந்து வட்டிக்குப் பணம் வாங்கிக்கிட்டுப் போய், அங்கும் வேலை இல்லைனு வந்துடுச்சு. அப்பாவோடு போனவன் வேலையில் சேர்ந்துவிட்டான்.

ஆத்தா, அப்பாவை எப்பவும், "தன் வீட்டுக் கதவை பிடுங்கி அடுத்த வீட்டில் போட்டுட்டு, விடியமுட்டும் நாயோட்டுபவனே"னு இட்டிக்கிட்டே இருக்கு.

"நல்ல சோறு, குழம்பு சாப்பிட்டு எவ்வளவு நாளாச்சு?" ஆத்தா ஏக்கமா சொல்லிச்சு. எங்களுக்கும், நல்ல அரிசிச் சோறு பொங்கி, மீன் குழம்பு வைச்சு சாப்பிட ஆசைதான்.

முன்னெல்லாம் அடிக்கடி வீட்டில் மீன் குழம்பு வைப்பாங்க. அப்பா ராவுல அரிக்கன் விளக்கு வெளிச்சத்தில் ஆத்துல வெட்டு மீன் பிடிக்கும். ஆத்தா சமைச்சு சுடச்சுடப் பரிமாறும். ஆஹா... அந்த ருசி!

இப்பதான், ஆறு இருந்த இடமெல்லாம், வெறும் மணலும், செடியுமா ஆயிடுச்சே!

குறுணைக் கஞ்சியும், மிளகாய்த் துவையலும் சேர்த்துச் சாப்பிட்டுட்டு எல்லாரும் படுத்தாச்சு.

"கதை சொல்லு"னு ஆத்தாவை நச்சரிச்சுக்கிட்டே தூங்கிட்டோம்.

வெளவால் விட்டத்தில் தொங்கிக்கிட்டே என்னைப் பார்த்துச் சிரிக்கிற மாதிரி கனவு கண்டு, அரை விழிப்பும், உறக்கமுமா இருந்திச்சு.

பக்கத்தில பேச்சுக்குரல். ஆத்தா, அப்பா, அம்மா. அவங்களுக்கு வீட்டுக் கவலை. ஏதோ பேசிக்கிட்டிருந்தாங்க.

திடீரென்று ஆத்தா, அப்பாவைக் கூப்பிட்டு, "ஏண்டா தம்பி, வெளவால் கறி சாப்பிட்டா நல்லாருக்குமா?" என்றது.

"என்னைக் கேக்கிறியே, இன்னவங்களைக் கேளு"ன்னது, அப்பா. அம்மா, "யாராச்சும் வெளவாலைச் சாப்பிடுவாங்களா?"ன்னது. ஆத்தா, "இல்லேடி, என் மவன் சின்னப் புள்ளையா இருக்கும் போது, அவனுக்கு ஓயாத கக்குவான் இருமல் வந்துச்சு. நம்மூர் வைத்தியரு வெளவால் உப்புக் கண்டம் போட்டு, ஆட்டு நெய்யில் வறுத்து நுணுக்கி சூரணத்தோடு குடுத்தார். இருமல் நின்னுப் போச்சு."

அப்பா, "சே, இந்தப் பஞ்சத்திலே அது மட்டும் தான் திங்கலை, விடும்மா"ன்னாரு.

நான் அப்படியே பயத்துல புடவையை இழுத்துப் போர்த்திக்கிட்டேன்.

காலையிலே ஆத்தா தான் "அடேய், வல்வாப்பயலே, எழுந்திருடா"னு அதட்டியும், ஒரு சின்ன அடி கொடுத்தும் எழுப்பிச்சு.

நான் ஆத்தாவைத் தள்ளிவிட்டு "போ... ஆத்தா! நானும் வெளவால்தானே? என்னையும் சாப்பிடுவியா?"ன்னு கேட்டேன் கோபத்துடன்.


"ஆத்தா, அட வக்கா மக்கா! இந்தத் தஞ்சாவூரான் சீமையிலே காவேரியம்மா பொய்ச்சுப் போயி, மண்ணும் மரமும் அழுகையிலே, நம்ம எம்மாத்திரண்டா சாமி! நாம குறுணைக் கஞ்சி குடிச்சாலே போதுண்டா ராசா! அப்படிச் சொல்லாத ராசா" என்று கதறிக்கிட்டே என்னை இழுத்து அணைச்சபடி தேம்பியது.

ஆஹா! ரூ.50,000 பரிசு!

தேர்தல் ஜுரம் வேகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. உங்கள் தேர்தல் ஜுரத்துக்கு ஆறுதலாக 'ஆஹா ரூ.10000/- வாரமொருதரம் பரிசுப் போட்டியை, தேர்தல் கேள்வி - பதில் போட்டிகளாக மாற்றி யிருக்கிறோம். உங்கள் உற்சாகத்துக்கும் ஆர்வத்துக்கும் டானிக்காக, பரிசுத் தொகையையும் ரூ. 50,000/- ஆக்கிவிட்டோம்.

தொடர்ந்து 5 வாரங்கள் வரும் தேர்தல் தொடர்பான கேள்விகளுக்கு பதில் எழுதி, ஐந்தாவது வாரம் மொத்தமாக அனுப்பி வையுங்கள். சரியான விடைகள் எழுதும் ஒரு வாசகருக்குப் பரிசு ரூ.50,000/- மற்ற நிபந்தனைகள் அதேதான்.

- எல்லாக் கேள்விகளுக்கும் சரியான பதில்கள் எழுதும் வாசகருக்கு ரூ.50,000/- பரிசு!
- நிறையப்பேர் சரியான விடைகளை எழுதியிருந்தால் பரிசு குலுக்கல் முறையில் தான்.
- ஆறுதல் பரிசு 50 பேருக்கு தலா ரூ. 100/-
- முதல் பரிசுத் தொகை வருமான வரி விதிமுறைகளுக்கு உட்பட்டது.



கல்கி வழங்கும் கலக்கல் குவிஸ் போட்டி



- உறையின் மேல் 'ஆஹா! ரூ.50,000' என்று கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டும்.
- போட்டி தொடர்பாக விசாரணைக்கு அனுமதியில்லை.
- ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.
- முடிவு தேதி ஐந்தாவது கூப்பனுடன் குறிப்பிடப்படும்.

தேர்தல் குவிஸ் போட்டி கூப்பன் - 1

1. கடைசியாகக் கலைக்கப்பட்டது சுதந்திர இந்தியாவின் .... வது லோக்சபா.
2. பிரதமர் வாஜ்பாய் போட்டியிடப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ள தொகுதி ....
3. தலைமைத் தேர்தல் ஆணையராகத் தற்போது பொறுப்பேற்றுள்ளவர் ....
4. லோக் சபா தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடத் தகுதி பெற முழுமையடைந்திருக்க வேண்டிய வயது ....
5. மிகச் சமீபத்தில் தேசியக் கட்சியொன்றில் உறுப்பினராகச் சேர்ந்த நேரு குடும்பத்து மழைத் தேவன் ....
6. தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள மொத்த தொகுதிகள் ....

பெயர் : ....

முகவரி : ....

....

....

கையொப்பம் : ....

ஆஹா! ரூ. 10,000 பரிசு!

குவிஸ் போட்டி (13) முடிவுகள்

இந்த வாரம் பரிசை வென்றவர்:

S. சரஸ்வதி,
CSN HOME
2/89A, மேலப்பனங்காடு,
வாகைக்குளம் (அஞ்சல்),
மதுரை - 625 017

பிடியுங்க பரிசை!



ஆறுதல் பரிசு ரூ.100/- வென்றவர்கள்:

1. என். முரளி, பொள்ளாச்சி,
2. ஆர். சாரதா, சென்னை -36
3. ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன் கோட்டை
4. விஜயா கிருஷ்ணமூர்த்தி, கே.கே.நகர்
5. ந. ஜெயவேணி, வாலாஜா நகரம்
6. எம். குமாரசாமி, ராணிப்பேட்டை
7. எல். கானிமுத்து, குறுஞ்சேரி
8. சியாமளா ராஜசேகர், சென்னை - 13
9. ப. ராமகிருஷ்ணன், காயக்காடு
10. வி.என். கோபால், மடிப்பாக்கம்
11. எம். சாம்பமூர்த்தி, சங்கரன்பாளையம்
12. ஜி. கலாவதி, சர்க்கார்பதி
13. எஸ். விஜயலக்ஷ்மி, ஆதம்பாக்கம்
14. இந்திரா சோமநாதன், விஜயநகர்
15. பி. ஜெயப்பிரகாஷ், சேத்துமடை
16. பி. செல்வராஜன், பொள்ளாச்சி,
17. ஏ. ஞான பாஸ்கரன், நெல்லிக்குப்பம்
18. என். ஆனந்தி, அனைப்பட்டி
19. டி. பரிமளம், பொள்ளாச்சி
20. எஸ். அகிலாண்டேஸ்வரி, சென்னை - 87

குவிஸ் போட்டி (13)க்கான விடைகள்:

1. இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் புதுக்கவிதையில் தொடராக எழுதிய தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர் **கவிஞர் வாலி.**
2. அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கான உயர்நீதி மன்றம் உள்ள இடம் **கொல்கத்தா.**
3. மீசையில்லாத சீட்டுக்கட்டு ராஜா **ஆட்டின் ராஜா.**
4. கதாநாயகனே இல்லாத முதல் தமிழ்த் திரைப்படம் **ஔவையார்.**
5. எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் இந்தியப் பெண்மணி **பச்சேந்திரி பால்.**
6. அறிஞர் அண்ணாவுக்கு தென்னாட்டு பெர்னாட்ஷா என்ற பட்டத்தை வழங்கியவர் **அமரர் கல்கி**

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள்!

வாழ்த்துகள்

காலா... காதா...?

✉ 'இதோ ஓர் அக்னி ஏவு கணை' மார்க் வாங்கலாம் வாங்க - 7 கட்டுரையில் 'காதுக்கு செருப்பு வாங்க ஒரு மணி நேரம் செல வழிக்கும் நாம்' என குறிப் பிடப்பட்டுள்ளது. காலுக்கு செருப்பு வாங்கத்தான் நான் கேள்விப்பட்டிருக் கிறேன். காதுக்குமா?

சென்னை - 116,
கே. துரைராஜ்.

மௌனமாய்ப் படர்ந்தது

✉ தி. பழனிவேலின் 'நினை வெல்லாம் நிவேதா' கதை யில், பிரிவின் ஆழமான பாதிப்பை இரக்க இய லாத மனத்தின் மௌனத் தேடல், கனமாக இறங்கி இதயத்தில் படர்ந்தது.

நாகமலை,
ப.கா. மணிமொழியன்.

சண்டித் தலைப்பு!

✉ 'சண்டியர் யாரையுமே பிடிக்காது' என்று பதில் சொல்லும் பேட்டிக்கு 'பிடித்த சண்டியர்' என்று தலைப்பா?

சென்னை - 14,
கவிஞர் அய்யாறு வாசுதேவன்

குளிர் வருடல்

✉ ஓய்வான நேரத்தில் அமைதியாக அமர்ந்து, குளிர்ச்சியான மில்க் ஷேக்கை ரசித்துக் குடிப் பது போல் 'நதியிலே நனையலாம்...' சிறுகதை மனத்தை வருடியது.

சென்னை - 78,
வி.எஸ். அனந்தராமன்.

யதார்த்த நடை!

✉ யாரிடமும் இரந்து பழக்கப்படாத தன்மையை தன் மகனின் வேலை பொருட்டு விட்டுக் கொடுத்து மன்றா டும் தந்தை கேரக்டரை, என். சொக்கனின் 'ராஜா வீட்டுக் கன்னுக்குட்டி' வெகு யதார்த்தமாகச் சித் திரித்திருந்தது!

நெய்வேலி - 3,
எஸ். இந்துமதி.



நச்!

✉ 'வாக்குறுதிகள் அல்ல; வாக்கு 'உதிரி' கள்!' என்று கூறிய தராசின் பதில் 'நச்'!

தூத்துக்குடி - 2,
எஸ். ராமசுப்பிரமணியன்.

புரியலையே!

✉ கவர் ஸ்டோரியில் ஜெ.வுக்குப் பாராட்டு, மறுபக்கம் தலையங்கத்தில் பட்ஜெட் பற்றி விளாசல். உம்ம கேரக் டரையே புரிஞ்சுக்க முடியவில்லையே!

ஈரோடு - 2,
ரேவதிப்ரியன்.

மாட்டோம்... மாட்டோம்

✉ தேர்தல் வரவு செலவுத் திட்டத் தில்கூட, பணியாளர் பகைமை உணர்வை வெளிப்படுத்தியுள்ள மக ராசியை, உழைக்கும் வர்க்கம் தேர்தலில் மன்னிக்கத் தயாராக இல்லை.

திருவரங்கம்,
அ. சம்பத்.

உங்களுக்கும்...

✉ உணர்ச்சிக் குவியலாக படைக்கப்பட் டிருக்கும் 'தென்றல்' அருமையான திரைப் படம். இதுபோன்ற படங்களுக்குச் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கும் கல்கிக்கு டிஸ் டிங்ஷன்!

ஆலங்குளம்,
ரா. சாலமோன்.

ஸ்பெஷல் மூச்சு!

✉ ஆஸ்துமா பற்றிய மினி ஸ்பெஷலை ஒரே மூச்சாகப் படித்து முடித்ததும் நினைவில் வந்தது, அமரர் கல்கி ஒரு கட்டுரையில் எழு திய இவ்வரிதான்: - 'ஆஸ்துமாகூட இல்லாத ஒரு எழுத்தாளன் ஒரு எழுத்தாளனா என்ன?'

சென்னை - 78,
கே.எஸ். நாராயணன்.

முகவை ராஜா



காதலே... போ...போ...!

ஒரு வருஷத்துக்குப்பிறகு சுரேஷைச் சந்தித்தபோது அதிர்ந்து போனேன். எப்போதும் ஷேவ் செய்து கொண்டு டிப்டாப்பாக இருப்பவன், இன்று கசங்கிப் போன வேட்டியும், சட்டையுமா, முகத்தில் தாடியுடன்... என்னால் நம்பவே முடியவில்லை. திடீரென்று ஞாபகம் வந்தது. அவன் ஒரு அழகான பெண்ணைக் காதலித்தானே? அவனுடைய பெற்றோர் 'அந்தப் பெண்ணை மணந்து கொள்ளக்கூடாது, உன் அத்தை மகளைத்தான் மணந்து கொள்ள வேண்டும்' என்று அவன் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவிச்சாங்களோ? ஒருவேளை காதலித்த பெண்ணை மணந்து கொள்ள முடியாததால் தான், இந்த மாதிரி தாடி வளர்த்துக்கிட்டு அலையறானோ?

"ஏய் சுரேஷ்..."

"ஏய், நீயா! பார்த்து ரொம்ப நாளாச்சே... ஒரு வருஷம் இருக்குமா?" அவனுடைய பேச்சிலும் பழைய உற்சாகம் இல்லை. அவனைத் தேற்ற நினைத்தேன்.

"இதோ பார், இதுக்கெல்லாம் கவலைப் படக்கூடாது. கல்யாணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது. எதற்கும் பிராப்தம் வேணும். நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏது?"

அவன் சோகத்துடன் சிரித்தான்.

"நடந்ததை நினைச்சுக் கவலைப் படாதே. போனது போனதுதான்... வேறு ஒரு பெண்ணைப் பார்த்து..."

"என்னடா சொல்றே!? எனக்குக் கல்யாணம் ஆயிடுச்சுப்பா. உனக்கு வேலை கிடைச்சு சென்னைக்குப் போயிட்ட. உன் விலாசம் தெரியல. அதான் கல்யாணப் பத்திரிக்கையை அனுப்ப முடியலை..."

எனக்கு இப்போ விஷயம் புரிஞ்சுடுச்சு. பெற்றோர் விருப்பப்படி மாமா பெண்ணையே கட்டிக்கிட்டான் போலிருக்கு. அதுதான் காதலியை மறக்க முடியாமல், இப்படி தாடி வளர்த்துக் கொண்டு...

"சுரேஷ், உனக்குக் கல்யாணம் ஆயிடுச்சு. இனியும் உன் காதலியை நினைச்சுக்கிட்டு இப்படி தாடி வளர்த்துக்கிட்டு நிக்கிறது நல்லது இல்ல."

"அட போப்பா... நீ வேற! என் வயிற்றெரிச்சலைக் கிளப்பிக்கிட்டு..." என்றான் எரிச்சலுடன்,

"நான் பெத்தவங்க பேச்சைக் கேட்காமல் காதலிச்சவளையே கல்யாணம் பண்ணிக் கிட்டேன். காதலிக்கிறப்போ, என்னிடம் அன்பா இருந்தவ, இப்ப எல்லாத்துக்கும் எரிஞ்சு விழுறா, சண்டை போடறா. என் பெற்றோர் சொன்ன படியே என் மாமா பெண்ணைக் கல்யாணம் பண்ணியிருந்தா, இப்போ எவ்வளவோ நிம்மதியா இருந்திருப்பேன்" என்றான் தாடியைத் தடவியபடி! ○

ஹலோ, நீங்க சுகமா?

வஸந்த் செந்தில்



வலியைப் போக்கும் விஷ மீன்!

விடுதலைப் புலிகளும், புஜபல சினிமா நடிகர்களும் பிரபலப்படுத்தியதில், நீங்கள் எல்லோரும் சயனைட் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அந்த சயனைட் குப்பியைக் கடித்தால், நாக்கில் பட்டு, நரம்பின் வழியாக மேலேறுகிற விஷம் நிமிஷத்தில் மரணத்தை உண்டாகும். அந்த அளவுக்கு சயனைட் கடும்

7



விஷம்!

இந்த சயனைடை விடக் கடும் விஷம் ஒன்று, ஜப்பானில் கிடைக்கிற பஃபர் மீன் வகையில் இருக்கிறது. மீன்களைச் சுவையாகச் சாப்பிடுகிற ஜப்பானியர்கள், இந்த மீன் வகையிடம் மட்டும் சப்புக் கொட்டுவதில்லை. மிகத் திறமையான சமையல் நிபுணர்களால் மட்டுமே இந்த மீன், விருந்து நேரங்களில் சமைக்கப்படுகிறது. இந்த விஷப்





''காக்கிச் சட்டைக்கு மரியாதை கொடுக்க முதல்ல கத்துக்க...''

''மரியாதைக் குறைவா நான் என்ன சார் செஞ்சேன்?''

''மாமூல் வெட்டாமல் வெட்டியா பேசிக்கிட்டு நிக்கிறியே...!''

- சீர்காழி ரேவதி

பொருள்கள் பஃபர் வகை மீன்களின் கல்லீரல், சிறுநீரகம் உட்பட அவற்றின் சினை முட்டைகளிலும் இருக்கிறது. சமைக்கும் போது மீனின் இந்தப் பகுதிகளில் கத்தி பட்டுவிடாமல், ஜாக்கிரதையாக அறுக்கிறார்கள். சமீபத்தில் ஒரு சிலர் விளையாட்டுத்தனமாக அறுக்க, தவறுதலாகப்பட்ட கத்தி அடுத்த நொடியில் விஷத்தை வெளியேற்றிவிட்டது. அன்றைக்கு விருந்தில் சாப்பிட்ட பலருக்கு உடனே வலிப்பு வந்து, மயக்கம் வந்து, நுரையீரல்கள் காற்றுக்குத் தவிக்க காலமானார்கள். ஒரே நேரத்தில் விருந்தை மரணம் சாப்பிட்டுவிட்டது. ஜப்பான் மருத்துவர்கள் இந்தச் சம்பவத்தை 'Culinary version of Russian roulette' என்று வர்ணித்தார்கள்.

சயனைடை விடக் கொடிய விஷம் இது. சரி. எதற்காக இப்படி விஷத்தைப் பற்றி விலாவாரியாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டால், பதில் இருக்கிறது. இந்தக் கடும் விஷத்தால் ஒரு பயன் இருக்கிறது.

இந்த விஷத்திலிருந்து பிரிக்கப்பட்டு கிடைக்கும் டெட்ரடோடாக்ஸின் என்கிற கூட்டு வேதி மூலப் பொருள், ஹெராயின் போதைப் பழக்கத்திலிருப்பவர்களை மீட்டெடுக்கும் சிகிச்சையில் பயன்படுகிறது. இது போன்ற போதைப் பழக்கத்தில் இருக்கிறவர்கள் சட்டென்று நிறுத்தும்போது, 'வித்ட்ராயல் ஸின்ட்ரோம்' என்கிற நிறுத்தப் பின் விளைவுகள் ஏற்படும். இவற்றைச் சமாளிக்க, பஃபர் மீன் விஷம் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

இந்த ஆய்வை, கனடாவைச் சேர்ந்த ஒரு மருந்தியல் நிறுவனம் நடத்தியபோது, இந்த டெட்ரடோடாக்ஸின், கொடுக்கப்பட்ட நோயாளிகளுக்கு ஏற்கெனவே இருந்த வலியைச் கலபத்தில் போக்கியது. விழித்துக் கொண்ட கம்பெனிக்காரர்கள், இந்த டாக்ஸினை வலி நிவாரணியாகப் பயன்படுத்த முடியுமா என்று சோதிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

அவர்களுக்கு அடித்தது ஜாக்பாட்! ஆம். இந்த டெட்ரடோடாக்ஸின் மருந்து கேன்ஸர் நோயாளிகளுக்கு இருக்கும் கடும் வலியை உடனே போக்குகிறது என்று கண்டுபிடித்துவிட்டார்கள்.

கேன்ஸர் நோயாளிகள் பலர் கடும் உடல் வலியால் துன்பப்படுகிறார்கள் என்பதை நீங்கள் அறிந்திருக்கக் கூடும். இப்போது இவர்களுக்கு இந்த வலிகளுக்காக மார்ஃபின் என்ற மருந்து கொடுக்கப்படுகிறது. வலி சுமாராகத்தான் குறைகிறது. ஆனால், டெட்ரடோடாக்ஸின் மார்ஃபினைவிட 3200 மடங்கு சக்தி கொண்டது. வலி பஞ்சாகப் பறந்துவிடுகிறது.

கம்பெனியின் முதல் கட்ட ஆய்வின் போது உடனிருந்த டாக்டர் எட்வர்ட் ஸெல்லர்ஸ் என்கிற மருந்தியல் பேராசிரியர், ''ஏதோ மந்திரம் போட்டதுபோல கேன்ஸர் நோயாளிகள் வலியிலிருந்து விடுபட்டு நிஜப் புன்னகை பூக்கிறார்கள்'' என்று குறிப்பிட்டார்.

இந்த மருந்து மார்ஃபினைவிட வேறு சில நல்ல விளைவுகளும் கொண்டிருக்கிறது. தொடர்ந்து மார்ஃபின் எடுத்துக் கொண்டால் நோயாளிகள் அதற்கு அடிமையாகிவிடுகிற சாத்தியம் உண்டு. இந்த மீன் வயிற்று மருந்தில் அந்த அபாயம் இல்லை.

கம்பெனி, ஆரம்ப ஆய்வுகளை மூட்டை கட்டி வைத்துவிட்டு, இந்த மீன் மருந்தை வலி நிவாரணியாகப் பயன்படுத்துகிற ஆய்வில் மூழ்கிவிட்டது. முழுப் பரிசோதனையும் முடிந்துவிட்டால், மருந்து மார்க்கெட்டுக்கு வந்து, கேன்ஸர் நோயாளிகளுக்குப் பெரும் நிம்மதி கொடுக்கும்.

'ஹெராயின் டி அடிக்ஷன் ஆய்வு அம்போவா?' என்று கேட்டால், கம்பெனிக்காரர்கள் சிரிக்கிறார்கள். என்ன செய்வது? அவர்கள் கண்ணில் பணம் காய்ச்சி மீன் பட்டுவிட்டதே!

(தொடரும்)

சிறுநீரக கோளாறுக்கு சிறந்தது தெய்வீக மூலிகை மருத்துவம்







சிறுநீரகம் என்பது நமது உடலின் மிக முக்கியமான ஒரு கழிவு நீக்க உறுப்பாகும். இது நம் உடலின் இடுப்புக்கு சற்று மேலே முதுகெலும்பின் இருபுறமும் பக்கத்திற்கு ஒன்றாக (இடது-வலது) அமைந்துள்ளது. இவைகள் ஒவ்வொன்றிலும் சுமார் 10 லட்சம் நெப்ரான்கள் என்னும் நுண்ணிய வடிகுழல்கள் உள்ளது. இந்த நெப்ரான்கள்தான் சிறுநீரகத்தில் பணிபுரியும் முக்கிய திசு ஆகும். உடலிலுள்ள இரத்தம், சிறுநீரகத்தில் உள்ள நெப்ரான்களின் வழியே செல்லும்போது, உடலுக்கு தேவையான நீர், திட, திரவ பொருட்களை உறிஞ்சிக் கொண்டு, தேவையற்ற கழிவுப் பொருட்களை சிறுநீர் குழாய் மூலம் சிறுநீராக வெளியேற்றப்படுகின்றன. சிறுநீரகங்கள் பழுதடையும்போது, யூரியா, கிரியேட்டினின், சோடியம், பொட்டாசியம், நீர் போன்ற கழிவுப் பொருட்கள் இரத்தத்தில் அதிகமாகின்றன. இதனை செயற்கை முறையில் இரத்த சுத்திகரிப்பு செய்தல் (Dialysis) மற்றும் சிறுநீரகமாற்று அறுவை சிகிச்சை (Kidney Transplantation) போன்றவை செய்யும் நிலை ஏற்பட்டு இறுதியில் உயிரிழக்கும் நிலை ஏற்படுகிறது.

சிறுநீரக கோளாறின் அறிகுறிகள் : இரத்த சோகையினால் வெளிறிப்போன முகம். 2 கைகால், முகம், வயிறு போன்றன வீங்கி முற்றிய நிலையில், நுரையீரல், இதயம் போன்ற முக்கிய உறுப்புகளை பாதிக்கின்றது. இதனால், மூச்சுத் திணறல், நெஞ்சுவலி, சளி, இருமல், பலஹீனம் போன்றவை தோன்றும். 3. சிறுநீர் போகும் போது எரிச்சல், மேலும் சிறுநீர் காப்பி கலரில் இருக்கும். அடிக்கடி இரவில் சிறுநீர் கழிக்க தோன்றும். 4. கண்ணின் கீழ் ஒரு சிறு பை போல் வீங்கி இருக்கும். 5. கீழ் முதுகில் வலியெடுக்கும். 6. யூரியா, கிரியேட்டினின், சோடியம், பொட்டாசியம் போன்றன இரத்தத்தில் அதிகமாக காணப்படும்.

சிறுநீரகம் செயல் இழப்பின் காரணங்கள் : சர்க்கரை வியாதிதான் முதல் முக்கிய காரணம் ஆகும். கட்டுப்படுத்தப்படாத உயர் இரத்த அழுத்தம், எய்ட்ஸ் நோய் கிருமியான எச்ஐவி வைரஸ் மற்றும் மஞ்சள் காமாலையின் வைரஸ் 'பி'யும் தொற்றாலும், இரத்த சோகை, சிறுநீரக கற்கள், மூட்டுக்கள், இணைப்புத் திசுக்களை, பாதிக்கும் நோய்களாலும் அதிக வயிற்றுப் போக்கு, வாந்தி, சிறுநீர் குழாயில் ஏற்படும் தசை சுருக்கம், கற்கள், கட்டிகள், புற்று நோய் போன்றவற்றாலும் அடைப்புகள் ஏற்பட்டு சிறுநீரகம் பழுதாகலாம். மேலும் மற்ற நோய்களுக்காக எடுக்கப்படும் இரசாயன மாத்திரைகள், அதிகமான மாமிச உணவுகள், பாம்பின் விஷம், தீக்காயம், மின்சார தாக்குதல் போன்றவற்றால் சிறுநீரகம் பாதிக்கலாம்.

இயற்கை உணவுகள் : தினம் ஏதேனும் ஒரு வேளை இயற்கை உணவாகிய பச்சையாக சாப்பிடும் காய்கள், பழங்கள், பழ ஜூஸ்கள், சாலட்ஸ் (ஷிணீறீணீபீ) போன்றவற்றை உணவாக உட்கொள்ள வேண்டும். காரணம் இதில் உள்ள சக்திகளை உடல் எளிதில் பெறுகின்றன. மேலும் கழிவுகள் குறைவு. ஆகவே கிட்னிக்கு வேலை பளு குறைகின்றது. கிட்னி நன்கு செயல்பட இயற்கை உணவு உதவுகிறது. குறிப்பாக அன்னாசி, பேரிட்சை, பப்பாளி, கொய்யா, அத்திபழம், நாவல், ஆரஞ்சு, மாதுளை, கேரட், வெண்டை, வெள்ளரிக்காய், பேரிக்காய், இளநீர், கரும்புசாறு, வாழைத்தண்டு, முள்ளங்கி போன்றன உட்கொள்ளலாம். மற்ற இரண்டு நேரம் சாதாரண சைவ உணவு உப்பில்லாமல் அரை வயிறு ஆகாரம் உட்கொள்ளலாம். மேலும் வாரம் ஒரு நாள் உண்ணா நோன்பும், தினம் காலை, மாலை எளிய உடற்பயிற்சிகளும் மேற்கொண்டால், சிறுநீரக பாதிப்பில் இருந்து படிப்படியாக முற்றிலும் குணம் பெறலாம்.

குறிப்பு : சென்னை, வேலூர், காஞ்சீபுரம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, பெங்களூர், ஒசூர், சேலம், ஈரோடு, கோவை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, நாமக்கல், தர்மபுரி, திருப்பூர், உடுமலைபேட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோயில், விருதுநகர், கரூர் போன்றநகரங்களில் வைத்தியரை நேரில் சந்திக்க முகாம் - விவரம் தெரிந்து கொள்ள மேலே உள்ள முகவரிக்கு கடிதம் (அ) போன் மூலம் தொடர்பு கொள்ளவும்.

தகவல் : டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 28 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய 'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்' என்றபுத்தகத்தினை பதிவுத் தபாலில் பெறரூ.100/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய 'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்' என்றபுத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.100/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.100/-ம் தலைமை முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.

தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, Dr.M.சிவசக்தி, S/o Dr.C.K.மாணிக்கவாசகம்

தலைமை முகவரி : அஞ்சல் பெட்டி 30, எண்.1, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்),
திருப்பத்தூர் (வ.ஆ.மா.) - 635 601 ✆ : 04179-220469, 222769 Cell : 944343867

சென்னை முகவரி : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்)
கெல்லீஸ், சென்னை - 10. ✆ : 044-26424285, 26427638 Cell : 9444161670

இரு முகவரிகளிலும் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1, மாலை 5 to 7

7 & 8ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road,	**9**ந் தேதி - பெங்களூர் : காலை 11 to மாலை 1 மணி வரை ஹோட்டல் பிரட்வே, (கல்பனா தியேட்டர் அருகில்)	**20 & 21**ந் தேதி - புதுடெல்லி : காலை 9 to இரவு 8 மணி வரை South Indian Hotel, 10211, Padam Singh Road,



பிடித்த ஆபரணம்

புன்னகையும், ஒரு டஜன் மோதிரமும்

படித்ததில் பிடித்தது

அப்துல் கலாமின் 'எழுச்சி தீபங்கள்'

டயட்

அப்படின்னா...?

பிடித்த பழமொழி

ஆளுக்கொரு நூல் கொடுத்தால் ஏழைக்கு ஒரு சட்டை கிடைக்கும்

ராசி

முதல் படமே தனுஷுடன்!

கடவுளிடம் பிரார்த்தனை

எனக்கு எது நல்லதோ அதைச் செய்!

நிறம்

கறுப்பு - வெள்ளை

அழகின் ரகசியம்

யோகா

படுக்கையறையில்

'லயன்கிங்' - சிம்பாவின் ஸ்டிக்கர்

'புதுக்கோட்டையிலிருந்து சரவணன்' - படத்தின் கதாநாயகி... செல்லப் பெயர் அப்பு. மாநிற மான், பாடத் தெரிந்த, ஆடத் தெரிந்த, ஃபேஷன் பூஞ்சோலை. தமிழ், தெலுங்கு, மலையாளம் என நிறைய வாய்ப்புகள் வந்து கொண்டிருக்க, எதை எடுப்பது எதை விடுப்பது என்று யோசித்துக் கொண்டிருக்கிறார் அழகாக!

ஆட்டோ கிராஃப்

'வளர்பிறையாக வளர வாழ்த்து' (கவிஞர் வைரமுத்துவிடம் பெற்றது)

அலர்ஜி

அண்ணன் மகன் வளர்க்கும் ஜார்ஜ் (மெகா சைஸ் நாய்)

பெருமை

பெண்ணாகப் பிறந்தது

பிடித்த இடம்

அம்மாவின் மடி






அபர்ணா

அரசியல் வலையில் சுய உதவிக் குழுக்கள்?



• போத்தி ரெட்டி



• கு.பஞ்சாட்சரம்

"கோடிகளில் பணம் புரளும் சுய உதவிக் குழுக்கள், ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது" என்று அதிர வைக்கிறார்கள் 'சிப்பா' தொண்டு நிறுவனத்தின் செயலாளர் கு. பஞ்சாட்சரமும், தாராள மயமாக்கப்பட்ட கூட்டுறவுச் செயல்பாட்டிற்கான குழுவின் அமைப்பாளரான போத்திரெட்டியும்!

"இன்றைக்கு ஒரு லட்சத்து நாற்பத்தைந்தாயிரம் சுய உதவிக் குழுக்கள் இருப்பதாக, மகளிர் மேம்பாட்டுக் கழக வெளியீடுகளும், நபார்டு வங்கி அறிக்கையும் சொல்லுது. இவங்களோட சேமிப்பு மட்டும் நானூறு கோடியைத் தாண்டியுள்ளதாகவும் சொல்றாங்க. இந்த வளர்ச்சி, அமைப்பு ரீதியா இருந்தாதான் மேலும் பயன்பெற முடியும்" என்கிறார் பஞ்சாட்சரம்.

சுய உதவிக் குழுக்கள் கூட்டுறவுக் கொள்கைகளின் அடிப்படையில் செயல்படுகின்றன.

"மத்திய அரசு தற்சார்ப்புக் கூட்டுறவுச் சட்டத்துக்காக மாதிரிச் சட்டம் ஒன்றை 1991ல் சிபாரிசு செய்தது. இதன் அடிப்படையில் முதல்ல ஆந்திர மாநிலத்துல செயல்படுத்தினாங்க. அப்புறம் மேலும் சில மாநிலங்கள்ல நடைமுறைப்படுத்தினாங்க. ஏற்கெனவே இருக்கிற கூட்டுறவு சட்டத்தில் சில குறைபாடுகள் இருக்கறதால, மத்திய அரசு சிபாரிசு செய்த சட்டத்தின் அடிப்படையில், ஒரு தற்சார்பு சட்ட நகல் வடிவை நாங்க (சிப்பா) தயாரிச்சோம். இதை பாரத ரத்னா சி.எஸ். இரண்டாயிரமாவது ஆண்டு வெளியிட்டாங்க. தமிழக அரசு நியமித்த உயர் மட்டக் குழு இதைப் பரிசீலித்து, சட்டமாக்கலாம்னு அரசுக்கு சிபாரிசு பண்ணினாங்க. ஆனா இன்னும் அது சட்டமாகலை. தமிழகத்தில் வருகின்ற அரசுகள் கொள்கை ரீதியா இந்தச் சட்டத்தை நிறைவேற்ற ஒப்புக் கொள்ளுது. ஆனா, நடைமுறைப்படுத்தறதுல அவங்களுக்கு என்ன கஷ்டம்னு தெரியலை" என்கிறார் போத்திரெட்டி.

"பல கிராமங்களில், சுய உதவிக் குழுக்கள் தொழில்கள் தொடங்கி செயல்பட்டு வருகின்றன. நாளைக்கு ஏதாவது இதுல பிரச்னை வந்தா, எதன் அடிப்படையில் அதைத் தீர்க்க முடியும்? பணம் தவறாகப் பயன்பட வாய்ப்பிருக்கு. ஒரு தலைமுறைக்குப் பிறகு அந்தப் பணத்தை, தொழிலை, கையாள அடுத்த தலைமுறை வரணும். இது எப்படி வரும்? அந்த செயல்பாடுகளுக்கு ஏற்ற சட்டம் மூலமாகத்தான் வர முடியும். அதனாலதான் நாங்கள் இந்தச் தற்சார்புக் கூட்டுறவுச் சட்டம் தேவைன்னு சொல்றோம்" என்கிறார் பஞ்சாட்சரம்!

அரசியல்வாதிகள் சுய உதவிக் குழுக்களை வளைத்துப் போடும் திட்டத்தைப் பற்றிக் கேட்டால், கொதிப்படைகிறார் இவர்!

"சுய உதவிக் குழுக்களை வோட்டு வங்கிகளாக மட்டுமே அரசுகள் பார்க்கக் கூடாது. அவங்க மக்களோட பங்குதாரர்கள். அதனாலதான் அவங்க சுயமாகச் செயல்படுகிற தற்சார்பு சட்டம் வேணும்னு சொல்றோம். அந்தச் சட்டம் வந்தா, எந்த அரசியல் தலையீடும் சுய உதவிக் குழுக்களுக்குள்ளப் போக முடியாது. கொள்கை ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டத்தைக் கொண்டு வந்து, மக்கள் நம்பிக்கையைப் பெற உதவறதுதானே அரசு செய்ய வேண்டிய வேலை?" என்கிறார் பஞ்சாட்சரம்!

— அப்பு



நாளைய நாட்களை சற்றும் பிசகின்றி சொல்லும் கலை

ஜோதிடப்பயிற்சி

(தபால் வழி போதனா முறை)

நாளைய வாழ்வு எத்தகையது என்று எண்ணியும் பார்க்க இயலாநிலையை இந்த கிரகசார ஆராய்ச்சிதான் தகர்த்தெறிந்து நாளைய நாட்களை அப்படியே கண்டறிந்து அவரவர் வாழ்வில் தரம், தனநிறைவு, தன்நிகரில்லா உயர்வு என்ற வகையில் இன்ன நிலையில்தான் இவர் வாழ்வார் - இவர் இல்லறம் நல்லறம் ஆகும். சம்பாத்திய சாதனை புரிவார் - சாந்தி நிறைவான குடும்ப அமைப்பு கூட கோபுர மாட மாளிகை வாசம் என்ற வழியில் இனிதுற வாழ்வார் அல்லது எதிலும் முன்னேற்றமின்றி முடங்கிய நிலையில் எவரும் முகம் சுழிக்க வாழ்வார் என்றும் கூறும்படி கிரகசார அமைப்புக்கள் தான் கூர்மையாக சொல்லும் என்ற சாஸ்திரம் ஒன்றைத்தவிர விஞ்ஞானம் வளர்ந்த இந்த கலியுகத்திலுங்கூட வருங்காலத்தைக்கூறி ஒரு கணித நிலை கிரக ஆராய்ச்சி ஒன்றை தவிர வேறு தோன்றவில்லை.


எனவே இனிதான அரிதான அற்புதமான இக்கலையை அனைவரும் கற்று தனது வாழ்வின் தன்மையையும் கண்டறிந்து அதற்குத்தக்கதான பாதைகளை அமைத்திடில் அதிவிரைவில் தனக்கென ஏற்பட்ட வாழ்வை ஏற்று நடத்தலாம். பிறருக்கும் உற்ற யோசனை கூறலாம். தமிழ் மொழியில் இத்தனை எளிதான முறையில் இந்த அரிய இலக்கியத்தை இதுகாறும் எவரும் சொல்லவில்லை. 250 உதாரண ஜாதகங்களிட்டு எளிதாக பலன் கூறும் வழி முறைகளோடு விளக்கப்பட்டு இருக்கும். 63 பாடங்களில் ஜாதகம் எழுதும் முறை அதனில் முக்கிய பலன்களை பகுத்தெடுத்து கூர்ந்து ஆராய்ந்து உரிய நறுங்-காலங்களை கணக்கிடும் வழிமுறை அனைத்தும் எளிதாக புரிந்து உரிய சரியான பலனை பகுத்து சொல்லும் அளவிற்கு கூறிடப்பட்டு இருக்கும். முழுமையாக படித்து முடித்து 61,62,63 பாடங்களில் கொடுக்கப்பட்டு இருக்கும் வினாக்களுக்கு விடையீர்த்து அனுப்பின், அதனை பரிசீலித்து சான்றிதழும், "ஜோதிடக்கலைஞர்" என்ற பட்டமும் தருவோம்.

இதுகாறும் தமிழ் நாட்டில் மட்டுமின்றி தமிழினத்தார் எங்கெங்கு வாழ்கின்றனரோ அவர்கள் எல்லாம் ஆவல் கொண்டோர் இவ்வரிய கலையைப்பயின்று பெரிய ஜோதிட வித்வான்களாகவும் திகழ்கின்றனர். எனவே இவ்வரிய கலையை சரியான வழிமுறையில் எளிதான விளக்கங்களோடு கற்றுக்கொள்ள ஏற்ற வாய்ப்பு இதுவே என்று கூறலாம். ஏனெனில் ஜோதிட தந்தை என கூறப்படும் குப்தர் காலத்திய வராகமிகிரர் வழிவகையில் படித்து தேர்ச்சியுற்ற வம்சவழியினரால் விரிவாக தொகுத்தளிக்கப்பட்ட பாடங்கள். ஜாதகத்தை பார்த்தவுடனேயே சரியாக எழுதிடப்பட்டதா எனக்கண்டு பிடித்து உரிய பலன்களை உடனடியாக சொல்லும் அரிதான ஆற்றலைப்பெறும் மார்க்க வழிகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன.

பெண் இனத்தாரும் இக்கலையை கற்றுக் தேர்ச்சி பெற்று பெரும் நலம் கண்டு இருக்கின்றனர். எனவே அவர்களும் ஜாதக நகலுடன் மனு செய்து கொள்ளலாம். விரும்புவோர் ஜாதக நகலுடன் 14-04-2004 தேதி மாலைக்குள் ஜோதிடம் பயில விரும்புகின்றேன் என எழுதி அனுப்புக.

முக்கிய குறிப்பு: மனுச்செய்வோர் நிச்சயமாக மதுபானம் அருந்தும் பழக்கம் அல்லது புகைபிடிக்கும் பழக்கம் அல்லது பொடி, புகையிலை போடும் தீய பழக்க மற்றவராக இருக்க வேண்டும். இத்தீயப்பழக்கங்கள் இருப்பின் விண்ணப்பிக்க வேண்டாம்.

எமது ஆசிகள்.



பிரபல ஜோதிடர், ஜோதிட ஆசிரியர், இராஜயோக பயிற்சியாளர்

ஸ்ரீமத் ஜெயவீர தேவா, யோகி

தபால் பெட்டி எண்: 55

பிளாட்எண்:204, அண்ணாநகர் மதுரை–625 020 தமிழ்நாடு

(0452) 2533412 2650576



விடுமுறை பயிற்சி.

PEACEFUL

Pondicherry

Give time a break.

அமைதியான பாண்டிச்சேரியை அனுபவியுங்கள். ஆயாசமில்லாமல் சுலபமாக ஓய்வெடுப்பது எப்படி என்று புரிந்து கொள்ளுங்கள்.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்: பாண்டிச்சேரி சுற்றுலா: தொலைபேசி: 91-413-2334575/2333590/2330532. பேக்ஸ்: 91-413-2330532. இ-மெயில்: e_ptdc@sify.com இணைய தளம்: www.tourisminpondicherry.com

McCANN/PT/11-03

மார்ச்.7-2004

மினி கல்கி





கௌரவ ஆலோசகர்கள்...

டாக்டர் கே.ஸ்ரீஸ்ரீதர்

டாக்டர் எஸ்.அஸோக்

டாக்டர் எல்.மகாதேவன்

சவேரா ஹோட்டல்ஸ் நீனா ரெட்டி

வழக்கறிஞர் கே.சுமதி

ஓவியர் மருது

டாக்டர் இரா.அன்புமணி

பேராசிரியர் கு.ஞானசம்பந்தம்

டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன்





களிப்பூட்டும் உடற்பயிற்சி

ஒரு காலத்துல, கட்டுப்பெட்டி நகரமா இருந்த சென்னையிலே கூட, வீதிக்கு வீதி ஜிம், ஹெல்த் கிளப், ஃபிட்னெஸ் ஸ்டுடியோனு ஏகப்பட்டது ஆரம்பிச்சுட்டாங்க. வயசு வித்தியாசமே இல்லாம, பன்னிரண்டிலிருந்து எழுபது வரை, 'ஜிங்ஜிங்குனு உடல் குறையுது. ஆஹா... இப்ப நல்ல ஹெல்த் இருக்குது'னு ஜிம்களில் உறுப்பினர்களாயிடறாங்க. களிப்பூட்டும் உடற்பயிற்சிகள் பற்றியும், அது தரும் கணக்கில்லாத பலன்கள் பற்றியும், சென்னை சி.பி. ராமசாமி சாலையில் உள்ள 'டைமன்ஷன்ஸ் ஹெல்த் அண்ட் ஃபிட்னெஸ் ஸ்டுடியோ' உரிமையாளர் தீபக் ஸ்வாமிநாதனிடம் விவரம் சேகரித்தோம்.


"நிறைய உழைப்பு, நிறையப் பணம், நிறைய சாதனை, நிறைய திருப்தி, நிறைய ஆரோக்கியம்' - இதுதான் இன்றைய நியோ ரிச் மனிதர்களின் வாழ்க்கைக் கோட்பாடு. பணமும் ஆரோக்கியமும் இருந்தால்தான் வாழ்க்கையை ரசிக்க முடியும். அதனால் 'ஃபிட்னெஸ் வர்க்அவுட்ஸ்' என்பது மேலைநாடு களில் தீவிர வெறியாகவே உள்ளது. சமீப காலமாக, சென்னை நகரமும் ஆரோக்கிய விஷயத்தில் மிகுந்த விழிப்புணர்வு கொண்டு விட்டது.

முன்பெல்லாம் சினிமா நட்சத்திரங்களும், கல்லூரி மாணவர் களும் மட்டுமே முற்றுகையிட்டுக் கொண்டிருந்த ஜிம், தற்போது சகலரும் நாடும் இடமாகி விட்டது. காரணம், எல்லாருமே ஃபிட்னெஸ் கான்ஷியஸ் ஆகி விட்டதுதான்!" என்கிறார் தீபக்.


எட்டாயிரம் சதுர அடியில், கிரானைட் மினுமினுப்பில், நட்சத்திர ஓட்டல் போல இருக்கிறது 'டைமன்ஷன்ஸ்'. "தென்னிந்தியாவிலேயே பெரிய, நவீன ஃபிட்னெஸ் ஸ்டுடியோ இது! ஆரம்பிச்சு பத்து மாசம்தான் ஆச்சு. ஆனாலும் மிகப் பிரமாதமான வரவேற்பு கிடைத்துள்ளது. குறிப்பாக பெண்களிடமிருந்து" என்கிறார் மேரி ஃப்ரீடா. இவர் பெண்களுக்கான பயிற்சியாளர்.

வெள்ளிக்கிழமைதோறும், இலவசமாக ஏதாவது ஒரு ஹெல்த் டிரிங்க் கொடுத்து உறுப்பினர்களை உபசரிப்பது வழக்கமாம்! பீட்ரூட் எக்ஸ்டஸி, எலுமிச்சை, தர்பூசணி சாறு, வாழைத்தண்டுச் சாறு கலந்த பிண்டிபாணியம் என வெரைட்டியாகத் தந்து அசத்துகிறார் டயட்டீஷியன் சுனிதா.

"இங்கு வரும் இளைஞர்கள் எல்லாரும் நடிகர் விக்ரம் போல ட்ரிம்மாக உடம்பு ஆகணும் என்று ஆசைப்படுகிறார்கள். இளம்பெண்களுக்கோ



ரம்யா கிருஷ்ணன் போல ஸ்லிம்மாக இருக்க ஆசை. அதுக்குத்தானே நாங்க இருக்கிறோம். கஷ்டப்பட்டால் முடியாதது எதுவுமே இல்லை" என்கிறார்கள் பயிற்சியாளர்கள்



தினகர், சரவணன், சார்லஸ்!

எடைக் குறைப்பு

ஜிம்முக்கு வருகின்றவர்களில் எழுபது சதவிகிதம் எடையைக் குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள்தான்.

பத்து கிலோ உப்பு மூட்டையைத் தோளில் சுமந்து கிட்டே நடக்கும் போது, எவ்வளவு சிரமமாக இருக்கு? அதையே இறக்கி வைச்சதும், அப்பாடானு இருக்கு இல்லையா? அது மாதிரிதான்.

உடல் எடையைக் குறைச்ச உடனேயே, ரொம்ப இலகுவா இருப்பீங்க! மனசும் உற்சாகமா இருக்கும்.

பவுண்டு கணக்கில் எடை குறையக் குறைய, எனர்ஜி லெவல் ஏறும். எனர்ஜி லெவல் ஏறினால் வாழ்க்கைத்தரம்

மினி கல்கி




உயரும். மருந்துக் கடைக்கும் டாக்டருக்கும் தரும் பணம் குறையும். இந்த ஹை லெவல் எனர்ஜியை வெள்ளித் தட்டில் வைத்து யாரும் தர மாட்டார்கள். நீங்கள்தான் முயற்சி செய்து அடையணும்.

டி.வி. பார்த்துக்கிட்டு, எதையாவது கொறிச்சுக்கிட்டு, கையைக் காலை அசைக்காமல், அப்படியே ஜாலியா சுத்திட்டு, இழுத்துப் போர்த்திக்கிட்டு தூங்கற வாழ்க்கையை பெரும்பான்மையோர் விரும்பறாங்க. அதை 'comfort zone'னு சொல்வோம். அதை விட்டு வெளியே வந்தால்தான் எடைக் குறைப்பைப் பற்றி நினைக்கவே முடியும்.

“ஆமாங்க... நீங்க சொல்றது சரி. எடையைக் குறைச்சே ஆகணும். இப்ப என்ன செய்யறது?”னு ஆலோசனை கேட்டீங்கன்னா, நீங்க அடுத்த பாராவுக்குப் போகலாம்.

ஸ்மார்ட் ஃபிட்னெஸ் புரோகிராம்

இந்தப் பயிற்சியை ஆரம்பிப்பவர் இளம் வயதுக்காரராக இருந்தால் 'ஜிம்'மில் தரப்படும் கவுன்சிலிங்கே போதும். முப்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால், கண்டிப்பாக மெடிக்கல் செக்-அப் செய்து கொள்ள வேண்டும். இரத்த அழுத்தம், நீரிழிவு, கொழுப்பு, ஈஸிஜி போன்ற பரிசோதனைகள் தேவை. மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ளும் காரணத்தை நீங்கள் சொன்னால், டாக்டரே, கை கொடுத்துப் பாராட்டுவார். அதோடு, எந்தவிதமான



உடற்பயிற்சிகளை நீங்கள் தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுரை சொல்வார்.

மெடிக்கல் செக்-அப் ரிப்போர்ட் ரெடி!

அதிக எடை தவிர, வேறு பிரச்னை இல்லை! மிக்க நன்று.



அருகிலிருக்கும் நல்ல ஜிம்மாகப் போய்ச் சேருங்கள்.

பி.பி. ஏறி, சர்க்கரை அளவும் அப்பர் லிமிட்டில் இருக்க, டாக்டர் உதட்டைப் பிதுக்குகிறாரா? மிக்க நன்று. உடனே ஏதாவது உடற்பயிற்சி சென்டருக்குப் போய்ச் சேருங்கள்.

சேரும் முன்பு, "இதைச் சிரமப்பட்டுச் செய்யாமல், ஜாலியாகச் செய்யப் போகிறேன். முழு விருப்பத்துடன், எடையைக் குறைத்தே ஆக வேண்டும் என்ற மன உறுதியுடன் தீவிரமாகச் செய்யப் போகிறேன்" என்று சங்கல்பம் செய்து கொள்ளுங்கள்.


தனியாகவா? அல்லது பார்ட்னருடனா? எப்படிச் செய்ய உங்களுக்கு விருப்பம்?

பார்ட்னருடன் என்றால் உங்களை விட அதிக ஆர்வமும்,

உந்துதலும் உள்ள நபர் தேவை! மிகுந்த கண்டிப்பான பர்ஸனல் ட்ரெயினர் வைத்துக் கொண்டாலும் பரவா யில்லை.


'பிகின்னர்ஸ்' எனப்படும் சுக்லாம் பரதரம் கேஸ்களுக்கு, காலை வேளை உடற்பயிற்சிதான் ஏற்றது. மார்னிங் எக்ஸர்சைஸ் புரோகிராமுக்கு வெகு எளிதாக ஸ்டிக் ஆகி றார்கள். மெடபாலிக் சார்ஜ் ஆகி, மென்டல் பூஸ்ட் கிடைப் பதும் இந்த வேளையில்தான்.

பீ ரெகுலர்! ''மழை வர்ற மாதிரி இருக்கே! டீவியிலே கிரிக்கெட் மேட்ச் இருக்கே'' என்றெல்லாம் நொண்டிச் சாக்கு தேடச் சொல்லும்




தான். அதையும் தாண்டி, எகிறிக் குதிச்சு ஓடிடுங்க!''

ஜிம்முக்குன்னு ஒரு டிரஸ் கோடு இருக்கு. டிராக் சூட், ஸ்போர்ட்ஸ் ஷூ, போன்றவற்றைத் தனியே ஒரு பையில் போட்டு, கண்ணில் படுமாறு வைத்திருக்கவும். ''என்னய்யா... இன்னிக்கு ஜிம்முக்குப் போகலையா?''ன்னு அதுவே கண் சிமிட்டிக் கேட்கும்.



அரிச்சுவடி கேஸ்களை, சேர்ந்த முதல் நாளே விதவிதமான இயந்திரங்களில் ஏற்றிவிட மாட்டார் கள். கவுன்சலிங் நடத்தி, டயட் பற்றி அறிவுரை தருவார்கள். ஃப்ளோர் எக்சர்சைஸ், ஸ்ட்ரெச்சஸ், ஏரோபிக்ஸ், வார்ம் அப் அண்ட் கூல் டவுன் போன்றவற்றைச் சொல்லித் தருவார்கள். பின்னர், உங்கள் வயது, தோற்றம், பிரச்னைக்கு

ஏற்ப ஸ்ட்ரெங்த் ட்ரெயினிங். கார்டியோ வாஸ்குலர் எக்சர்சைஸ்களில் குறிப்பிட்ட சில உடற்பயிற்சிகளைத் தேர்ந்தெடுத்து, அதை மட்டுமே மாற்றி மாற்றி செய்யச் சொல்வார்கள்.



"அடடே! ஒரே மாசத்துலே இரண்டு கிலோ எடை குறைஞ்சுடுச்சே!" என்ற பாராட்டுக் கிடைச்சதும், உச்சி முதல் உள்ளங்கால் வரை, சர்க்கியூட் ட்ரெயினிங் தருவார்கள். அப்புறம் ஸ்பிளிட் டிரெயினிங், கிராஸ் டிரெயினிங்னு அட்வான்ஸ் விஷயங்களும் இருக்கு.

எடையைக் குறைச்சுட்டீங்க. ஆனால் சதை எல்லாம் தொள தொளன்னு இருக்கே. அதுக்கு டோனிங் எக்ஸர்சைஸ், ஷேப் அப் எக்ஸர்சைஸ் தரப்படும். எந்த மிஷினில் எந்த விஷயத்தை, எப்படிச் செய்யணும், எவ்வளவு 'கவுண்ட்ஸ்' செய்யணும், அப்புறம் எவ்வளவு நிமிஷம் ஓய்வு எடுக்கணும்னு எல்லாம், பக்கத்திலிருக்கும் பயிற்சியாளர் சொல்லித் தருவார். நீங்க பாட்டுக்கு ஆர்வக் கோளாறுலே கன்னாபின்னான்னு செஞ்சுடக் கூடாது.

உதாரணத்துக்கு விமலா குமார்னு ஒரு பெண்மணி. வயது ஐம்பத்தாறு. கழுத்து வலி, இடுப்பு வலி கேஸ்! ஸ்பாண்டிலைடிஸ், ஸ்லிப் டிஸ்க் பிரச்னை! படியேறி நடக்கவே முடியாமல் வந்தாங்க. அவங்களுக்கு Knee warmup செஞ்சு, Knee strengthening செஞ்சு, low back strengthening தந்து, ஹைபர் எக்ஸ்டென்ஷன் என்கிற ஃப்ளோர் எக்ஸர்சைஸ் தந்த பிறகே, ட்ரெட் மில்லில் ஏற்றி விட்டோம். அதுவும் ஏழு நிமிஷத்துக்கு மட்டும்தான்! இப்ப ரெகுலரா வர்றாங்க.

மினி கல்கி



"இன்னும் கொஞ்சம் போடட்டுமா டியர்?"

வலியெல்லாம் போயே போச்!

ஜிம்மில் செய்யக் கூடாதவை


பயிற்சியாளர்களின் மேற்பார்வை இல்லாமல் எதையும் செய்யக் கூடாது.

இயந்திரங்களின் முழு இயக்கம் பற்றித் தெரியாமல் நீங்களாகவே இயக்கக் கூடாது.

உடற்பயிற்சி செய்யும் போது, மூச்சை எப்போது இழுக்கணும், எப்போது வெளியே விடணும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

தள்ளும் போதும், இழுக்கும் போதும் (positive phase) மூச்சை வெளியே விடணும். வெயிட்டை இறக்கும் போது (negative phase) மூச்சை உள்ளே இழுக்கணும்.

மூச்சை அடக்கக் கூடாது. அதிக நேரம் 'தம்' பிடித்தால், இரத்த அழுத்தம் ஏறும். அதிக வேகத்தினால் களைப்பும் மயக்கமும் வரலாம்.



வெட்கப்படக் கூடாது. எதையும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்து கொண்டு ஆரம்பியுங்கள். ஏன் என்ற கேள்வி இங்கு கேட்காமல் ஃபிட்னெஸ் இல்லை.


ஆர்வக் கோளாறு காரணமா, பயிற்சிகளை வேக வேகமாகச் செய்யக் கூடாது. நிதானமாக, மெள்ள மெள்ள கவுண்ட்




களை உயர்த்த வேண்டும்.

டயட் முக்கியம்

ஒரு மணி நேரம் கடுமையா உடற் பயிற்சி செஞ்சுட்டு, வர்ற வழியிலே ஒரு மசால் தோசை, கும்ப கோணம் டிகிரி காப்பி சாப்பிட்டு





வந்தீங்கன்னா... போச்சு! Watch your diet... இதுதான் இனிமே உங்க தாரக மந்திரம்!

அதுக்காக வெறும் வயிற்றில் 'மாங்கு மாங்கு'னு எக்சர்சைஸ் பண்றதும் தப்பு... ஒரு தம்ளர் கொழுப்புச்சத்து நீக்கப் பட்ட பால் சாப்பிடலாம். அது உடம்புக்கு க்விக் புரோட்டீன் தரும்.



"வாசனை பிடிச்சது போதும்; கையைக் கழுவுங்க!"

நிறைய வெந்நீர் சாப்பிடுங்க. இது சேர்த்து வைச்ச கலோரிகளை எரிச்சுடும்.

கேழ்வரகு கூழ், ஜவ்வரிசிக் கஞ்சி, சோயா பால், இளநீர், தர்பூசணி சாறு, எலுமிச்சைச் சாறு, இளம் மோர், இஞ்சியும் தேனும் கலந்த புதினாச் சாறு, தக்காளிச் சாறு, நீராகாரம், பச்சைப் பயிறு கஞ்சி, இப்படி நிறைய திரவ உணவாகச் சாப்பிடுங்க.

புரதம், மாவுச்சத்து, பழம், காய், கொட்டைகள், கடைசியாக எண்ணெய்.. இந்த வரிசையில் உங்கள் உணவு இருக்கட்டும். அப்போதுதான் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு சமமாக இருக்கும்.

சாப்பாட்டை நன்றாக முகர்ந்து பாருங்கள். வாசனையிலேயே பாதி திருப்தி வந்து விடும். எந்நேரமும் சமைத்துக் கொண்டும் அதையே நுகர்ந்து கொண்டிருக்கும் சமையல் தொழிலாளிகள், வெறும் மோர் சாதத்துடன் எழுந்து விடுவது இந்த 'Smell your food' விஷயத்தினால்தான்.

முதல் ரவுண்டிலேயே தட்டை நிரப்பிக் கொண்டு சாப்பிட்டு விடுங்கள். இரண்டாவது தடவை சாப்பிடும் பழக்கமே வேண்டாம்!




''இன்னும் ஒரு தோசை! சூடா... மொறு மொறுன்னு ஸ்பெஷலா போட்டுத் தர்றேன்'' என்று உங்கள் மனைவி கெஞ்சினால், ''உன்னோட அன்பை எல்லாம் சாப்பாட்டுலே காட்டாதே'' என்று படு கண்டிஷனாகச் சொல்லி விடுங்கள்.

நடுநிசியில் பசித்துத் தொலைத்து, தூக்கம் வராமல் தவிக்க நேரிடலாம். அப்போது ஃப்ரிஜ்ஜைத் திறந்து, கேக், சாக்லேட் என்று

தின்று வைக்காதீர்கள். கால் கிலோ திராட்சை, ஒரு தம்ளர் நீர் தயாராக இருக்கட்டும். அதை மட்டுமே சாப்பிட்டு, சின்ன 'ஏவ்'வுடன் சமர்த்தாகத் தூங்கிப் போகவும்.

நம்முடைய ரத்தம் 85% நீர் கொண்டது. மூளை, 75% நீர் கொண்டது. தசைகள் 70% நீர் கொண்டது. எனவே நிறைய நீர் குடியுங்கள். (அதுதான் கண்டபேறு வரப் போகுதே) குறைந்தபட்சம் பத்து தம்ளர்!

எக்காரணம் கொண்டும் பட்டினி கிடக்க வேண்டாம். இதனால் அடுத்தவேளை சாப்பாட்டை ஒரு வெட்டு வெட்டத் தோணும். ஒருநாள் சாப்பாட்டை ஆறு தடவைக்குப் பிரிச்சு, கொஞ்சம் கொஞ்சமா சாப்பிடுங்க. இதனாலே சர்க்கரை, கொழுப்பு இரண்டும் சீராக இருக்கும்.



என் சுவாசக் காற்றே!

மூச்சுப் பயிற்சி பற்றியும் 'ஜிம்'களில் சொல்லித் தருவார்கள். ஏனென்றால் எனர்ஜியை ஏற்றுவதில் மூச்சுக்குத்தான் முக்கியப் பங்கு. நீங்கள் கோபமோ, டென்ஷனோ ஆகும் போது, மூளை, பிராண வாயுவுக்காகத் தவிக்கிறது. அது கிடைக்காத பட்சத்தில் படபடப்பு, தலைவலி, மனச்சோர்வு இத்யாதி... ஏற்படுகிறது.

எனவே, ஆழ்ந்த மூச்சை இழுத்து மிக மிக நிதானமாக வெளியே விடும் பயிற்சியைத் தவறாது செய்யவும்.



மல்யுத்தம் – ஒரு விளையாட்டா?


- அமரர் கல்கி

நமது மதிப்புக்குரிய சகோதரி ஒருவர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

"கலையிலாகட்டும், அரசியலிலாகட்டும், மற்றும் பொது விஷயங்களிலாகட்டும், தங்கள் கருத்துக்களும் அபிப்பிராயங்களும் உன்னதமாகவும், மக்களுக்கு வழி காட்டியாகவும் அறிவூட்டுவனவாகவும் இருந்து வருகின்றன. பல பத்திரிகைகள், வாசகர்கள் மனத்தைக் கவர்ச்சிப்பதற்காக என்னென்னவோ உபாயங்களைத் தேடுகின்றன. போட்டிப் பந்தயம் முதல் குதிரைப் பந்தயம் வரை மனிதர்களுடைய பேராசை முதலிய கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டும் விஷயங்களைக் கொடுத்து வருகிறார்கள். ஆனால் 'கல்கி' அந்தவித முறைகளுக்கு இதுவரை போகாமலே வாசகர்களை மகிழ்வித்திருக்கிறது. ஆகையால் 'கல்கி'யில் ஏதாவது சிறிது தரம் குறைவதாகத் தோன்றினாலும் அது பெரிதும் வேதனை தருகிறது.

நான் குறிப்பிடுவது சென்ற 23ம் தேதி 'கல்கி'யில் வெளிவந்துள்ள மல்யுத்த விமர்சனம்தான். மல்யுத்தம் புராதன மகிமை வாய்ந்ததாக இருக்கலாம். பீமன், கடோத்கஜன்

சுத்தமான(?) காற்றை மூக்குப் பிடிக்க நிரப்பவும். அப்படி நிரப்பும் போது முதலில் வயிறு அமுங்க வேண்டும். பின்பு மார்பு உயர வேண்டும். மூச்சை விடும் போது மார்பு தழைந்து, வயிறு சுருங்க வேண்டும். காற்றை நிரப்பும் போது, 'Till you are full but not too full' என்ற விதியைக் கடைப்பிடிக்கவும். இழுத்த மூச்சை அரை விநாடிக்கு நிறுத்தி, பிறகு மெதுவாக விடவும்.



ஜிம் தேவையா?


'ஜிம்' எல்லாம் தேவையா? வீட்டிலேயே உடற்பயிற்சிகள் செய்ய முடியாதா? நியாயமான கேள்விதான்! ஆனால் வீட்டில் செய்யும் போது, ஏகப்பட்ட தடைகள் வரும். ஃபோன் அடிக்கும். அழைப்பு மணி ஒலிக்கும். யாராவது வருவார்கள்.

முதலியவர்கள் புகழ் பெற்ற வித்தையாக இருக்கலாம். அந்தக் காலத்து மல்யுத்தம் எப்படியோ நமக்குத் தெரியாது. ஆனால் இப்போது சென்னையில் ஆயிரக்கணக்கான ஜனங்களை ஆகர்ஷிக்கும் மல்யுத்தம் ஒரு ''விளையாட்டு'' என்று கூறுவது வேடிக்கைதான்!

ஒரு தடி மனிதனை மற்றொரு மாமிச மலை தன் முழு பளுவால் தாக்கி ஏறி, மிதித்து, வதைத்து, கடித்து, மூக்கில் விரல் விட்டு ஆட்டி, வாயில் கையை விட்டுக் கிழித்து, தலையைத் தேங்காய் உடைப்பது போல் உடைத்து, கழுத்தை நெறித்து, காலால் உதைத்து, நகத்தால் பிறாண்டி, இன்னும் சித்திரவதைகள் எத்தனையுண்டோ, அத்தனையும் கையாளுகிறான். இந்த மிருகத்தனமான நடவடிக்கையை ''ஒரு விளையாட்டு'' என்று கருதுவது எந்த நாகரீகத்துக்குப் பொருத்தம் என்று எனக்குப் புரியவில்லை. இந்த அருவருக்கத்தக்க கோரக் காட்சியைக் காண மனோதிடமுள்ள ஆண் சிங்கங்கள் போவது கூட அவ்வளவு அதிசயமில்லை. சேலை கட்டிய பெண் புலிகள் நூற்றுக் கணக்காகப் போய், ஆண்களோடு சரிநிகர் சமானமாக, கூச்சலிட்டு, எக்காளம் போட்டுக் குதிக்கிறார்களே, இந்த நாகரீகத்தைப் பற்றி எங்கே போய்ச் சொல்லி அழுவது?

இத்தகைய அநாகரீகமான, ராக்ஷஸ 'விளையாட்டையும்' அதைப் பார்க்கப் போன ரஸிக சிகாமணிகளையும் கண்டிப்பதை விட்டுத் தங்கள் பத்திரிகையில் அதைப் போற்றி ஒரு விமரிசனம் வந்திருப்பது விசனத்துடன் வியக்க வேண்டி

“ அடடா!
கம்ஃபோர்ட் ஸோன்
சுகமே தனி! ”



ரெகுலராகச் செய்ய முடியாமற் போகலாம். முக்கியமாக, நல்ல ட்ரெயினரின் மேற்பார்வையுடனும், டயட்டீஷியன் ஆலோசனையுடனும் செய்யப்பட்ட உடற்பயிற்சிகளின் ஃபீட்பேக்கும் கிடைக்காது.



யிருக்கிறது. சினிமாவில், டப்பா கீதத்தையும், கபந்த பிண்டத்தையும் சகிக்காத நாங்கள் எப்படி இந்தக் கீழ்த்தரமான மிருக விளையாட்டைப் பாராட்ட முடியும் என்பது விளங்கவில்லை...''

மேற்கண்ட கடிதத்திலுள்ள கருத்துக்களை நமது நேயர்களில் பலரும் ஆமோதிக்கக் கூடும். வேறு பலர் ஆட்சேபிக்கவுங் கூடும். பதினாயிரக் கணக்கான மக்கள் 'மல்யுத்தம் – ஒரு விளையாட்டு' என்று எண்ணிப் பணங் கொடுத்துப் போய்ப் பார்க்கிறார்கள் அல்லவா?

நம்மைப் பொறுத்தவரையில் மல்யுத்தம் ஒரு விளையாட்டாயிருந்தாலும் சரி, வினையாகவே இருந்தாலும் சரி, அது 'நமது நாட்டில் புராதன காலத்திலிருந்து வழி வழியாக வந்தது' என்ற காரணத்தினால் அதற்குக் கொஞ்சம் சலுகை காட்டவே விரும்புகிறோம்.

இராமர் முதலிய அவதார புருஷர்கள் 'மல்வார்ந்த தோளினாய்' என்று கவிஞர்களின் புகழுரையைப் பெற்றிருக்கிறார்கள்.

சிவபெருமான் அர்ச்சுனனோடு விளையாட்டாக மல்யுத்தம் செய்த கதை ''கிராதார் ஜுனீயம்'' என்னும் காவியமாக வரையப்பட்டிருக்கிறது.

சரித்திர காலத்தில், புகழ் பெற்ற காஞ்சி நரசிம்ம பல்லவ சக்கரவர்த்தி நாட்டிலுள்ள மல்லர்களையெல்லாம் தோற்



"

எதையோ
பிடிச்சு இழுத்தா, என்னவோ
விழுந்துடுச்சே!

"

''தொடை மட்டும் இளைக்கணும். இடுப்பு மட்டும் குறையணும்'' போன்ற பிரச்னைகளுக்கும், மூட்டுவலி, இடுப்பு வலி போன்ற வியாதிகளுக்கும், தரமான ஜிம்களில் முறையான பயிற்சி பெறுவதே சிறந்தது.

குறிப்பாக, பணம் கட்டி உறுப்பினர்

கடித்து 'மாமல்லன்' என்று விருதுப் பெயரைப் பெற்றி ருக்கிறார்.

மல்யுத்த விளையாட்டைப் பெண்களும் பார்த்துக் களிப்பது பற்றி நம் சகோதரி அருவருப்புடன் குறிப்பிட்டி ருக்கிறார் அல்லவா?

ஆனால் பரமசிவனுக்கும் அர்ச்சுனனுக்கும் நடந்த மல் யுத்தத்தைப் பார்வதி தேவி கண்டு களித்ததாகக் காவியத்தில் படிக்கிறோம்.


ஏன்? இடும்பனுக்கும் வீமனுக்கும் நடந்த மற்போரை இடும்பனுடைய சகோதரியான இடும்பி பார்த்துக் கொண்டி ருந்து, அதன் காரணமாகவே வீமன் பேரில் காதல் கொண்டு மாலையிட்டதாகவும் அறிகிறோம். (இந்தக் காட்சியையே நமது இந்த இதழ் அட்டையில் சித்திரித்திருக்கிறது.)

நமது நாளிலும் சில இடும்பி சகோதரிகள் மல் யுத்தத் தைப் பார்த்துக் களிக்க முன் வந்தால் அதைப் பற்றி நாம் ஏன் வியப்படைய வேண்டும்?

பல நூறு ஆண்டுக் காலம் அன்னிய ஆட்சியில் இருந்த காரணத்தினால் இந்த நாட்டு மக்களின் மனோதிடமும் தேக வலிமையும் குன்றியிருக்கின்றன. இந் நாட்டு ஆண் மக்கள் அவற்றைத் திரும்பப் பெற வேண்டியது அவசியம் என்பதைப் பற்றி இருவித அபிப்பிராயம் இருக்க முடியாது.

''ஒரு மோட்டார் பஸ்ஸில் இருபத்தைந்து பிரயாணிகள்

ஆகி விட்ட பிறகு, கட்டிய பணம் வீணாகப் போகுதே என்றாவது, தவறாது ஜிம்முக்குப் போகத் தோன்றும். பிறகு அதுவே ஆரோக்கியம் விதைக்கும் பழக்கமாகவும் உருவாகி விடும்.



அழகான உருவம் எதுக்கு?

'ஃபீல் குட்' உணர்வுக்காகத்தான். சுய மதிப்பு அதிகரிக்கும். வாழ்க்கையில் ஒரு பிடிப்பு வரும்.

புதிய தசை உருவாகும். பலம் கிடைக்கும். எலும்பு வலுப் பெறும். நோய் அண்டாது.

நோயில்லாத வாழ்க்கையில் எல்லாமே




வந்தார்கள்! மூன்று திருடர்கள் அவர்களை வழி மறித்து நிறுத்தினார்கள்; பிரயாணிகளிடமிருந்த பொருள்களைப் பறித்துக் கொண்டு ஓடிப் போனார்கள்'' என்பது போன்ற செய்திகளைப் படிக்கும் போதெல்லாம் இந்த நாட்டில் பிறந்தவர்கள் யாரும் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டே தீர வேண்டும்.

ஆளுக்கு ஆள் எதிர்த்து நின்று அநியாயங்களையும் அக்கிரமங்களையும் தடுப்பதற்குத் தேக திடமும் மனோ தைரியமும் இந்நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் பெற வேண்டியது அவசியம்.

அதற்கு இத்தகைய மல் யுத்த 'விளையாட்டு'களைப் பார்ப்பது ஓரளவு உதவியாயிருக்கக் கூடும் என்று நம்புகிறோம்.

(கல்கி 30.11.1952 இதழிலிருந்து)



சந்தோஷம்தான். 'Strong mind, in a strong body'னு கேள்விப்பட்டிருப்பீங்களே! உடம்பும் மனசும் உறுதியா இருக்கும் போது, வாழ்க்கையே புதிய நிறம் பெற்று விடும்.

வயசே தெரியாது. பாஸிடிவ்வான செல்ஃப் இமேஜ் இருக்கும் போது, தன்னம்பிக்கையோடு நிறைய சாதிக்கலாம்.

''ராமா... கிருஷ்ணானு அயோத்தியா மண்டபத்துக்குப் போற வயசுலே ஜிம்மா?''னு யாராவது கிண்டல் பண்ணினால், உடனே அவங்களோட 'டூ' விட்டுடுங்க! எல்லாம் வயித்தெரிச்சல் கேஸ்!

தொகுப்பு : **அனுராதா சேகர்**

அட்டை, படங்கள் : **ஸ்ரீஹரி**

கார்ட்டூன்ஸ் : **ராம்**

புக்பேங்க்

சாத்தியமே, சத்தியமே!







அற்புதங்களை நம்புவது கஷ்டம் - அவை நம் வாழ்விலோ, நமக்கு மிக நெருங்கியவர்கள் வாழ்விலோ நடக்கும்வரை! ஆனால், எல்லோர் வாழ்விலும் தினம் தினம் நடந்து விட்டால், அற்புதம் அற்புதமாய் இராது; அன்றாட நிகழ்ச்சியாகிவிடும்! - இப்படி சந்தேகத்துக்கும் பகுத்தறிவு சார்ந்த ஆய்வுகளுக்கும் இடையே ஊசலாடும் நமக்கு, அற்புதங்கள் சாத்தியமே, அற்புதங்கள் சத்தியமே என்று உணர்த்தும் அழகான சாட்சியங்கள் கொட்டிக் கிடக்கின்றன நமது பழைமையான இலக்கியங்களில்... அப்பரும், சம்பந்தரும், சுந்தரும், மாணிக்கவாசகரும் தங்கள் வாழ்க்கை அற்புதங்களை, பக்தி மீதூறும் பாடல்களாகப் பதிவு செய்துள்ளனர். அவர்களுக்குப் பிறகு தோன்றிய அபிராமி பட்டர், முத்துத் தாண்டவர், அருணகிரி நாதர் போன்றோரும்கூட, இறைவன் அருளை அவன் அற்புதங்கள் மூலம் உணர்ந்து பாடி வைத்திருக்கிறார்கள்.

இத்தகைய அற்புதங்கள் ஐம்பத்தொன்றையும், அவற்றுக்குரிய பாடல்களையும் சேர்ந்தாற்போல் படிக்கிறபோது நமக்குள் எழுகிற வியப்பும், நமது ஆன்மிக, இலக்கியச் செல்வங்கள் குறித்த பெருமிதமும் ஏற்படுகிறது. ஆடம்பரமில்லாத மொழியில், நடந்ததை நடந்தவாறு சுருக்கமாகச் சொல்லிப் போகிற யுக்தியில், நமது மனத்தைப் பாடலிலும் பக்தியிலும் லயிக்கச் செய்து விடுகிறார் தொகுப்பாளர் டாக்டர் சுதா சேஷய்யன். ஒவ்வொரு பாடல் குறிப்புக்கும் அடிக் குறிப்பாக, அற்புதம் நிகழ்ந்த ஸ்தலத்தை எவ்வாறு சென்றடையலாம் என்கிற பயணக் குறிப்பும் தந்திருப்பது, நம்மை அத்தலங்களுக்கு யாத்திரை புறப்படத் தூண்டுகிறது.

எல்லா ஊர்களுக்கும் நம்மால் போக இயலாதிருக்கலாம். ஆனால், இந்த அருமையான தொகுப்பை ஒரே மூச்சில் படித்து விடலாம். (கடைசி இரண்டு அற்புதங்கள், காஞ்சி பீடாதிபதிகள் தொடர்பான தற்கால அற்புதங்கள்) அற்புதங்கள் நம் வாழ்வில் நடக்காவிட்டால்தான் என்ன... அவற்றை நிகழ்த்தும் மஹாசக்தி நமக்குப் பாதுகாப்பாக என்றும் திகழ்வது சத்தியம் என்கிற நம்பிக்கையைப் பெறலாம், அல்லது புதுப்பித்துக் கொள்ளலாம்...



• நூல் வெளியீட்டு விழாவில்...

ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் யோசனையின் பேரில், வர்த்தமானன் பதிப்பகம், 'இந்து மத அற்புதங்கள் 51' என்ற இந்த நூலை சமீபத்தில் வெளியிட்டிருக்கிறது. காஞ்சி பீடாதிபதியும், ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளும் பங்கேற்ற அவ்விழாவில், 'இந்த நூற்றாண்டில் இந்து மதம்' (டாக்டர் சுதா சேஷய்யன் எழுதி, கல்கியில் தொடராக வெளிவந்தது), 'ஸ்ரீ ஜயேந்திரர் அருளுரைகள் 51' ஆகிய நூல்களும் அதே பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டன. ஆன்மிகத்திலும், பொருளுணர்ந்து பூஜை செய்வதிலும், பண்பட்ட வாழ்விலும் ஆர்வமுள்ள வாசகர்களுக்கு ஏற்ற நூல்கள் இவை.

- சீதா ரவி

வர்த்தமானன் பதிப்பகம்,
40, சரோஜினி தெரு, தியாகராய நகர்,
சென்னை - 600 017.

விலை:

இந்து மத அற்புதங்கள் 51	- ரூ. 35.00
ஸ்ரீ ஜயேந்திரர் அருளுரைகள் 51	- ரூ. 50.00
இந்த நூற்றாண்டில் இந்து மதம்	-ரூ. 35.00

மார்க் வாங்கலாம் வாங்க!

பேராசிரியர் ப.இராம்கோபால்

நினைவாற்றல் என்ற மெகா ஸீரியலை இயக்கும் இயக்குநர் திலகம், திருவாளர் மூளை அவர்கள். இறைவனின் படைப்பில் மிக அற்புதமான, அதிசயமான பொருள் மனித மூளை. நம் மூளையில் 1,000,000,000,000 ஸெல்கள் (நியூரான்கள்) உள்ளன. ஒவ்வொரு வினாடியும் இவற்றை நூற்றுக்கணக்கான தகவல்கள் தாக்குகின்றன. ஒவ்வொரு நியூரானும் ஒரு மிகப் பெரிய தொலைபேசி இணைப்பகம் போல் இயங்கி, இந்தத் தகவல்களை வகைப்படுத்தி, அவற்றைப் போய்ச் சேர வேண்டிய இடங்களுக்கு அனுப்பி வைக்கிறது. இது எவ்வாறு நிகழ்கிறது?

'A' என்ற தகவல் 'Z' என்ற நியூரானுக்கு வருகிறது. 'Z' இதைத் தன்னிடம் ஏற்கெனவே சேகரித்து வைக்கப்பட்டுள்ள தகவல்களுடன் ஒப்பிடுகிறது. 'A' தன்னிடமுள்ள தகவல்களுடன் ஒத்துப் போனால் 'Z' அதைத் தன்னிடமே வைத்துக் கொள்கிறது. அவ்வாறு இல்லையெனில், மீதமுள்ள (1,000,000,000,000 - 1) நியூரான்களைத் தொடர்பு கொண்டு, 'A' வை ஒத்த தகவல் எந்த நியூரானில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது என்று கண்டுபிடித்து, அங்கே 'A' வை அனுப்பி வைக்கிறது. எந்த நியூரானிலும் 'A' க்கு ஏற்ற தகவல் ஏற்கெனவே சேகரித்து வைக்கப்படவில்லையெனில், அது வெளியே தள்ளப்படும். தகவலைத் திரும்பத் திரும்ப - மீண்டும் மீண்டும் உள்ளே செலுத்துவதன் (Repetition) மூலம் அதற்கென்று ஒரு 'Post-box' ஐத் திறக்கச் செய்து, புதிய தகவலை அங்கு சேகரித்து வைக்குமாறு மூளைக்கு நம்மால் கட்டளை இட முடியும். இதைப் பற்றி விவரமாகப் பின்னால் சொல்கிறேன். ஒவ்வொரு நியூரானும் ஒரே சமயத்தில் குறைந்த பட்சம் 10,000 தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் சக்தி படைத்தது. அப்படியானால், 1,000,000, 'etc etc., நியூரான்கள் எவ்வளவு தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்று எண்ணிப் பாருங்கள்! இவை அனைத்தும் ஒரு வினாடிக்கும் குறைவான நேரத்திலேயே நடக்கின்றன.

மனித மூளையின் இந்த அபார சக்தியைப் பற்றி, மாஸ்கோ பல்கலைக் கழக பேராசிரியர் பீட்டர் கௌமிக் அனோகின் (இவர் 60 ஆண்டுகள் மூளையைப் பற்றி ஆராய்ச்சி செய்தவர்) இவ்வாறு குறிப்பிடுகிறார்: "மனித மூளையின் ஆற்றலை முழுமையாகப் பயன் படுத்தியவர் இதுவரை யாருமில்லை. இவ்வளவு சக்தி வாய்ந்த மூளை, நம் எல்லோருக்குமே இருக்கிறது. எனவே இனிமேல் யாரையும் 'மூளை இல்லாதவன்!' என்று திட்டாதீர்கள். 'மூளையைச் சரியாகப் பயன்படுத்தாதவன்' என்று வேண்டுமானால் திட்டுங்கள்!"



படித்தால் மட்டும்

நமது மூளையை வலது பக்க மூளை, இடது பக்க மூளை என்று இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு பகுதியும் ஒரு சில குறிப்பிட்ட செயல்களைச்

9

செய்வதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. வலது பக்க மூளை, கலை, கற்பனை, முப்பரிமாணம், வண்ணங்கள் பற்றிய உணர்வு, பொருள்களின் வடிவங்கள் பற்றிய அறிவு, பல்வேறு விஷயங்களுக்கிடையே உள்ள தொடர்புகள் பற்றி ஆராய்தல், அவற்றை ஒருங்கிணைத்தல் போன்ற செயல்களுக்குப் பொறுப்பேற்கிறது. இடது பக்க மூளை, சொற்கள், எண்கள், தர்க்கம், ஆராய்தல், பட்டியலிடுதல், கோர்வைப் படுத்துதல் ஆகிய செயல்களுக்குப் பொறுப்பு வகிக்கிறது.

ஓர் அழகான இளம் பெண்ணைப் பார்த்ததும் உங்கள் வலது பக்க மூளை இப்படிச் சொல்லும்: ஏய்! நீ ரொம்ப அழகாயிருக்கே! இடது பக்க மூளையோ, 'ஹோண்டாசிடியில் வந்து இறங்குகிறாளே! நல்ல பசையுள்ள பார்ட்டியோ? கல்யாணம் பண்ணிட்டா எத்தனை கோடி நமக்குக் கிடைக்கும்! இவளை எப்படிக் கணக்குப் பண்ணலாம்?' என்று கணக்குப் போடும்.

போதுமா?

வாழ்க்கையில் சிலர் ரொம்பப் பிராக்டிகலாக இருப்பார்கள். இவர்கள் தங்களுடைய இடதுபக்க மூளையை அதிகம் பயன்படுத்துகிறவர்கள். இன்னும் சிலர் சற்று வித்தியாசமான. சராசரி மனிதர்களுக்கு அவ்வளவாக ஆர்வம் இல்லாத விஷயங்களில் ஈடுபாடு கொண்டிருப்பார்கள். இவர்கள் தங்கள் வலது பக்க மூளையை அதிகமாகப் பயன்படுத்துவார்கள்.

வெற்றியாளர்களின் சரித்திரத்தைக் கொஞ்சம் புரட்டிப் பார்த்தால், அவர்கள் அனைவருமே தங்களுடைய மூளையின் இரண்டு பக்கங்களையுமே நன்றாகப் பயன்படுத்தியவர்கள் என்பது தெரியும். எனவே, நீங்களும் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமானால், தேர்வில் அதிக மதிப்பெண் பெற வேண்டுமானால், உங்கள் மூளையின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தக் கற்றுக் கொள்ளுங்கள்.

மூளையின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்திப் பாடங்களைப் படிக்கும் போது,

☆ கற்றல் ஓர் இனிய அனுபவமாக மாறும்.

☆ உங்கள் கற்பனை வளம் பல மடங்கு அதிகரிக்கும்.

☆ உங்களிடம் ஒளிந்திருக்கும் திறமைகள் வெளிப்படும்.

☆ உங்கள் நினைவாற்றல் மேம்படும்.

☆ உங்கள் சிந்தனைத் திறன் அதிகரிக்கும்.

☆ உங்கள் தன்னம்பிக்கை பெருகி, நீங்கள் புதிய மனிதனாக மலர்வீர்கள்.



சரி, மூளையின் இரண்டு பக்கங்களையும் எவ்வாறு உபயோகிப்பதாம்...? சொல்கிறேன்...

(தொடரும்)

தாயுமானவள்

வழியனுப்ப வந்திருந்தார் அப்பா.

"ரேணு. உடம்பைப் பார்த்துக்கம்மா. மாப்பிள்ளையை ரொம்பக் கேட்டதா சொல்லு. எல்லா என்கவுண்ட்டரிலும் அவர்தான் முன்னாலே நிக்கிறார் போலிருக்கு. என்னதான் போலீஸ் ஆபிசர்ன்னாலும் எச்சரிக்கையா இருக்கிறது நல்லது. பாதுகாப்பில்லாமல் எங்கேயும் போக வேண்டாம்னு சொல்லு. போனதும் போன் பண்ணு. குழந்தையை நல்லாப் பார்த்துக்கோ."

ரேணுகா பாசத்துடன் சிரித்தாள்.

"எல்லாரும் ஒண்ணாவே இருந்துக்கலாம், உங்கப்பாவை வரச் சொல்லுன்னு அவரும் எத்தனையோ தடவை சொல்லிட்டாரு. நீங்க சம்மதிக்கவே இல்லை. தனியா கிடந்து கஷ்டப்படறீங்க."

"ஏதோ பென்ஷன் வருது. என் ஒருத்தனுக்குப் போதாதா? ரிசர்வேஷன் பெட்டியாச்சே. வேறு யார் வருவாங்க. தெரியலியே?" அப்பா சுற்றும் முற்றும் பார்த்தார்.

சின்ன சூட்கேஸுடன் வேகமாக வந்து ஏறினாள் அந்த முதியவள். சராசரிக்கும் அதிகமான உயரம். அதற்கேற்ற உடல் வாகு. கழுத்தில் கனமான சங்கிலிகள். முகத்தில் கடுமை. சற்றும் நரைக்காத முடி. கிராமத்து ஸ்டைலில் அள்ளிச் செருகிய கொண்டை. கதர்ப்பட்டுச் சேலை.

"பெரியம்மா. சென்னைக்கா போறீங்க?"

அப்பா உடனே கேட்டு விட்டார்.

"ஆமாய்யா. நீங்க?"

"நான் வரலை. என் மக சென்னைக்குத்தான்



மார்ச் 8 மகளிர் தினம்


போறா. தனியா அனுப்பணுமேன்னு பார்த்தேன். உங்களை மாதிரி பெரியவங்க துணை கிடைச்சதில் சந்தோஷம்.''

கிழவி வெற்றிலைப் பெட்டியைத் திறந்து வெற்றிலை மடிக்கலானாள்.

''நான் என்ன சின்னப் பெண்ணாப்பா? நீங்க வேறே?'' ரேணுகா மெல்லிய குரலில் சிடுசிடுத்தாள். ரயில் கிளம்பிவிட்டது.

அப்பா ஆசையாகப் பேரனைக் கொஞ்சி விட்டு இறங்கிக் கொண்டார். கிழவி வெற்றிலைச்சாறை 'புளிச் புளிச்' என்று துப்பினாள்.

''பாட்டி, சென்னையில் யாரைப் பார்க்கப்



போறீங்க? யார் இருக்கா?'' ரேணுகா மெள்ள பேச்சை ஆரம்பித்தாள்.

''அது கிடக்கட்டும். உன் பெயர் என்னம்மா?''

''ரேணுகா.''

''புருஷன் என்ன பண்றார்?''

''அவர் போலீஸ் ஆபீசர் பாட்டி. போன மாசம் கூட என்கவுன்ட்டரில் ரௌடி வெள்ளை கண்ணுச்சாமிங் கிறவனை துணிச்சலா சுட்டுக் கொன் னாரே, அவர்தான், செல்வராஜ். பெரிய பெரிய ரௌடிங்களையெல்லாம் ஒழிச்சிக் கட்டி இருக்கார் பாட்டி. டி.வியில கூட காட்டினாங்களே.'' ரேணுகா பெருமையில் மலர்ந்தாள்.

''ஓஹோ!''

கிழவி சற்று நேரம் ஜன்னல் வழியே வெறித்தாள். குழந்தை அழவும், ரேணுகா பிளாஸ்கைத் திறந்தாள்.

''இப்படி குழந்தையைக் கொடு. மாவு கரைச்ச பிறகு தரேன்.''

லாகவமாகக் குழந்தையை எடுத்துக் கொஞ்சினாள்.


''எங்க காலத்திலெல்லாம் சேப்பை மாவுதான். ஆனா எம் புள்ளை அஞ்சு வயசு வரைக்கும் தாய்ப்பால்தான் குடிச் சான். ஊர்க்காரவுக எல்லாம் ரொம்ப கிண்டல் பண்ணுவாங்க. எஞ் செல்லம். என் ராசா...'' வெற்றிலை வாயால் முத்தம் கொடுத்தாள்.

''எம் புள்ளைக்கு இப்படி முத்தம் கொடுத்தேன்னா, என் வாய் வெத் திலையை நக்குவான். காரமா இருக்குமா? சிணுங்குவான். பாவிப்பயமவன்.'' கன்னத் தைக் கிள்ளினாள்.

''பையனுக்குத் தலைமுடி நிறைய இருக்கு. நல்லா விளக்கெண்ணெய் தேய்ம்மா. உச்சிக்குழியில் வைச்சு தேய்க்கணும். குளிப்பாட்டிய பிறகு சாம்பிராணி போடு. எம் புள்ளைக்கும் அப்படித்தான் செய் வேன்.''

வார்த்தைக்கு வார்த்தை 'எம்புள்ளை, எம்புள்ளை' என்கிறாள் கிழவி. மகன் மீது ரொம்பப் பாசம் போலிருக்கு. முகத்தில் கடுமை தெரிந்தாலும் பிரியமாகப் பேசு கிறாள். பெட்டியிலிருந்து இரண்டு பெரிய ஆப்பிள் பழங்களை எடுத்து, தோல் சீவிக் கொடுத்தாள்.

''சாப்பிடு தாயி. தாய்ப்பால் நல்லா



கிளப்பிவிட்ட கீஷா!



நடிச்சதோ, ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுனு ஒத்தைப்படம். அதிலேயே அகில உலக நட்சத்திரமாகி, ஆஸ்கர் பரிசுக்கும் பரிந்துரைக்கப்பட்டு, அமர்க்களம் செய்துவிட்டார் கீஷா! வயசு என்னங்கறீங்க! பதின்மூன்று!

நியூஸிலாந்து நாட்டின் பூர்வக்குடியான மோரி இன மக்களின் கலை, கலாசாரத்தை விளக்கும்படமான 'வேல் ரைடரி'ல் நடித்ததால்தான் இத்தனை பெயர், புகழ்! 'பைகீ' என்ற கேரக்டருக்காக, நியூஸிலாந்து நாட்டின் அனைத்துப் பள்ளிகளிலும் சல்லடை போட்டு, சலித்து எடுத்து, கீஷாவைக் கண்டு எடுத்தார்களாம்! ஆறு மில்லியன் டாலர் செலவில் படமெடுத்தார்கள். அள்ளியதோ நாற்பது மில்லியன் டாலர்!



- கே.ஏ. நமசிவாயம், நியூஸிலாந்து

ஊறும். இந்த மாவு மாயமெல்லாம் எதுக்குக் கொடுக்கணும்?'' ஆரஞ்சுப் பழம் வாங்கி, சுளை உரித்துக் கொடுத்தாள். இவ்வளவு பாசமான தாய்க்குப் பிறந்த மகன், ரொம்பக் கொடுத்து வைத்தவனாயிருக்க வேண்டும்.

திடீரென ரயில் குலுங்கியது. குழந்தையை மடியில் இறுகப் பிடித்தபடி எதிலோ மோதினாள் ரேணு. நெற்றிப் பொட்டில் இடியாய் இறங்கியது வலி. விழித்த போது கிழவியின் தோளில் சாய்ந்திருந்தாள். கிழவியின் மடியில் குழந்தை.

''ஒண்ணுமில்லை தாயி. லெவல் கிராசிங்கில் லாரி மீது இலேசா மோதிடிச்சாம் நம்ம ரயில். ஒரு பெட்டி இறங்கிடுச்சாம். இரண்டு, மூணு மணி நேரம் ஆவும் கிறாங்க. வேற பஸ்ஸில் அனுப்பறோம் கிறாங்க. உனக்கு நெத்தியில் இலேசா காயம். பிளாஸ்திரி போட்டிருக்கு. நல்ல வேளை, அடி இலேசா போச்சு. வா. அதோ பஸ் வந்தாச்சு!''

கிழவி, ரேணுவுக்கு ஹார்லிக்ஸ் கரைத்துக் கொடுத்தாள். குழந்தைக்குப் பால் கரைத்துக் கொடுத்தாள்.

''பெத்த தாய் மாதிரி கிடைச்சிங்க பாட்டி. கண்டிப்பா எங்க வீட்டுக்கு வரணும். இவன் அப்பாவுக்கு உங்களை அறிமுகப்படுத்தி வைக்கணும். உங்களை மாதிரி மனிதாபிமானம் உள்ளவங்களை அவருக்கு ரொம்பப் பிடிக்கும். இந்தாங்க என் அட்ரஸ்!'' பிரியத்துடன் அவளது கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

சென்னை வந்து விட்டது.

''அதோ அவர் வந்தாச்சு!''

''என்ன ரேணு, தகவல் தெரிஞ்சு ஓடி வரேன். உனக்கு ஒண்ணுமில்லையே!''

''இல்லீங்க, இதோ இந்தப் பாட்டி தான்...'' கிழவி வேகமாக இறங்கி மறைந்தாள்.

''ரேணு, இவங்க யார் தெரியுமா? போன மாசம் என்கவுண்ட்டரில் நான் சுட்ட ரௌடி வெள்ளை கண்ணுச்சாமியோட அம்மா!''

கடுகடுப்புடன் கணவன் சொல்லவும், பேச்சிழந்து நின்றாள் ரேணுகா. ⭘



மார்க் போடு தலைவா!

இந்த வாரம் பரீட்சைக்குத் தயாரா படு சுறுசுறுப்பா கிளம்பியிருக்காரு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன். (இந்த நிமிஷம் வரைக்கும் அவர்தான். காங்கிரஸ் பதவிகள் மாறுதலுக்கு உட்பட்டது!)

உங்க மதிப்பில் ஜி.கேவாசன் எப்படி?

'நறுக்'னு மார்க் போட்டு, இந்தப் பக்கத்தை அப்படியே கத்தரித்து அனுப்புங்க. உங்க முழு முகவரி அவசியம். கச்சிதமா மார்க் போட்டவங்களுக்கு, சினிமா டிக்கெட் தர்ற விஷயம்தான் உங்களுக்குத் தெரியுமே!

உறையின் மீது 'மாண்புமிகு டாப் டென் - 6' என்று குறிப்பிடவும்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசி தேதி: 15.3.2004

ஜி.கே... ஓ.கே?

	தகுதி	முழு மதிப்பெண்	வாசன் பெற்றது
1.	தலைமைப் பண்பு (லீடர்ஷிப் குவாலிடி, வசீகரம்)	10	
2.	முடிவெடுக்கும் திறன்	10	
3.	கறைபடாத கரங்கள்	10	
4.	அரசியல் சாணக்கியம்	10	
5.	மனித நேயம்	10	
6.	தொண்டர்களோடு தோழமை	10	
7.	மேடைப் பேச்சு	10	
8.	மாற்றுக் கட்சியினரை மதிக்கும் போக்கு	10	
9.	தனிமனித ஒழுக்கம்	10	
10.	நிர்வாகத் திறமை	10	
	மொத்தம்	100	

மாண்புமிகு டாப் டென் - 6

பெயர் ....

முகவரி ....

....

....

சிரித்து வாழ வேண்டும்

நாகேஷ்



30

"தூக்கி விடு முருகா!"


இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்து கொண்டிருந்த நாளில், ஒரு நாள் கோடம்பாக்கம் ரயில்வே கேட்டில் காத்துக் கொண்டு இருந்தேன். எனக்கு முன்னால் இரண்டு கார்கள் இருந்தன.

திடீரென்று ஏழெட்டு மாணவர்கள் கும்பலாக அங்கே வந்தார்கள். முதல் காரில் இருந்தவர்களிடம், ''ம்... சொல்லுங்க... இந்தி ஒழிக'' என்றார்கள்.

இன்னொரு மாணவன், உடனே கையில் தயாராக வைத்திருந்த பெரிய ஆணியால், காரின் பானெட்டில் 'இந்தி ஒழிக' என்று எழுத ஆரம்பித்தான். காரில் இருந்தவர் மிரண்டு போனார்.

அடுத்து நின்று கொண்டிருந்த காருக்கு வந்தார்கள். பின் சீட்டில் வெள்ளை உடை அணிந்திருந்த நபர், சுற்றி நடப்பதைக் கவனிக்காமல், தீவிரமாய் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார்.

"ம்... சொல்லுங்க... இந்தி ஒழிக!'' என்றார்கள். காரில் இருந்த நபர் தயங்குவதைப் பார்த்தவுடன், 'ம்... ஆணி எடுத்து பானெட்டுல எழுதுங்கடா' என்று தலைவன் குரல் கொடுத்த மறு விநாடியே, அந்த நபர்... "அப்படியெல்லாம் செஞ்சுடாதீங்கப்பா! இந்தி ஒழிகப்பா! நீங்கள்ளாம் இடத்தை காலி பண்ணுங்கப்பா!'' என்று சொல்ல, மாண வர்கள் நகர்ந்தனர்.



• ஏவி. மெய்யப்ப செட்டியார்

சமயோஜிதமாக மாணவர்களிடம் முரண்டு பிடிக்காமல், அதே சமயம் தமது சலிப்பையும் மிக நாகரிகமாக வெளிப்படுத்திய அந்த நபர் யார் தெரியுமா?

வேறு யாருமில்லை, ஏவி.மெய்யப்ப செட்டியார்தான்!

அடுத்து, என் காரை நோக்கி வந்த கும்பல், காரை நெருங்கும் முன்பாகவே, என் காரின் டிரைவர், 'ஏம்பா, சும்மா நிக்கறீங்க! சொல்லுங்க, இந்தி ஒழிக! இந்தி ஒழிக!' என்று குரல் எடுத்துக் கொடுக்க, மாண



• 'எதிர்நீச்சல்' படத்தில்...

நன்றி: ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்

வர் கூட்டம், "அட! இவரு நம்ம ஆளு!" என்று சொல்லிவிட்டு, எங்களைத் தாண்டிச் சென்றது.

"பெரிய ஆளு தானய்யா நீ!" என்று டிரைவரின் டெக்னிக்கை வியந்து பாராட்டினேன்.

'உத்தமி பெற்ற ரத்தினம்' என்று ஒரு படம். சாண்டோ சின்னப்பா தேவர் எடுத்த அந்தப் படத்தில், தமிழ் பேசத் தெரியாத உதயகுமார் என்ற கன்னட நடிகர்தான் ஹீரோ. நடிகர் பாலாஜியை ஒரு பாத்திரத்தில் தேவர் நடிக்க வைத்தார். அதன் ஷூட்டிங்குக்குப் போன சமயம், பாலாஜி, என்னையும் கூடவே அழைத்துக் கொண்டு போனார்.

செட்டில், சின்னப்பா தேவருக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார். "இது நம்ம பையன் நாகேஷ். நல்ல நடிகன். இவனுக்கு இந்தப் படத்துல நீங்க ஏதாவது ஒரு சின்ன ரோல் கொடுக்கணும்" என்று பாலாஜி, தேவரிடம் சொன்னார்.

"அதற்கென்ன முருகா! கொடுத்துட்டாப் போச்சு!" என்று தேவர் சொல்ல, எனக்கு ரொம்ப சந்தோஷம்.

ஒரு தென்னை மரத்தின் மேல் ஹீரோ ஏறுவது போன்ற காட்சியைப் படம் பிடித்ததாக ஞாபகம். ஹீரோவாக நடித்த கன்னட நடிகர், மரத்துக்குப் பக்கத்தில் வந்து நின்று கொண்டார். கிராமத்துப் பாணியில் வேட்டியை மரம் ஏறுவதற்கு வசதியாக மடித்துக் கட்டிக் கொள்ளச் சொன்னார் தேவர். அவ்ருக்கோ அது புரியவில்லை. காஸ்ட்யூமர் ஓடிப் போய் வேட்டியை மடித்துக் கட்டினார்.



• சின்னப்பா தேவர்

அடுத்து, துண்டை எடுத்து, தலையில் தலைப்பாவாகக் கட்டி விட, ஹீரோ ஷாட்டுக்கு ரெடியானார்.

"ம்... மரத்துல ஏறு" என்று உரத்த குரலில் தேவர் சொல்ல, ஹீரோ அப்படியே நின்று கொண்டு இருந்தார்.

"ம்... லேட் பண்ணாதே! என் காசைப் போட்டு படம் எடுக்கறேன்... ஏறு...ஏறு..." என்று மறுபடி அதட்ட,

"மரம் ஏறிப் பழக்கமில்லை..." என்று ஹீரோ பதில் சொன்னார்.

"உனக்கோ பாஷை தெரியாது. இருந்தாலும் உன்னை எதுக்கு ஹீரோவாப் போட்டு படம் எடுக்கறேன்? உன் கட்டுமஸ்தான உடம்புக்காகத்தான். பார்க்க பர்சனாலிடியா உடம்பை வைச்சுகிட்டு, நடிக்க என்கிட்ட பணமும் வாங்கிக்கிட்டு, மரம் ஏறத் தெரியாதுன்னா எப்படி? ம்...ஏறு..." என்று ஒரு அதட்டல் போட்டார் தேவர். மொத்த யூனிட்டும் ஆடிப் போனது.

"நீ ஷூட் பண்ணிக்க... அவன் மரத்துல ஏறுவான்" என்றார் கேமராமேனைப் பார்த்து.

"முருகா! அவனைத் தூக்கி விடு" என்று அடுத்து ஓர் அதட்டல் போட்டார்.

யாரோ முருகன் என்கிற ஒருவர் வந்து அந்த ஹீரோ மரம் ஏற உதவப் போகிறார் என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், அப்படி யாரும் வரவில்லை.

ஹீரோ பயந்து போய், தேவர் இருந்த பக்கமே பார்த்துக் கொண்டு நிற்க, "டேய் முருகா! அவனுக்குத்தான் மரம் ஏறத் தெரியலையே! நீ தூக்கி விடு" என்று மறுபடி அதட்டல் போட்டார்.

அடுத்த விநாடி, பயத்தில் மடமடவென்று மரத்தின் மீது ஏறிவிட்டார் ஹீரோ.

எல்லோருக்குமே இதைப் பார்த்துவிட்டு ஒரே ஆச்சரியம் என்றால், எனக்கு இரண்டு மடங்கு ஆச்சரியம். காரணம், இவர் 'முருகா... முருகா' என்று கூப்பிட்டது, அதட்டியது எல்லாம் யாரோ வேலைக்காரரை இல்லை. சாட்சாத் முருகக் கடவுளைத்தான்!

என்னடா, சாமியையே இவர் இந்தத் திட்டு திட்டுகிறாரே, மனுஷர்களை எந்தத் திட்டு திட்டுவாரோ என்று நடுங்கிப் போனேன்.

மரம் ஏறுகிற சீன் எடுத்து முடிக்கப் பட்டது. ஹீரோ மரத்தின் மேலே இருந்தார்.

"ம்... இறங்குய்யா!" என்று அண்ணாந்து ஹீரோவைப் பார்த்துச் சொன்னார் தேவர்.

"இறங்கத் தெரியாது சார்!"

"இறங்கத் தெரியாதா? அப்புறம் எதற்கு

மேலே ஏறினே?"


"பயமா இருக்குது."

"பயப்படாதே! இறங்கு சீக்கிரம்! அடுத்த ஷாட்டுக்கு லேட் ஆகுது பார்!" என்றார் கடுமையான குரலில்.

இதற்கிடையில், "முருகா! என்னை ஏம்பா இப்படி பாடாய்ப் படுத்தி வைக்கிறே!" என்று முருகனுக்கு ஒரு திட்டு!

"முருகா! அவனை இறக்கிவிடு!" இன்னொரு அதட்டல்.

மிரண்டு போன ஹீரோ, மரத்தை இரண்டு கைகளாலும் இறுக்கி அணைத்துக் கொண்டு, மார்பு மரத்தின் மேல் உரச, 'சர்' என்று இறங்கி



"எதுக்குடா ஒரு காதுல பஞ்சை வைச்சுக்கிட்டு வந்திருக்கே... காது வலியா?"

"அதில்லே ஸார்... ஒரு காதுல வாங்கி இன்னொரு காது வழியா விட்டுடறேனாம். அதுக்காக நயினா சொருகி அனுப்பியிருக்காரு!"

— எம். ஏ. அஜீஸ்

விட்டார்.

கீழே இறங்கினவர் மார்புப் பகுதியில் வலி தாங்க முடியாமல் முனகினார்.

"என்ன ஆச்சு?" என்றார் தேவர்.

மரத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டு சறுக்கியதில், மார்புப் பகுதியில் பலமான சிராய்ப்பு! ரத்தம் கசிந்து கொண்டு இருந்தது.

"சரி, சரி, ரத்தத்தைத் துடைச்சிட்டு, மருந்து போடுங்கப்பா!" என்றார் கூலாக.

தேவர் நல்ல மூடுக்கு வந்த பிறகு, என் சம்பந்தப்பட்ட சீனைப் படம் பிடித்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தேன். அவர் பாணியிலேயே, "முருகா! நீதாண்டாப்பா, தேவர்கிட்டே திட்டு வாங்காமல் என்னைக் காப்பாத்தணும்" என்று மனசுக்குள்ளேயே வேண்டிக் கொண்டேன்.

என்னைக் கூப்பிட்டார்கள். எனக்கு லாரி கிளீனர் வேஷம் என்றார்கள். 'எது வானால் என்ன! திட்டு வாங்காமல் நடிச்சால் சரி' என்று நினைத்துக் கொண்டேன்.

மெக்கானிக் ஷெட் போன்ற ஒரு செட். அதில் ஒரு லாரி ரிப்பேர் ஆகி நின்று கொண்டு இருந்தது. தேவர் அங்கே நின்று கொண்டு இருந்தார்.

"வாப்பா நாகேஷ்! சொல்லு! நீ இந்த சீன்ல என்ன பண்ணுவே!"

"ஐயா! நீங்க எப்படிச் செய்யணுமோ சொல்லுங்க! தப்பில்லாம அதைச் செஞ்சிட றேன்!"

"என்னப்பா நீ! நான் சொல்லி, நீ நடிக்கணும்னா, அப்புறம் நீ எதுக்கு? தமாஷா ஏதாவது நீயே சொல்லு... இல்லாட்டி செய்" என்றார்.

"நான் வேணும்னா லாரியோட பம்பர்ல ஏறி நின்னுக்கிட்டு பானட்டைத் திறந்து வெச்சுக்கிட்டு, ஏதோ ரிப்பேர் பார்க்கிற மாதிரி செய்யட்டா?" என்று கேட்டேன்.

"மெக்கானிக் தானே பானட்டைத் திறந்து ரிப்பேர் பார்க்கணும். நீ கிளீனர் தானே! ஒரு துணியை தோள் பட்டையில் போட்டுக்க" என்று என்னிடம் சொல்லிவிட்டு, சற்றுத் திரும்பி, "இவனுக்கு ஒரு பக்கெட் தண்ணி குடுங்கப்பா!" என்றார்.

"தண்ணியை எடுத்துக்கிட்டு, லாரியை கிளீன் பண்ண வர்றாமாதிரி நடந்துவா!" என்றார்.

மெக்கானிக் வண்டியை நெருங்கி வந்து, "வண்டியில என்ன பிரச்னை?" என்று கேட்கிறார்போல சீன் வைத்தார்கள்.

மெக்கானிக், "வண்டியில என்ன பிரச்னை? ஃபேன் பெல்ட்டைப் பார்த்தியா?" என்று டிரைவரைக் கேட்பார்.

"இந்த கிளீனர் பையன் சும்மாத்தானே நிக்கிறான்! இவனுக்கும் பணம் குடுக்கறமில்ல... அந்தக் கேள்வியை இவனைப் பார்த்துக் கேளு!" என்றார் தேவர்.

மெக்கானிக் என்னைப் பார்த்து, "வண்டியில என்ன பிரச்னை? ஃபேன் பெல்ட்டைப் பார்த்தியா?" என்று கேட்கவும், நான் சட்டைப் பாக்கெட்டைத் திறந்து காட்டியபடி, சட்டென்று பொட்டில் அடித்தாற்போல "ஐயோ! நான் எடுக்கலைங்க" என்று பதில் சொன்னேன்.

சட்டென்று சிரித்து விட்டார் தேவர்.

"இதாம்பா நாகேஷ்! அவன் பார்த்தியா'ன்னு கேட்டவுடனேயே சட்டுனு, "நான் எடுக்கலைன்னு சொன்னது எவ்வளோ நல்லா இருக்குது! இந்த சீனை அப்படியே வைச்சுக்கலாம்" என்றார்.

(சிரிப்பு தொடரும்)

பிரியமானவர்களின் நினைவுகள், பிரிதல்களின் வலிகள், இரண்டையும் தேக்கி வைத்திருப்பது இதயம் மட்டுமல்ல, நினைவொப்பங்கள் நிரம்பிக் கிடக்கும் ஆட்டோகிராஃப் புத்தகங்களும்தான்.

கால ஓட்டத்தின் சுழற்சியில் அவற்றைத், தூசி தட்டிப் புரட்டுகிறபோது, நாம் கால யந்திரத்தில் அமர்ந்து, பின்னோக்கிப் பயணம் செய்கிற அற்புதம் நிகழும். அவற்றின் ஒவ்வொரு பக்கத்திலும் பதிவு செய்யப்பட்டிருக்கும் உயிர்த் துடிப்புள்ள வரிகளும், கையொப்பங்களும், நம் கையைப் பிடித்து, பள்ளிப் பருவம், கல்லூரி வாழ்க்கை என அழைத்துப் போகும். அப்போது காய்ந்து போன நம் நினைவுகளில் மறுபடியும் பச்சையம் பிடிக்கும். சேரனின் ஆட்டோகிராஃப் படத்தைக் காண்கிற எந்த வயதுப் பார்வையாளருக்கும், பல இரவுகளின் தூக்கம் திருடு போவது உறுதி.


வாழ்க்கை, சினிமா இரண்டுக்குமான இடைவெளியைக் களைய முற்படும் இந்தப் படத்தின் கதாநாயகன், தமிழ் சினிமா தொடர்ந்து பிம்பப்படுத்திக் காட்டும் வீரதீர பராக்கிரம ஜாம்பவான் அல்ல. நடுத்தட்டு தமிழ் வாழ்க்கையின் சகல திருப்பங்களிலும் தலையைக் கொடுக்கும் இயல்பான மண்ணின் முகம். வறண்ட திண்டுக்கல் மாவட்டத்தின் மண்வாசனை கிராமமொன்றில் சகதோழி கமலாவுக்காக மதகுக்கட்டையில் காத்திருந்து, மிதிவண்டி மிதித்து உயர்நிலைப் பள்ளி போகிறவன். தந்தையின் பணி மாற்றலால் அண்டை மாநிலத்துக்குப் புலம் பெயர்ந்து போய், கல்லூரி வாழ்க்கையில் தனக்கான காதலைக் கண்டெடுக்கிற சராசரி இளைஞன். வழி நெடுக வாழ்க்கை கற்றுத் தரும் பாடங்களோடு, தன்னம்பிக்கையை நிரப்பிக் கொண்டு விடாப்பிடியாக ஜெயிக்கிறவன். கொஞ்சம் தடுக்கினாலும் தலை குப்புற வீழ்ந்துவிடும் சினிமாத்தனமான ஹீரோயிசம் வளைவுகளில் சிக்கிக் கொள்ளாதவன். விளைவு! படம் பார்க்கிற எல்லோரது பிரதிநிதியாகவும் தென்படும் 'செந்தில்' பாத்திரத்தை, தங்கள் கடந்த கால வாழ்க்கையோடு பொருத்திப் பார்த்துக் கொள்ளும் கேரக்டர் ஐடென்டிஃபிகேஷன் என்னும் மேஜிக் நிகழ்கிறது. இதனால் திரையரங்கில் சிறு சலசலப்புகூட இல்லாத, ஜிலீர் அமைதி.

மாநகரவாசியாக தனது திருமணப் பத்திரிகையையும், கூடவே நினைவுகளையும் சுமந்தபடி, பழைய வாழிடங்களுக்குப் புறப்படுகிறார் செந்தில். அங்கே தனது வாழ்க்கைக்குள் வந்த பாத்திரங்களை அசை போடும் நனவோடை உத்தியில் படம் நகர, அன்றைய கிராமம், இன்றைய கிராமம், அன்றைய கேரளம், இன்றைய கேரளம் என்று காட்சியின் பின்புலத்தில், காலம் நிகழ்த்திய மாற்றங்களை கேமிரா, ஒரே கோணத்தில் பொருத்திக் காட்டும்போது, சிலிர்ப்பு பரவுகிறது. பள்ளி வாழ்க்கையின் இறுதி நாளில் "ப்ளஸ் டூ படிக்க இங்கேதானே கமலா வருவே?"



என்று செந்தில் கேட்க,

"பத்து கிளாஸ் படிக்க வைச்சதே அதிகம்! யாராவது ஒரு மாப்பிள்ளைக்கு என்னைக் கட்டிக் கொடுத்துட வாங்க செந்தில்!" என்று கமலை



ஆட்டோகிராஃப்

கண் கலங்காமல் மனசுக் குள் அழுதபடி சொல்ல... பின்னர் அதே கமலா, செந்தில் திருமணத்துக்கு குடும்ப சகித மாக வந்து, அவரிடம் மொய் கவரைத் தந்துவிட்டு திரும்பிப் போகும்போது, கடைசியாக ஒரு முறை திரும்பிப் பார்த்து கொஞ்ச மாய் கடைசிச் சிரிப்பை உதிர்க்க, அந்த கணத்தில், தியேட்டரில் எல்லாக் கண்களும் நிரம்பி வழிய யத்தனிக்கின்றன. காதலனுக்காக மூக்கு குத்திக் கொண்டு, தமிழ் மொழி கற்றுக் கொண்ட லத்திகா, இளம் கைம்பெண்ணாக இருப்பதைப் பார்த்து ரசிகர்கள் அதிர, செந்திலை இயல்பாய் தேன்மொழியை மணக்க வைத்து, சராசரி ரசனையின் எதிர்பார்ப் பைச் சரியான வழியில் திசை திருப்பி விடுகிறார் இயக்குனர்.

நட்பின் எல்லையைக் கொஞ்சம் கடந்து, உறவு போல நெருங்கி வரும் திவ்யா பாத்திரத்தின் கண்ணியமும் காப்பாற்றப் படுவதில், அந்த பாத்திரத் தில் தோன்றும் சினேகாவுக்கு நடிப்பில் முத்திரை பதிக்க நல்ல வாய்ப்பு. மூன்று கால கட்டங்களில் வயதுக்கேற்ப வேறு பாடு தெரிய வேண்டும் என்ற அர்ப் பணிப்பு உணர்வுடன் உடலை வருத்தி, எடையைக் குறைத்து, தோற்றத்தில் மாறுபாடு காட்டி நடித்திருக்கும் சேரன், செந்தில் பாத்திரத்தில் நிறைவு செய் கிறார். ஆனால் அந்தப் பாத்திரம் தன்னிச்சையாக அதிகம் அழுவதை தவிர்க்க முயற்சித்திருக்கலாம்.

கமலா - லத்திகாவாகத் தோன்றும் மல்லிகா - கோபிகா, கமலக்கண்ணனாக வரும் கிருஷ்ணா உட்பட சில காட்சி களில் வந்து போகிறவர்கள்கூட, தத் தமது பாத்திரங்களுக்காக, கூடு விட்டுக் கூடு பாய்ந்திருக்கிறார்கள். கதைநாயகன் வாழ்க்கையின் ஒவ்வொரு கால கட்டத் திற்கும், ஓர் ஒளிப்பதிவாளரைப் பயன் படுத்தி, காட்சி அமைப்பு, ஒளியமைப்பு இரண் டிலும் வேறுபாடு காட்டி ரசிகர்களை கதைக் களத் துக்கு அழைத்துப் போகும் முயற்சியில் வெற்றி கண் டிருக்கிறார் இயக்குனர். இத்தனை அழுத்தமான கதையில், இசை தனது பரிமாணங்களை சுமார் என்ற அளவோடு சுருக்கி கொண்டு விட்டது சோகம்.

நடிகராக மட்டுமல்ல, ஒரு நல்ல கலைஞராக மீண்டும் ஜெயித்திருக்கும் சேரனின் படைப்பு முதிர்ச்சி, ஆட்டோகிராஃபில் கலைப் படையலாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.


- விஷுவல்தாசன்

○ ஃபெயில் ○ ஆவரேஜ்

○ அபவ் ஆவரேஜ் ● டிஸ்டிங்ஷன்

விருது தொடர்கிறது...

"**சா**லை போடுவதும் தெரு விளக்குகள் அமைப்பதும் மட்டுமே ஒரு கலெக்டரின் வேலை அல்ல. மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களுடைய மனப்போக்கில் மாற்றத்தை உண்டாக்குவதுதான் முக்கியப் பணி" என்கிறார் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் கே. கோபால்.



• ஆட்சியர் கே. கோபால்

குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் வளர்கல்விப் பணிகளில் சாதனை புரிந்ததற்காக, மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் சென்னை மாநில பள்ளி சாராக் கருவூலமும், தமிழ்நாடு தொடர்கல்வி வாரியமும் இணைந்து, அவருக்கு எமரால்டு ஜூபிலி மால்கம் எஸ். ஆதிசேஷய்யா விருது, சென்ற வாரம் அளிக்கப்பட்டதற்காக அவரை நாம் நேரில் சந்தித்துப் பாராட்டுகளைத் தெரிவித்தோம்.

"ஏற்கெனவே சென்ற ஆண்டு, உலகச் சுற்றுச் சூழல் தினத்தன்று சேலம் கலெக்டர் ஜே. ராதாகிருஷ்ணன், நீலகிரி கலெக்டர் சுப்ரியா சாஹூ இருவருடன் எனக்கும் 'பசுமை விருது' கொடுத்தார் தமிழக முதல்வர். எனவே விருதுகளும் பாராட்டுகளும் கிடைத்தாலும், அவை பொறுப்பை அதிகமாக்குகின்றன. இன்னும் செய்ய வேண்டிய கடமைகளை உணர்த்துகின்றன" என்கிறார் டாக்டர் கோபால், அடக்கத்துடன்.

விருதுநகர் மாவட்டக் கலெக்டராக இருந்த போது, ஆயிரக்கணக்கான குழந்தைத் தொழிலாளர்களைத் தேடித் தேடிச் சென்று, அவர்களின் பெற்றோரைச் சம்மதிக்க வைத்து, அந்தக் குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்த்த பணிக்காகவே இந்த விருது வழங்கப்பட்டிருக்கிறது.

"அப்படி என்ன செய்தீர்கள் அங்கே?"

"தீப்பெட்டி, பட்டாசு தொழிற்சாலைகளில் பணி புரியும் குழந்தைத் தொழிலாளர்களை விடுவித்து, நூற்றிஐம்பது இடங்களில் நிலாப் பள்ளிகள் தொடங்கினேன். எளிய முறைப் பாடப் பயிற்சிகள் நடத்தினோம். அவர்களிடம் இருக்கும் திறமையை வெளிக் கொண்டு வர, நாடக, கலை நிகழ்ச்சிகளும் நடத்தினோம். படிப்பைப் பாதியில் விட்ட குழந்தைகளும், இதில் உற்சாகமாகப் பங்கு கொண்டார்கள். இவர்களைப் பிறகு சிறப்புப் பள்ளிகளிலும், வழக்கமான பள்ளிகளிலும் சேர்த்து படிப்பைத் தொடர வழிவகை செய்தோம்."



• விழுப்புரத்தில் வேலை பார்த்த பிரகாஷுடன் ஆட்சியர்

"உங்கள் முயற்சிக்கு எதிர்ப்பு இருக்கவில்லையா?"

"ஆரம்பத்தில் இருந்தது. ஏனென்றால் பொருளாதார ரீதியாக அவர்கள் அடைந்து வந்த பலன் தடைப்படுகிறது என்பது உண்மை. அதற்குக் காரணம் அவர்களின் படிப்பறிவின்மை. எனவே அவர்களுக்கும் முதியோர் கல்விக்கு ஏற்பாடு செய்தேன். பொருளாதார ரீதியாக அவர்கள் இழக்கும் வருவாயை ஈடு செய்ய, சமூக ஆதரவுக் குழுக்களைத் துவக்கினேன். இதற்குத் தொழில் துறையினர் ஆதரவு தந்தனர். சுய உதவிக் குழுக்கள் மூலம் வருவாயை அதிகரிக்க முடிந்தது."

"இந்த முயற்சி வெற்றி பெற அடிப்படைக் காரணம் என்ன?"

"இதை ஒரு சமுதாயக் கொள்கையாக -

சோஷியல் அஜெண்டாவாக - ஏற்றுக் கொண் டார்கள். முழுமையான இன்வால்வ்மென்ட்... ஒவ்வொரு பெற்றோருக்கும் தனித் தனியாகக் கடிதம் எழுதினேன். அதிகாலையில்கூட, தொழிற்சாலைகளில் திடீர் விசிட் செய்தேன். பறக்கும் படை அமைத்தோம்.

''இத்தோடு நிற்கவில்லை. இந்தக் குழந்தை களின் திறமையை வெளிப்படுத்த, 'இளம் விஞ் ஞானிகள்' என்று முப்பத்தைந்து பேரைத் தேர்வு செய்து, அவர்களின் கண்டுபிடிப்புகளை வெளியிடச் செய்திருக்கிறோம்.

''மனித வளம் என்பது அசாத்தியமான சக்தி படைத்தது. அதை முறைப்படுத்தினால், நாடு நிச்சயமாக முன்னேறும். இந்தக் கருத்தில் எனக்குத் தீவிர நம்பிக்கை இருக்கிறது!''



• ஊனமுற்ற சிறுவனுடன் உரையாடுகிறார்



• ராஜ்குமார்

என்கிறார் ஆட்சியர்.

மருத்துவராக இருப்பதால், இயல்பாகவே எச்.ஐ.வி எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் துறையில் சிரிய பணிகள் செய்திருக் கிறார். விழுப்புரத்திலும் குழந்தைத் தொழி லாளரை மீட்டு பள்ளிகளில் சேர்ப்பதில் ஆர்வம் காட்டி வருகிறார்.

மந்தக்கரை விஜி ஒர்க்ஷாப்பில் மெக்கானிக் வேலை செய்து கொண்டிருந்த சி. ராஜ்குமார் என்ற சிறுவனைத் தேடிப் போய்ச் சந்தித்தோம். ''அப்பா தண்டரை கிராமத்தில் விவசாயக் கூலி. பாட்டி வீட்டுல தங்கிக்கிட்டு, கமலா நகர் எலி மென்ட்ரி பள்ளியில அஞ்சாவது சேர்ந்துட் டேன்!'' என்கிறான் ராஜ்குமார்.

நாம் ஆட்சியருடன் பேசிக் கொண்டிருந்த போதே வந்த ஒரு கடிதத்தைப் பிரித்தார்; விருது நகர் முனிசிபல் கவுன்சில் தலைவி அமுதா தர்மராஜன் எழுதிய கடிதம்:

''விருதுநகர் மாவட்டத்தில் தாங்கள் நிர் வாகம் செய்த காலம் ஒரு பொற்காலம். நகரின் மத்தியில் அமைந்துள்ள தெப்பக்குளத்துக்கு நான்கு பக்கங்களிலிருந்தும் மழை நீர் சேகரிப்பு அமைத்து, வறண்ட குளத்தை நீர் நிறைந்த தெப்பமாக மாற்றிச் சாதனை படைத்தீர்கள். அதனை இந் நகர மக்கள் என்றென்றும் மறக்க மாட்டார்கள். இத் திட்டம் விருதுநகரைப் போன்று குடிநீருக்கு நிலத்தடி நீரையே நம்பி யுள்ளவர்களுக்கு, ஒரு வரப்பிரசாதம். தங்கள் சாதனையின் புகைப்படத்தை இத்துடன் அனுப்பியுள்ளேன்...''

''பாராட்டுகள் உற்சாகம் தருகின்றன. மேலும் ஆர்வத் தோடு உழைக்க உரமாகின் றன!'' என்றவர், இரண்டு - மூன்று கட்டுக்களாக இருந்த தபால் கார்டுகளைக் காண் பித்தார். அத்தனையும் அவ ருக்கு விருது கிடைத்ததற்காக, விருதுநகர் குழந்தைகள் எழுதியவை. ஒரு சிறுபெண் கவிதையே எழுதியிருக்கிறாள்!

மகளிர் ஆலோசனை மையம் டாக்டர் கோபாலின் வெற்றிகளில் இன்னொன்று. ''இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட தம்பதிகளை இணைத்து வைத்து, மீண்டும் சேர்ந்து வாழச் செய்திருக் கிறேன்!'' என்கிறார்.

பேட்டி முடியும்போது, கூட்டமாகப் பெண்கள் சிலர் வந்தனர். ஒருத்தியின் கையில் சிசு.

''செஞ்சியில், குறிஞ்சிப்பை குப்பத்தில் முள் செடிக்குள்ள இருந்திச்சுங்க இந்தக் கொழந்தை. ஜிஎச்ல மூணு நாள் வச்சிருந்து இன்னிக்குத் கொடுத்தாங்க. நீங்கதான் பேரு வைக்கணும்!'' என்றாள் அவள்.

குழந்தையைக் கையில் வாங்கிக் கொண்டு ஒரு நிமிடம் யோசித்தார் டாக்டர் கோபால். ''சுகாசின்னு பேர் வைக்கறேன். பேரு நல்லா ருக்கா?... வெயிட் இன்னும் இம்ப்ரூவ் பண் ணனும். நல்லா பாத்துக்குங்க!'' என்றார் கனி வுடன்.

'தொட்டில் குழந்தை' திட்டத்தில், இந்த ஆறு மாத காலத்தில் சுகாசினி மூன்றாவது குழந்தை.

- சாருகேசி

புகைப்படங்கள்: வெங்கடேஷ்



கார் ரேஸ், பைக் ரேஸ், ரன்னிங் ரேஸ், குதிரை ரேஸ்... தெரியும். ஏர் ரேஸ் தெரியுமா? அதிலும் ஒரே பெண் போட்டியாளராக தில்லாகப் பங்கு பெற்று சாதனை படைத்துள்ளார் பெங்களூரைச் சேர்ந்த ஆட்ரே மேபென்.

இருபத்தியேழு வயதேயான இளம் புயல். பெங்களூரில் ஏரோ ஸ்போர்ட்ஸ் கிளப் நடத்துகிறார். அவரது ஜக்கூர் இல்லத்தில் சந்தித்தோம்.

"சின்ன வயசுலேர்ந்தே ப்ளேன் என்றால் ரொம்ப இஷ்டம். ஸ்கூலில் கூட டீச்சர் 'பெரியவளானவுடன் என்னவாக ஆசை?' என்றால், 'பைலட்' என்பேன். படித்தது பி.காம். ஜோதி நிவாஸ் காலேஜில். என்.சி.சி.யில் சேர்ந்து கிளைடிங் டிரெயினிங் எடுத்தது த்ரில்லான அனுபவம். அப்போதைய பிரதமர் நரசிம்மராவ் கையால், அகில இந்திய கிளைடர் பைலட்டிற்கான (1993-94) விருது வாங்கிய போது சிலிர்த்துப் போனேன். நான் மிடில் கிளாஸ் வகுப்பைச் சேர்ந்தவள். என்.சி.சி.யில் இலவசமாகப் பயிற்சி கொடுத்ததால், என்னால் கற்றுக் கொள்ள முடிந்தது. ஆனால் ஒன்று மட்டும் புரியவில்லை, ஏன் நம்மில் பலர் ஸ்கூலில் என்.சி.சி.யில் சேருவதை அவ்வளவாக விரும்புவதில்லை?" வெகுளியாகக் கேட்கிறார் ஆட்ரே. (அட நீங்க வேற... இப்போதையப் பெண்கள், டீவி. காம்பியரிங், மாடல், ராம்ப்னு ஒரு நினுசா பறந்துட்டிருக்காங்க...)



கடந்த வருடம் நவம்பர் மாதம் ரைட் சகோதரர்களால் கண்டுபிடிக்கப்பட்ட விமானத்தின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. அப்போது தான் இந்த ஏர்ரேஸ். பெங்களூரிலிருந்து நாக்பூர். மைக்ரோலைட் ஏர்கிராஃப்டில். அதுவும் தனியே. கோ பைலட் கிடையாது. சவாலான இந்தப் போட்டியை எப்படி சாதித்தார்?

"இந்தப் போட்டியில் கலந்துக்க ஒரு வருடம் முன்பே மனு தந்து விட்டேன். நாக்பூரிலிருந்து பெங்களூர் வரை தனியே. கோ பைலட் கிடையாது. என்னுடைய சொந்த ஏர்கிராஃப்டில் செல்ல அதற்குரிய பர்மிட் இல்லாததால், ஏரோனாடிகல் சொஸைட்டி ஆஃப் இந்தியா அனுமதி மறுத்து விட்டது. ஒரு இருபது நாள் பயங்கரமா இங்கே ஓடி அங்கே ஓடி, எதுவும் முடியாத நிலையில் கடைசி நிமிடத்தில் ராஜஹம்ஸா அல்ட்ராலைட்ஸ் என்ற எக்ஸ்-ஏர் ஏர்கிராஃப்ட் தயாரிப்பாளர்கள், தங்களுடைய ஏர்கிராஃப்ட்டைக் கொடுத்து உதவினார்கள். நவம்பர் இருபது கிளம்பினேன். அந்தச் சமயத்தில்தானா தென்னிந்தியப் பகுதிகளில் சீதோஷ்ணம் மோசமடைய வேண்டும்? மேகங்கள் சூழ்ந்த வானத்திலும் முதல் நாள் ஜம்மென்று பறந்தேன். டாங்க் ஃபுல். திடீரென்று ஏதோ

உயரக

கடாபுடா ஆகி, எரிபொருள் சப்ளை நின்று போனது. வேலூரில் நான் இறக்கியிருக்கலாம். ஆனாலும் என் ரூட் மேப்பைப் பார்த்து ஓட்டிக் கொண்டே அரக்கோணத்தில் இறங்கினேன். அப்போது என்னிடம் இருந்தது வெறும் ஒன்னரை லிட்டர் எரிபொருள் மட்டுமே! அரக்கோணத்தில் பழுது பார்க்கப்பட்டு கடப்பா, ரெய்சூர், பிதர், அகோலா கடைசியில் நாக்பூர். இந்த மூன்று நாளில் ஆயிரத்து நானூறு கிலோ மீட்டர் தூரம்

உயர!

பறந்தேன். வெறும் பகல் நேரத்தில் மாத்திரமே ஓட்ட அனுமதி. இரவு எங்கேயாவது ஹால்ட் செய்யணும். ஒரு வழியாக, நாக்பூரில் தரை இறங்கிய போது ஒரே பாராட்டு மழைதான். ஏனென்றால், நானூறு மணி நேர அனுபவ முள்ள நான் போட்டி போட்டது ஏர்ஃபோர்ஸ், ஏர் லைன்ஸின் பல்லாயிரம் மணி நேர அனுபவமுள்ள பைலட்டுகளுடன்.

"ஹாட்ஸ் ஆஃப். நீ போட்டியில் கலந்து கொள்ளாமல் பின் வாங்கிடுவேன்னு நினைச் சோம். குட் ஜாப்" என மனம் திறந்து பாராட்டி னார்கள்.



ஆட்ரே மேபினை மிகவும் திக்குமுக்காட வைத்தது துணைப் பிரதமர் அத்வானிதானாம்.

"ஏர்ரேஸில் கலந்து கொண்ட ஒரே பெண் நீ. உன் தைரியத்தைப் பாராட்டி இன்று முதல் உன் ஆயுசுக்கும் இந்தியன் ஏர்லைன்ஸ் மற்றும் ஏர் இந்தியா மூலமாக, எந்த விமானத்திலும் எந்த இடத்திற்கும் இலவசமாகப் பயணம் செல்லலாம். பாராட்டு" என்று புகழ்ந்து தள்ளி விட்டாராம்.

"அஃப்கோர்ஸ் ஏர் - ரேஸில் என்னால் ஜெயிக்க முடியவில்லை. ஸோ வாட்... மைக்ரோலைட் விமானத்தை முதன் முதலாக தனியே ஓட்டிச் சென்ற பெண் என்ற பெருமை எனக்கு கிடைத் ததே. அதுபோதும்" என்கிறார் விழிகள் பள பளக்க!

ஆட்ரேயின் கணவர் விங் கமாண்டர் அசோக் மெஹ்தா.

"எங்களுடையது லவ் மேரேஜ். அவர் ஃபைட்டர் பைலட். எம்.ஐ.ஜி. விமானங்களை ஓட்டியவர். என்னுடைய ரோல் மாடலே அவர்தான். எனக்குப் பயிற்சி கொடுத்தவர், இன்றும் 'குடும்பமா, 'ஃப்ளையிங்கா' என்று கேட்டால் டக்கென்று ஃப்ளையிங் என்று பதில் வரும். அந்த அளவுக்கு ஊறியவர். நான் தனியே துணிச்சலாக ஓட்டியதற்குக் காரணமே அவர்தான். ஒரு நாளைக்கு சுமார் பதினைந்து மணி நேரம் நாங்கள் இருவருமே பறக்கிறோம் தனித்தனியே..." சிரிக்கிறார்.

இன்னும் இந்தியாவில் ஏரோ ஸ்போர்ட்ஸ் பற்றி பெரிதாக விழிப்புணர்வு இல்லை என்ற வருத்தம் நிறையவே இருக்கிறது ஆட்ரேவிற்கு!

"வெளிநாட்டில் ஏரோ ஸ்போர்ட்ஸ் என்றால் தனி கௌரவம். இங்கு அப்படி இல்லை. கமர்ஷியல் பைலட்டுகள் பலர் பயிற்சி முடிந்து வேலையில்லாமல் திண்டாடுகிறார் கள். ஆனால் இந்த லைனில் வருவதில்லை. எதிர்காலத்தில் நான் பயிற்சியாளராக வேண்டும். பிறகு உலகளவில் நடக்கும் ஏரோ பேடிக்ஸ் சாம்பியன்ஷிப்பில் பங்கு பெற வேண்டும்" என்று சொல்லும் ஆட்ரோ, அரு மையாக பியானோ, கிடார் வாசிப்பாராம்!

பேட்டி முடிந்து கிளம்புகையில் அவரது ஐந்து வயது செல்ல மகன் எமி, ஸ்கூலிலிருந்து வீட்டு வாசல் கதவில்... "மம்மி, இன்னிக்கு நானே தனியா லிஃப்டில் வந்துட்டேன். வாச்மேன் வரல்லே..." என்கிறது ஆங்கிலத்தில். "அப்படியா, ப்ரேவ் கேர்ள்" என்கிறார் ஆட்ரே.

பருந்துக்குப் பிறந்தது பட்டாம் பூச்சி யாகுமா?

– லதா சேகர்


உஷ்!



வந்தே விட்டது அடுத்த பொதுத் தேர்தல்!

ஏற்கெனவே கிழிந்து நைந்துபோன நம் செவிப்பறைகள், மேலும் சீர்குலைந்து சிதைந்து போகும்; ஒலிபெருக்கிகள் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

ஒருமுறை மூதறிஞர் ராஜாஜி சொன்னதாய் நினைவு, "இப்படிச் சத்தம் போடுகிற ஆற்றலை எல்லாம் சேமித்துப் பயன்படுத்தினால், தொழிற்சாலைகளையே இயக்க முடியும்" - கிட்டத்தட்ட இப்படி ஒரு கருத்துத்தான்! சூரிய ஆற்றல், கடல் அலை ஆற்றல், காற்றின் ஆற்றல் என்கிற மாதிரியே, ஒலி அலைகளின் ஆற்றலும் அளப்பரியது.



தடதடக்கும் அதிவேக ரெயில் வண்டிகள், காற்றை விடவும் அதி விரைவாய்ப் பறக்கும் 'ஸூப்பர் ஸானிக்' வகை விமானங்கள் என்று விதவிதமாய் எழும் ஒலி அலைகள், சுற்றுச் சூழலையும், மனித வாழ்க்கையையும் பாதிப்பது போலவே, இயற்கைச் சமன்பாடுகளையும் சீர்குலைக்கின்றன.

'மழையில்லையே' என்கிற புலம்பல் சென்ற நூற்றாண்டில்தான் தீவிரமாகியது என்பதை வைத்துப் பார்க்கும்போது, தெற்கு முக்கியமான காரணம் நாய்ஸ் பொல்யூஷனாகவும் இருக்கக் கூடும்.

பண்டை நாட்களில் மென்மையான இசையும், மந்திர ஒலிகளும் மழை மேகங்களை வருடி, வரவேற்று, நிலத்தைக் குளிர்வித்தன என்கிறார்கள். ஒலி என்பது அத்தனை மென்மையானது.

கவிஞர்கள் மலர்கள் மொட்டவிழும்போது கேட்கும் ஓசையைக் கூடப் பாடுபவர்கள். கவிப்பேரரசு வைரமுத்து கூடப் 'பூப்பூக்கும் ஓசை'யைக் கேட்க ஆசைப்பட்டார் தானே?

எப்போதுமே மென்மையாகப் பேசுவது மேன்மக்களின் இயல்பு. மகாகவி பாரதியின் வாக்கே 'மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்' என்பது தானே! அந்த மந்திரச் சொற்களின் மென்மை தடுமாறுகிறபோதுதான் சங்கடங்கள் நேர்கின்றன.

சரி, சும்மா ஓர் ஆராய்ச்சிக்காகவேனும், ஒரு குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட ஒரு சமயத்தில், ஒரு மணி நேரம் ஓசைகள், அரவங்கள் ஏதுமற்ற அமைதியான சூழலை உருவாக்கி, அதன் விளைவுகளைக் கவனிக்கலாம். மழை மேகங்களைக் கூட இது மகிழ்விக்கலாம்!

— சுப்ர.பாலன்

நடக்குமென்பார் நடக்கும்!

மேஷம்: தெய்வபலம், புதியவர்கள் அறிமுகம், பணவசதி உண்டாகும். கோரிக்கைகள் நிறைவேறும். பதவி உயர்வு கிட்டும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் துறைகளில் உள்ளவர்களுக்கு உயர்வு கிட்டும். குடும்பத்தில் உற்சாகம் ஏற்படும்.

ரிஷபம்: அரசாங்க ஆதரவு, முக்கியஸ்தர்கள் உதவி கிட்டும். பணவசதி உண்டாகும். புதிய உத்தியோக முயற்சிகளில் நிதானம் தேவை. செலவுகள் அதிகமாகும். சொத்து, கோர்ட் விவகாரங்களில் அனுகூலம் கிட்டும்.

மிதுனம்: கல்வி, விஞ்ஞானம், ஆராய்ச்சிகள் அனுகூலமாக முன்னேறும். உத்தியோகப் பிரச்னைகள் தீரும். புதிய முயற்சி, வெளி நாட்டுத் தொடர்பு சாதகமாகும். அரசாங்க ஆதரவு, பாங்க் கடன், கூட்டுத் தொழிலில் இலாபம் கூடி வரும்.

கடகம்: முடியாமல் இருந்து வந்த முக்கிய காரியங்கள், கோர்ட், வழக்கு, எல்லாம் வெற்றிகரமாக முடியும். நிர்வாகத் துறையிலிருப்பவர்களுக்கு சுதந்திரமாகச் செயல்பட்டு முன்னேறும் வாய்ப்புக் கிட்டும். கடன் தொல்லை மறையும். கலைத்துறையினருக்கு அபிவிருத்தி உண்டு.

சிம்மம்: உத்தியோகத்தில் சிரமங்கள் குறைந்து மேலதிகாரிகளின் ஆதரவு உண்டாகும். வெளிநாடு போகும் வாய்ப்புக் கிட்டும். எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். ஓட்டல், லாட்ஜ், டிராவல்ஸ் தொழில்களில் இலாபம் கொட்டும். அரசு ஊழியர், அரசியல்வாதிகள் உயர்வார்கள்.

கன்னி: புதிய அறிமுகங்கள், பயணங்கள், தெய்வீக ஈடுபாடு உண்டாகும். உத்தியோகத்தில் சுமுகமாகப் பழகுவது நன்மை தரும். கடன் தொல்லை குறையும். ரெடிமேட் உடைகள், புத்தகம், பத்திரிகை துறைகளில் இலாபம் கிட்டும்.

துலாம்: உத்தியோகச் சிக்கல்கள் விலகும். பொருளாதார நிலை மேம்படும். கலைத் துறையிலிருப்பவர்களுக்கு பெயர், புகழ், பாராட்டு கூடும். பொன், பொருள், ஆடை என்று சேர்ந்து குடும்பத்தில் குதூகலம் ஏற்படும்.

விருச்சிகம்: எதிர்பாராத பண வரவும், நம்பிக்கையும் உண்டாகும். அதிர்ஷ்டமான திருப்பங்கள் நிகழும். வெளிநாட்டுத் தொடர்பு அதிக இலாபம் தரும். இயந்திரம், இண்டஸ்ட்ரி, காண்ட்ராக்ட், டிராவல்ஸ் துறைகளில் ஆதாயம் கூடும்.

தனுசு: துணிவும் நம்பிக்கையும் கூடும். அலுவலகத்தில் உற்சாகச் சூழ்நிலை ஏற்படும். வெளியூர், வெளிநாடு பயணம் கைகூடும். கையிருப்பு கூடும். சட்டம், இராணுவம், காவல் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும்.

மகரம்: எதிர்ப்புகள் மறையும். முக்கியஸ்தர்கள் ஆதரவு கிடைக்கும். உத்தியோக சிரமங்கள் குறைந்து அனுகூலமாக அமையும். நிலம், வீடு, ரியல் எஸ்டேட் தொடர்பாக சாதகமான சூழ்நிலை ஏற்படும். பெண்கள் எண்ணம் ஈடேறும்.

கும்பம்: பிரார்த்தனைகள் நிறைவேறும். காரியங்கள் எல்லாமே திட்டப்படி நடக்கும். புதிய முயற்சி தொடங்க, சாதகமாக அமையும். பண நெருக்கடி மறையும். தோல் பொருள்கள், எண்ணெய், வியாபாரங்கள் இலாபம் தரும். தாமதமாகி வந்த சுப காரியங்களில் தடைகள் நீங்கும். குடும்பத்தில் உற்சாகமான திருப்பங்கள் நிகழும்.

மீனம்: ஆரம்பத்தில் தோன்றும் குழப்பங்கள், காரியத்தடைகள் எல்லாம் பிற்பகுதியில் நீங்கி விடும். புதியவர்களிடம் எச்சரிக்கை தேவை. உத்தியோகக் குழப்பங்கள் மறைந்து, தெளிவான மனநிலை ஏற்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும் என்றாலும் தக்க உதவியும் கிட்டும்.

அக்னிசர்மா பக்கம்

மார்ச் 3 முதல்
மார்ச் 9 வரை

சர்வேஸ்வரன் திகைத்துப் போய் மகனைப் பார்த்தார். இரண்டு விழிகளுமே கலவர ஸ்தலங்களாக மாறியிருந்தன.

"ஆதித்...! நீ என்ன சொல்றே...! இந்த உலகத்திலேயே சந்தோஷமான மனிதன் நான்தான்னு கின்னஸுக்கு அப்ளை பண்ணலாம்னு இருக்கேன்."

"அந்தப் பெண் வைகை உம் மனசுக்குள்ளே இப்படி தடாலடியா நுழைஞ்சு இடத்தைப் பிடிச்சிருப்பான்னு நான் கொஞ்சம்கூட நினைச்சுப் பார்க்கலை.

கோடி கோடி மின்னல்கள்



வைகை உனக்கு வேணுமா...?"

"எஸ்....! ஐ...வாண்ட் டு மேரி ஹர்."

இரண்டு பேருக்கும் இடையில் சில விநாடிகள் வரைக்கும் வேண்டாத மௌனம் நிலவ, ஆதித்யா அந்த மௌனத்தைக் கலைத்தான்.

"என்னப்பா... பேச்சையே காணோம்?"

"பேசினதை ஜீரணம் பண்ணிட்டிருக்கேன்."

"அப்பா...! வைகையை நீங்க எனக்கு அறிமுகப்படுத்திய அன்னிக்கே அவ மேல எனக்கு ஒரு ஈர்ப்பு வந்தது. ஏதோ அவளை பல காலம் பார்த்த உணர்வு. அவளோட பேச்சு, நடத்தை எல்லாமே எனக்குள்ளே சூறாவளியை உண்டு பண்ணியிருந்தது. வருமான வரி அதிகாரிகளை அவள் டீல் பண்ணிய அந்த புத்திசாலித்தனம், என் மனசுக்குள்ளே பிரமிப்பை ஏற்படுத்தியிருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக, வைகை கிட்டயிருந்த அந்த மனித நேய உணர்வு, என்னை வெகுவாகவே இம்ப்ரஸ் பண்ணியிருந்தது. வைகை எனக்கு லைஃப் பார்ட்னரா வந்துட்டா...

நம்ம வீட்டுக்கு வரப் போகிற மருமகளை, என்னோட ஸ்டேட்டஸுக்குத் தகுந்த மாதிரி எதிர்பார்த்தேன். அதுல ஒரு சின்ன சிராய்ப்பு."

"அப்பா...! இதுல உங்களுக்கு விருப்பம் இல்லாத பட்சத்தில், இந்த கல்யாண விஷயத்துக்கு இங்கேயே ஒரு முற்றுப்புள்ளி வைச்சுடுவோம்..."

சர்வேஸ்வரன் புன்னகை செய்தார்.

ராஜேஷ்குமார்

"பார்த்தியா... இந்த டூயல் ரோல்தானே வேண்டாங்கிறது...! இன்னஸுக்கு அப்ளை பண்ணப் போகிற உன்னோட சந்தோஷத்துக்கு குறுக்கே நிக்க... நான் தயாரில்லை ஆதித். இன்னிக்கே வைகைகிட்டே பேசிடறேன்... இல்லே, வைகைகிட்டே நீயே பேசினாலும் சரி."

"நீங்களே பேசிடுங்கப்பா..."



காலை ஒன்பது மணி.

ஹாஸ்பிடலுக்கு கைனடிக் ஹோண்டாவில் போய்க் கொண்டிருந்த வைகை, ஆள் நடமாட்டம் அதிகம் இல்லாத அந்த சாலைக்குள் வண்டியை நுழைத்து, எதிர்ப்பட்ட பப்ளிக் டெலிபோன் பூத்துக்கு முன்பாக நிறுத்தி ஸ்டாண்ட் போட்டாள்.

பூத்துக்குப் பக்கவாட்டில் ஒரு சிமெண்ட் திட்டின் மேல் உட்கார்ந்திருந்த அந்த நடுத்தர வயது நபர் கும்பிட்டபடியே எழுந்து வந்தார்.

"வணக்கம்மா...!"

வைகை புன்னகை செய்தாள்.

"சொன்ன நேரத்துக்கு வந்துட்டீங்களே வீராசாமி...?"

"நீங்க சொல்லி நான் வராமே இருப்பேனாம்மா...?"

"பூத்துக்குள்ளே யாரும் இல்லையே...?"

"இல்லீங்கம்மா..."

இருவரும் பூத்துக்குள் நுழைந்தார்கள். கண்ணாடிக் கதவைச் சாத்திக் கொண்டார்கள்.

"நான் சொல்லிக் கொடுத்தது எல்லாம் ஞாபகம் இருக்கா வீராசாமி...? இல்லே மறுபடியும் ஒருதடவை சொல்லிக் கொடுக்கணுமா?"

"வேண்டாம்மா... நீங்க ஒரு தடவை சொல்லிக் கொடுத்ததே மனசுக்குள்ளே பதிஞ்சு போயிருக்கு..." சொல்லிக் கொண்டே வீராசாமி கொக்கியில் தொங்கிக்

கொண்டிருந்த ரிஸீவரை எடுத்துக் கொண்டு, ஒரு ரூபாய் நாணயத்தின் உதவியோடு லைனை உயிர்ப்பித்து, டயலில் எண்களைத் தட்டினார். மறுமுனையில் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது.

வீராசாமி குரல் கொடுத்தார்.

"தயாநிதி அறக்கட்டளைங்களா?"

"ஆமா..."

"அறக்கட்டளைத் தலைவர் நித்தியானந்தம் இருக்காருங்களா...?"

"நித்தியானந்தம்தான் பேசறேன். நீங்க யாரு?"

"அய்யா... வணக்கம்ங்க. நான் வீராசாமி பேசறேனுங்க."

"வீராசாமியா... எந்த வீராசாமி...?"

"வாட்ச்மேன் வீராசாமிங்கய்யா... லஞ்ச ஊழல் கண்காணிப்பு பிரிவு கட்டடத்தில் வாட்ச்மேனா வேலை பார்த்துட்டிருக்கேன்யா... போன வருஷம் எங்க குப்பத்தில் நெருப்பு பிடிச்சு குடிசைகளெல்லாம் எரிஞ்சு போனபோது, உங்க ட்ரஸ்ட் மூலமா ஒரு லட்ச ரூபாய் கொடுத்தீங்க.... அதுக்கு நன்றி சொல்றதுக்காக, பத்து பேரோடு உங்க ட்ரஸ்ட் கட்டடத்துக்கு வந்திருக்கோம்ய்யா..."

"அப்படியா... சரி...சரி... என்ன விஷயம்... மறுபடியும் ஏதாவது உதவி கேட்டா பண்ணக்கூடிய நிலைமையில் நாங்க இல்லை."

"அய்யா...! உங்ககிட்டே உதவி கேக்கிறதுக்காக நான் போன் பண்ணலைங்க..."

"பின்னே...?"

"உங்களுக்கு உதவி பண்ணத்தான்..."

"என்னது...! எனக்கு உதவியா...?"

"ஆமாங்கய்யா...! நீங்க உங்க ட்ரஸ்ட் மூலமா ஊருக்கு எவ்வளவோ நல்லது பண்றீங்க... உங்களுக்குன்னு ஒரு ஆபத்து வரும்போது, அதை தெரியப்படுத்த வேண்டியது என்னோட கடமைன்னு நினைச்சுத்தான் போன் பண்ணினேன்."

"எனக்கு ஆபத்தா...! என்ன சொல்றே நீ...?"

"அய்யா...! நேத்து சாயந்தரம் அஞ்சு மணி சுமாருக்கு டெல்லியிலிருந்து சி.பி.ஐ அதிகாரிகள் மூணு பேர் லஞ்ச ஊழல் கண்காணிப்பு ஆபீஸுக்கு வந்தாங்க. இங்கே இருக்கிற அதிகாரிகள்கிட்டே ராத்திரி பத்து மணி வரைக்கும் பேசிக்கிட்டிருந்தாங்க. அப்பப்ப என்னைக் கூப்பிட்டு டீ, காஃபி, டிஃபன் வாங்கிட்டு வரச் சொன்னாங்க. நானும் போய் வாங்கிட்டு வந்து கொடுத்தேன். அந்த நேரத்துல அவங்க பேசின சில வார்த்தைகள் என்னோட காதுல விழுந்தது. சென்னையில் இருக்கிற சில ட்ரஸ்ட்கள் பல்வேறு வகையான மோசடிகளைப் பண்ணி, லட்சக்கணக்கில் பணத்தைச் சுரண்டறதாகவும், அதைக் கண்டுபிடிக்க சில ரகசியமான ஏற்பாடுகளைப் பண்ணியிருக்கிறதாகவும் பேசிகிட்டாங்க... அவங்க அப்படி பேசும்போது 'தயாநிதி ட்ரஸ்ட்' பேரும் என்னோட காதுல விழுந்ததுங்கய்யா... ராத்திரி நான் ட்யூட்டியில் இருந்ததால உங்களுக்கு ஃபோன் பண்ண முடியலைங்க."

மறுமுனையில் நித்தியானந்தம் பதற்றமானார். "அந்த ஆபீஸர்ஸ் வேற என்ன பேசிகிட்டாங்க...?"

"முழுசா என்னாலே எதையும் கேட்க முடியலைங்கய்யா. காஃபி, டீ, சிகரெட் எடுத்துட்டு உள்ளே போகும்போது, துண்டு

"சார், நாம தேடுற தீவிரவாதிகள் இங்கேயிருந்து வேற இடத்துக்கு அவங்க முகாமை மாத்திட்டாங்களாம்!"

"நல்லதா போச்சு... நாம நிம்மதியா இங்கேயே அவங்களைத் தேடிக்கிட்டு இருக்கலாம்."

- வி. கிருஷ்ணகுமார்

துண்டா சில வார்த்தைகள் வந்து காதுல விழும். தயாநிதி ட்ரஸ்ட் என்கிற பேரை ரெண்டு மூணு தடவை சொன்னாங்கய்யா...! எனக்கு மனசு கேட்காமேதான் உங்களுக்கு போன் பண்ணினேன். அய்யா...! இதை உங்க மனசுல வெச்சுகிட்டு எவ்வளவு ஜாக்கிரதையா இருக்கணுமோ... அவ்வளவு ஜாக்கிரதையா இருந்துக்கோங்கய்யா.. எந்தக் காரணத்தை முன்னிட்டும் என்னோட பேரை வெளியே சொல்லிடாதீங்கய்யா.. நான் புள்ளக் குட்டிக்காரன். மெமோ குடுத்து வீட்டுக்கு அனுப்பிட்டாங்கன்னா என்னோட குடும்பம் நடுத்தெருவுக்கு வந்துடும்."

வீராசாமி படபடவென்று பேசிவிட்டு ரிஸீவரை கொக்கியில் தொங்கவிட்டார் திரும்பி வைகையைப் பார்த்துச் சிரித்தார்

"நீங்க சொல்லிக் கொடுத்த மாதிரியே பேசிட்டேம்மா..."

"ரொம்ப நன்றி வீராசாமி..."

"அய்யோ...! என்னங்கம்மா நீங்க... இதுக்கெல்லாம் போய் நன்றி சொல்லிக்கிட்டு...! நீங்க எம் பொண்ணுக்குப் பண்ணின உதவியைக் காட்டிலும் இது ஒண்ணும்..."

"இருந்தாலும்... உங்க வேலையைப் பணயம் வைச்சு ஒரு பொய் பேசியிருக்கிங்களே!"

"என்னைப் பொறுத்தவரைக்கும் இது பொய் இல்லீங்கம்மா...! பிரம்மாஸ்திரம்...! இந்த பிரம்மாஸ்திரம் கண்டிப்பா அந்த இரண்டரை லட்ச ரூபாயைக் காப்பாற்றிக் கொடுக்கும்."

வைகை ஹாஸ்பிடலைத் தொட்டு தன்னுடைய செக்ஷனுக்குள் நுழைந்த போது மணி ஒன்பதரை.



"குட் மார்னிங் அர்ச்சனா..."

கம்ப்யூட்டரோடு ரகசியம் பேசிக் கொண்டிருந்த அர்ச்சனா திரும்பினாள்.

"ஓடு...ஓடு..." என்றாள்.

"ஓடறதா... எங்கே...?"

"சீஃப் டாக்டர் சர்வேஸ்வரன் 'வைகை வந்தாச்சா வந்தாச்சா'ன்னு இதுவரை ஆறு தடவை இண்டர்காம்ல கேட்டுட்டார்..."

வைகை நெற்றி நிறைய ஆச்சரியப் பட்டாள்.

"ஆறு தடவை...?"

"ஆமா...ஆமா..."

"அப்போ ஓடக்கூடாது. பறக்க வேண்டியதுதான்" வைகை தன் தோளில் இடம் பிடித்திருந்த வேனிடி பேக்கை நாற்காலியின் முதுகில் மாட்டிவிட்டு, நடக்க முயன்ற விநாடி - பேக்கில் இடம் பிடித்திருந்த செல்ஃபோன் மெலிதாகச் சிணுங்கிக் கூப்பிட்டது. வைகை அதை எடுத்து இடது காதில் பொருத்திக் கொண்டே, வேகமாய் லிஃப்ட்டை நோக்கி நடந்தாள்.

"ஹலோ..."

"யாரு வைகையா?"

"ஆமா..."

"நான் தயாநிதி அறக்கட்டளை தலைவர் நித்தியானந்தம் பேசறேன்மா..."

"ஓ...! நீங்களா... குட் மார்னிங் ஸார்...! ஸார்! நான் உங்களை மறந்துடலை. பத்து மணிக்கு பேங்க் திறந்ததுமே பணத்தை எடுத்துக்கிட்டு நேரா உங்க இடத்துக்கே வந்துடறேன்... நான் 'வருவேனோ மாட்டேனோ'ங்கிற சந்தேகமே உங்களுக்கு வேண்டாம் ஸார். இந்த வைகை எதைச் செஞ்சாலும்..."

நித்தியானந்தம் குறுக்கே குரலை நுழைத்தார்.

"ஒரு நிமிஷம்... நான் சொல்றதைக் கேளும்மா..."

"சொல்லுங்க ஸார்... பணத்தை எடுத்துக்கிட்டு வேற ஏதாவது இடத்துக்கு வரணுமா...?"

"அது இல்லேம்மா..."

"பின்னே...?"

"அந்த இரண்டரை லட்ச ரூபாய் பணமே எங்களுக்கு வேண்டாம்."

"என்னது...! பணம் வேண்டாமா... ஏன் ஸார்?"

"நானும் செக்ரட்டரியும் ட்ரஷரரும் யோசனை பண்ணிப் பார்த்தோம். தர்ம காரியங்களுக்குப் போகிற பணத்தில் கையை வைக்கிறது எங்க மனசுக்கு சரியாப் படலை. அதனால அஞ்சு லட்சத்தையும் உங்க சமூக அமைப்புக்கே கொடுத்துடலாம்னு முடிவு பண்ணிட்டோம்."

"ஸார்...! நிஜமாத்தான் சொல்றீங்களா?"

"ஆமாம்மா...! அந்த அஞ்சு லட்சத்தையும் எந்தெந்த சமூக நலப் பணிகளுக்கு உபயோகப்படுத்திக்கிட்டேங்கிற விபரங்களைத் தகுந்த சான்றிதழ்களோடு எங்களுக்குக் கொடுத்துட்டா போதும்..."

"தேங்க்யூ வெரிமச் ஸார்" வைகை செல்ஃபோனை அணைத்து இடுப்பின் மறைவில் பதுக்கிக்கொண்டே "வாழ்க வீராசாமி" என்றாள்.

சாத்திய கதவுக்கு வெளியே இருந்த காலிங்பெல் பட்டனை அழுத்திவிட்டு வைகை காத்திருக்க, 'உள்ளே வரலாம்' என்பதற்கு அடையாளமாக கதவில்

பொருத்திய 'கெட் இன்' பச்சை நிறத்தில் ஒளிர்ந்தது. கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனாள் வைகை.

"குட் மார்னிங் டாக்டர்..."

"வாம்மா வைகை..."

"ஸாரி... டாக்டர்... நான் இன்னிக்கு பதினைந்து நிமிஷம் லேட். வழியில் ஒரு பர்சனல் வேலை இருந்தது..."

"நோ ப்ராப்ளம்... உட்காரும்மா...!"

வைகை உட்கார்ந்தாள். கேட்டாள். "எனி அர்ஜென்ட் மேட்டர் டாக்டர்?"

"எஸ்...! பட்... பர்சனல்..."

"சொல்லுங்க டாக்டர்."

சர்வேஸ்வரன் சுழல் நாற்காலியில் அரை வட்டம் அடித்துவிட்டு, தீவிரப் பார்வை பார்த்தபடி கேட்டார்.

"உனக்கு அதிர்ஷ்டத்துல நம்பிக்கை உண்டா வைகை?"

"உண்டு டாக்டர்...! இல்லேன்னா இவ்வளவு பெரிய ஹாஸ்பிடலில் எனக்கு அக்கௌண்ட்டண்ட் வேலை கிடைச்சுருக்குமா...?"

"இந்த ஹாஸ்பிடலில் வேலை கிடைச்சதையே அதிர்ஷ்டமா நினைக்கிற உனக்கு, இன்னொரு அதிர்ஷ்டமும் அடிக்கப் போகுது... உன்னாலே ஊகிக்க முடியுதா வைகை...?"

"முடியுது டாக்டர்..."

"எங்கே சொல்லு பார்க்கலாம்."

"உங்க சன் ஆதித்யா, என்னைக் கல்யாணம் பண்ணிக்க விரும்புகிறார்... அதைத் தானே சொல்றீங்க டாக்டர்...?"

(தொடரும்)






வில்லங்கமான தீர்ப்பு!

பல்லாண்டுக் காலமாக மத்திய அரசில் ஒரு விதி இருந்தது. அதற்குப் பெயர் single directive (ஒரு கட்டளை). மத்திய அரசின் மூத்த அதிகாரிகள் - இணைச் செயலாளர் மற்றும் அதை விட உயர்ந்த பதவிகளில் இருப்பவர்கள் - பல முக்கிய முடிவுகளை எடுக்கிறார்கள். அவர்கள் எடுக்கும் முடிவுகள், யாரோ ஒருவருக்குப் பாதகமாக இருக்கக் கூடும். மத்திய அரசின் மூத்த அதிகாரிகள் மீது நாள்தோறும் பல புகார்கள் வரும். அவற்றை விசாரிக்க வேண்டும் என்று சொல்வது சரியே. சி.பி.ஐ. போன்ற ஒரு பிரிவு, மூத்த அதிகாரிகள் மீது சுமத்தப்படும் ஊழல் புகார்களை விசாரிக்கிறது. ஆனால், ஒரு புகாரை அடிப்படையாகக் கொண்டு ஒரு மூத்த அதிகாரியைக் கைது செய்ய வேண்டும் என்றாலோ, அவர் மீது வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்றாலோ, மத்திய அரசின் முன் அனுமதியை சி.பி.ஐ. பெற வேண்டும் என்று 'ஒரு 'கட்டளை' அறிவுறுத்துகிறது.

இந்த 'ஒரு கட்டளை' ஊழல் அதிகாரிகளைப் பாதுகாக்கிறது என்று சிலர் கருதினார்கள். ஒரு மூத்த அதிகாரியின் மீது வழக்குத் தொடர்வதற்கு சி.பி.ஐ. அனுமதி கேட்டால், அரசு நொண்டிச் சாக்குகளைச் சொல்லிக் காலத்தைக் கழிக்கிறது. இறுதியாக, பொய்யான காரணங்களைச் சொல்லி அனுமதி மறுக்கப்படுகிறது. இந்த வாதத்தைப் பலர் எழுப்பினார்கள். குறிப்பாக எச்.டி. ஷெளரி (அமைச்சர் அருண் ஷெளரியின் தந்தை) என்ற பொது நலவாதி. இந்த வாதத்தை முன் வைத்து ஒரு வழக்கைத் தொடர்ந்தார்.



• ஜே.எஸ். வர்மா



• எச்.டி. ஷெளரி

இந்த வழக்கை விசாரித்த உச்சநீதி மன்ற நீதிபதிகளில், நீதிபதி ஜேஎஸ்வர்மா என்பவர் மிக நேர்மையானவர். அறிவாளி. மூத்த அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு, மற்ற அதிகாரிகளுக்குப் பாதுகாப்பில்லை என்ற பாகுபாடு, அரசியல் சாசனத்துக்குப் புறம்பானது என்று அவர் கருதினார். 'சட்டத்தின் முன் எல்லோரும் சமம்' என்பது உண்மை என்றால், ஒரு மூத்த அதிகாரியைக் கைது செய்வதற்கோ, அவர் மீது வழக்குப் பதிவு செய்வதற்கோ, அரசின்

20 நமக்கே உரிமையாம்

ப.சிதம்பரம்





"உங்களுக்கு எதிராக எத்தனை கட்சி நிக்குது?"
"நீங்க வேற... நம்ம கட்சிக்காரங்களே நாலு பேர் நிக்கறாங்க!"
- பம்மல் நாகராஜன்

முன் அனுமதியைப் பெற வேண்டிய அவசியம் இல்லை என்று தீர்ப்பளித்தார். அப்படி முன் அனுமதி பெற வேண்டும் என்று கூறும் 'ஒரு கட்டளை' விதி, செல்லாது என்றும் தீர்ப்பளித்தார்.

பொதுநலவாதிகளுக்கு மகிழ்ச்சி. சி.பி.ஐ.க்கு மகிழ்ச்சி. 'சட்டத்தின் முன் எல்லோரும் சமம்' என்ற கொள்கைக்கு வெற்றி என்பதால், வழக்கறிஞர்களுக்கு மகிழ்ச்சி.

உச்சநீதி மன்றத்தின் இந்தத் தீர்ப்பு, எல்லோருக்கும் மகிழ்ச்சியளித்த தீர்ப்பா என்றால், இல்லை. மிகுந்த அனுபவம் வாய்ந்த அதிகாரிகள், இந்தத் தீர்ப்பின் பின் விளைவுகளைப் பற்றி பல கவலைகளைத் தெரிவித்தார்கள்.

'அரசின் முடிவு' என்று ஒரு முடிவை எடுப்பது எளிதல்ல. பல தரப்பினரின் கருத்துக்களைக் கேட்டு, எந்த நிர்பந்தங்களுக்கும் பணிந்து விடாமல், சட்டம் மற்றும் பொது நலத்தை மட்டுமே கருத்தில் கொண்டு ஒரு முடிவை எடுக்க வேண்டும். எந்த முடிவை எடுத்தாலும், அதை யாராவது விமர்சிப்பார்கள். அந்த முடிவு ஒரு புகாருக்கு வழி வகுக்கலாம்; ஊழல் புகாராகக் கூட இருக்கலாம். ஒரு புகாரை வைத்துக் கொண்டு உடனடியாக வழக்குப் பதிவு செய்வது, கைது செய்வது, வழக்குப் போடுவது என்று சி.பி.ஐ. தொடங்கி விட்டால், எந்த அதிகாரிக்கும் பாதுகாப்பு இருக்காது. பாதுகாப்பு உணர்வில்லாத ஓர் அதிகாரி, எந்த முடிவையும் எடுக்காமல் இருப்பதே நல்லது என்று நினைக்கத் தொடங்கி விட்டால்...?

உச்சநீதி மன்றத்தின் தீர்ப்புக்குப் பிறகு இதுதான் நடக்கிறது. பல அதிகாரிகள் முடிவுகளை எடுப்பதற்குத் தயங்குகிறார்கள். சிக்கலான கோப்புகளைத் தங்கள் மேலதிகாரிகளுக்குத் தள்ளி விடுகிறார்கள். மேலதிகாரி, அமைச்சருக்குத் தள்ளி விடுகிறார். அமைச்சர் சட்ட அமைச்சருக்கோ, நிதி அமைச்சருக்கோ, திட்டக் கமிஷனுக்கோ சில நேரங்களில் பிரதம மந்திரிக்கோ அனுப்பி விடுகிறார். இந்தச் சூழ்நிலையில் ஓர் அரசு எப்படி முடிவுகளை எடுத்து, எப்படி துரிதமாகச் செயல்பட முடியும்?

வங்கி அதிகாரிகளுக்குப் பாதுகாப்புத் தேவையா, தேவையில்லையா என்று ஒரு சர்ச்சை எழுந்தது. வங்கித் தொழில் என்பது ஒரு வகையான வியாபாரமே. வங்கிகள் கடன் கொடுக்கும்போது, ஒரு கொடுக்கல் - வாங்கலில் இலாபம் கிடைக்கும், இன்னொன்றில் நஷ்டம் ஏற்படலாம். ஒரு தொழிலுக்கு, ஒரு வங்கி கடன் கொடுக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். திடீரென்று அரசினுடைய ஏற்றுமதி - இறக்குமதிக் கொள்கை மாறலாம்; வரிக் கொள்கை மாறலாம்; அந்தத் தொழில் உற்பத்தி செய்யும் பொருளுக்குத் தேவையான மூலப் பொருள்களின் விலை உயரலாம், அல்லது மூலப் பொருள்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்படலாம், அல்லது ஒரு வேலை நிறுத்தம் நடக்கலாம். அந்தத் தொழில் நசிந்து விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தத் தொழிலுக்குக் கடன் கொடுத்த வங்கி அதிகாரி, குற்றம் செய்தவராகி விட மாட்டார். அவர் மீது யாராவது அனாமதேயப் புகார் கொடுத்தால், அதை சி.பி.ஐ. விசாரிக்கத் தொடங்கி அவரைக் குற்றவாளியாக ஆக்கினால், அவருக்குப் பாதுகாப்பு தேவையா, இல்லையா?

அரசின் மூத்த அதிகாரிகளோ, வங்கி அதிகாரிகளோ தவறே செய்வது கிடையாது என்று நான் சொல்லவில்லை. எது ஊழல், எது தவறு, எது இயல்பாக எடுத்த முடிவு என்பதை ஆராய்ந்த பிறகுதான், ஓர் அதிகாரியின் மீது குற்றம் சுமத்த வேண்டும். இந்த ஆராய்ச்சியை ஒரு போலீஸ் அதிகாரி மட்டுமே செய்ய முடியாது. அந்தத் துறையைச் சார்ந்த அனுபவசாலிகள், அந்த இலாகாவின் நடைமுறைகளைத் தெரிந்தவர்கள், வங்கித் தொழிலின் நுணுக்கங்களைப் புரிந்தவர்கள் ஆகியோர் ஆராய்ந்த பிறகுதான், ஒரு அதிகாரியின் மீது வழக்குத் தொடர்வதற்கு அனுமதி அளிக்க வேண்டும்.

வங்கி அதிகாரிகளுக்கு ஒரு பாதுகாப்பு உணர்வு வேண்டும் என்பதற்காக, ரிசர்வ் வங்கி துணை கவர்னர் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் முன் அனுமதி பெற்ற பிறகுதான், மூத்த வங்கி அதிகாரிகள் மீது வழக்குத் தொடர வேண்டும், என்ற நியதி நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஆனால் உச்சநீதி மன்றம் 'ஒரு கட்டளை' செல்லாது என்று அறிவித்த பிறகு, இந்தக் குழுவும் செல்லாது என்ற நிலைமை ஏற்பட்டது. நான் நிதி அமைச்சராக இருந்த போது, இந்தக் குழுவை ஓர் 'ஆலோசனைக் குழு' என்று திருத்தி, அக்குழுவில் ஓர் ஓய்வு பெற்ற உயர் சி.பி.ஐ.அதிகாரியையும் சேர்த்து, சில மாறுதல்களுடன், பழைய நியதியை நடைமுறைப்படுத்தினோம்.

'தாங்கள் எடுக்கும் முடிவுகளுக்கு எந்தப் பாதுகாப்பும் கிடையாது, முடிவெடுத்த ஐந்தாண்டுகள், ஆறாண்டுகளுக்குப் பிறகு யாராவது பழைய கோப்புகளைக் கிளறி வழக்குத் தொடர்வார்கள்' என்ற அச்ச உணர்வு இருந்தால், ஒரு அதிகாரி என்ன செய்வார்? எந்த முடிவையும் எடுக்க மாட்டார். ஒரு வங்கி அதிகாரி என்ன செய்வார்? கடன் வழங்க மாட்டார். இதுதான் இப்பொழுது நடக்கிறது.

ஒரு வங்கி தன்னுடைய பணத்தில் இருபத்தைந்து சதவிகிதம் மட்டுமே அரசு கடன் பத்திரங்கள் வைத்திருக்க வேண்டும் என்பது விதி. எஞ்சிய எழுபத்தைந்து சதவிகிதத்தை தொழிலதிபர்களுக்கு, விவசாயிகளுக்கு, வர்த்தகர்களுக்குக் கடனாக வழங்க வேண்டும். அப்பொழுதுதான் பொருளாதார வளர்ச்சி ஏற்படும். ஆனால், நம்முடைய வங்கிகள் நாற்பது சதவிகிதம், ஐம்பது சதவிகிதம் என்று அரசு கடன் பத்திரங்களில், வங்கியின் பணத்தை முடக்கி வைத்திருக்கிறார்கள். கடன்கள் கொடுப்பதைக் குறைத்துக் கொள்கிறார்கள். "நாம் ஏன் கடன் கொடுக்க வேண்டும், ஏன் வம்பில் மாட்டிக் கொள்ள வேண்டும்?" என்று பல வங்கி அதிகாரிகள் நினைக்கிறார்கள்.

உச்சநீதி மன்றத்தின் ஒரு தீர்ப்பு - அது நன்மையே பயக்கும் என்று கருதி அளிக்கப் பட்டிருந்தாலும் - எத்தகைய பின் விளைவுகளை ஏற்படுத்தி விட்டது என்பதைப் பார்த்தீர்களா?

(தொடரும்)

மாண்புமிகு டாப் டென் – 3

கலைஞர் பெற்றது



47/100

கலைஞருக்கு மார்க் போடச் சொல்லி 'துக்ளக்' உதவி ஆசிரியர் சத்யாகிட்டே கேட்டோம். கூட்டிக் கழிச்சு, கடைசியிலே 47/100ன்னு போட்டார்.

அண்ணா நகர் கைலாஷ் மாதிரி (27/100) கிள்ளிப் போட்டவங்க கொஞ்சம். திருப்பூர் திலகவதி, சேலையூர் ராமன், கும்பகோணம் ஜெயராமன் மாதிரி (100/100) அள்ளிப் போட்டவங்க கொஞ்சம்.

சத்யா போட்டதுக்கு ரொம்பப் பக்கத்தில் மார்க் போட்டவங்க இரண்டு பேர் (49/100) அதில குலுக்கல்ல பரிசைத் தட்டினவர்:

எம்.என்.சேஷாத்ரி,
71, டிஃபென்ஸ்
ஆபீசர்ஸ் காலனி,
சென்னை -
600 032.

பரிசு பெற்றவருக்குப் பாராட்டு.
பரிசு ரூ. 250/- அனுப்புறோம்.



சந்தோஷமா குடும்பத்தோட போய் சினிமா பாருங்க!

■ சத்யா

பத்திரிகையாளர் சத்யா போட்ட மார்க்:

	தகுதி	முழு மதிப்பெண்	கலைஞர் பெற்றது
1.	தலைமைப் பண்பு (லீடர்ஷிப் குவாலிடி, வசீகரம்)	10	7
2.	முடிவெடுக்கும் திறன்	10	4
3.	கறைபடாத கரங்கள்	10	0
4.	அரசியல் சாணக்கியம்	10	3
5.	மனித நேயம்	10	3
6.	தொண்டர்களோடு தோழமை	10	7
7.	மேடைப் பேச்சு	10	8
8.	மாற்றுக் கட்சியினரை மதிக்கும் போக்கு	10	5
9.	தனிமனித ஒழுக்கம்	10	5
10.	நிர்வாகத் திறமை	10	5
	மொத்தம்	100	47

மொக்கராசு

"மேடையிலதான் தூங்கறேன்!"

கடந்த இதழ் மகாமகச் சிறப்பிதழ் என்பதால் மொக்கராசுவை ஆசிரியர் குழு அநியாயத்துக்குக் கழற்றிவிட்டது. அந்தச் சோகத்தில் தி.நகரில் தன்னந்தனியாக புலம்பிக் கொண்டிருந்தவன் கண்ணில் விடுதலைச் சிறுத்தைகள் தொல். திருமாவளவன் பட்டுவிட, விட்டுவிடவா முடியும் அவரை? ஆரம்பித்தோம்.



நீங்கதான் அடுத்த முதல்வர்னு வச்சுக்கோங்க. முதல் நடவடிக்கையா யாரைக் கைது பண்ணுவீங்க?

நானே பதவிக்குள்ள, கைதியாகத்தானே இருப்பேன். வேற யாரை கைது பண்ணப் போறேன்? எனக்கு ரொம்ப இளகின மனசு! பழிவாங்குற உணர்ச்சியோ காழ்ப்புணர்ச்சியோ நெசமாவே கிடையாது.

கல்யாணம் பண்ணாமலேயே இருக்கற மாதிரி காதலிக்காமலேயே இருக்க முடியுமா?

அதெப்படி முடியும்? பிறக்குற ஒவ்வொரு ஜீவனுக்குள்ளேயும் காதல் இருக்கு. அது பெண்களோட மட்டுமில்லை; தமிழைக் காதலிக்கலாம், இயற்கையைக் காதலிக்கலாம், தேசத்தைக் காதலிக்கலாம், இப்படி நிறைய காதல் இருக்கு.

மரம் வெட்டிக் கதை தெரியுமா?

ஏன் தெரியாது? மரம்வெட்டிக் கர்ணபரம்பரைக் கதையும் தெரியும், அந்தக் கதைக்கு மாற்றாக மரம் நடுகிற கதையும் தெரியும்.

'களவும் கற்று மற'ங்கறாங்களே...?

அது களவொழுக்கம் பற்றி சொன்னதுன்னு நினைக்கறேன். திருட்டு சம்பந்தமான விஷயமில்லை.

மேடையில உட்கார்ந்திருக்கீங்க. நீங்கதான் கடைசியா பேசணும். தூக்கம் வந்து கண்ணை முட்டுது. என்ன பண்ணுவீங்க?

நிஜமாவே சொல்றேன். நான் மேடையில தான் பெரும்பாலும் தூங்கறேன். நேரமே இல்லை. இயக்கப்பணி, பிரச்னைகள் இதையெல்லாம் கவனிச்சுட்டுத் தூங்கவே நேரமில்லை. அதனால, கிடைக்கிற அவகாசத்துல பயணத்துலயும், மேடையிலயும் தான் தூங்கறேன். ஆனா மைக்கைப் பிடிச்சிட்டா சிறுத்தை சீறும்.

பொய் சொல்லாமலேயே இருப்பீங்களாமே?

பொய் சொல்றதில்லைன்னு உங்ககிட்ட நான் சொல்றது பொய்தான். பொதுவாவே பத்திரிகைகாரங்ககிட்ட நிறைய பொய் சொல்வேன். வேற யார்ட்ட சொல்ல முடியும் சொல்லுங்க?

எந்த நடிகையைப் பார்த்து அசந்து போயிருக்கீங்க?

மனோரமா! எந்தப் பாத்திரத்துல நடிச்சாலும் அந்தப் பாத்திரமாவே ஒன்றிடுவாங்க. அவங்க நடிப்பு ரொம்ப



பிடிக்கும்.

தண்ணீர் லாரியில் தண்ணி பிடிச்சிருக்கீங்களா?

இங்க அதுக்கெல்லாம் வேலையே இல்லையே. ஆனா ஊர்ல, ஆத்துல ஊற்றுத் தோண்டி தண்ணி பிடிச்சிருக்கேன். மண் பாணையில எல்லா பெண்களோடயும் கதை பேசிட்டு போறது மொக்கராகத் தனமா இருக்கும் (ஆஹா. மொக்கராக ரீச் ஆயிட்டாண்டா!)

வேட்டையாடியிருக்கீங்களா?

எளிய வேட்டைதான். அப்போ எலி பிடிக்கும். இப்போ புலி பிடிக்கும்.

எந்தப் பெண் அரசியல்வாதி ஆச்சர்யப் படுத்தறாங்க?

நம்ம முதல்வர்தான். ஆணாதிக்க சமுதாயத்துல ஒரு பெண் தன் ஆளுமையை நிலைநாட்டறதுல சாதனைப் படைச்சவங்க அவங்க. அதை ஏற்றுக் கொள்ளணும். நான் சந்திச்ச பெண் அரசியல்வாதி அவர் ஒருவர்தான்.

தொல்காப்பியத்துல உங்களுக்குப் பிடிச்ச சூத்திரம் எது?

தொல்காப்பியத்தைப் புரட்டிப் பார்த்திருக்கேன். சூத்திரத்தை மனசுல வைச்சுக்கற அளவு தமிழ் ஞானம் போதாது.

உங்களுக்குப் பிடிச்ச ஒரு விஷயத்தை சென்னையில கொண்டு வந்து வைக்கணும்னு வச்சுக்கோங்க, எதைக் கொண்டு வருவீங்க?

நயாகராவை!

கூட்டணிக்கு ஒரு விளக்கம் சொல்லுங்களேன்?

இலக்கியத்துல அணின்னா அழகு சேர்க்கறது. அரசியல்ல இன்னைக்கு வேற மாதிரி ஆகிப்போச்சு. நாங்க வச்சிருக்கிற கூட்டணி மக்களுக்கான கூட்டணிங்கறதால மக்கள் கூட்டணி. மற்ற கூட்டணியெல்லாம் தலைவர்களுக்கான துங்கறதால அது மக்களுக்கு எதிரான கூட்டணி. *(நல்ல லாஜிக்!)*

யாரைப் பார்த்தா கோபம் பொத்துக்கிட்டு வரும்?

இந்த மாதிரி கேள்வி கேட்கிற உங்களைப் பார்த்துதான்.

(ஆஹா... எஸ்கேப்டா சாமி!)





படங்கள்:
ஸ்ரீஹரி

நீங்கள் கேட்டவை—தராசு

● கே.கே. ரவிகாந்த், காட்டுப்புதூர்.

? டி.ராஜேந்தர் பேச்சே இல்லையே, ஏதேனும் தகவல் உண்டா...?

! மக்களுக்கு - டீ.வி. ரசிகர்களுக்கு நியாயம் சொல்லலாம். கட்சித் தலைமைக்கு நியாயம் கூற ஆரம்பித்தால்... கஷ்டம்தான்!

● சிலமலை சுந்தரம், சென்னை - 4.

? காவிரிப் பிரச்னையைத் தீர்க்க வேண்டியது காங்கிரஸ் தலைவர் பொறுப்பல்ல; பிரதமரின் பொறுப்பு என அகில இந்திய காங்கிரஸ் செயலர் ஜெயராம் ரமேஷ் கூறியுள்ளாரே...?

! இப்படி விட்டேற்றியாகப் பேசித் தப்பிக்க முடியாது. 'கர்நாடகாவில் நடப்பது காங்கிரஸ் ஆட்சிதானே?' என்று தமிழக விவசாயிகள் திருப்பிக் கேட்பார்கள். இந்த கைய அபத்தமான அறிக்கைகள் இங்கு காங்கிரஸுக்கு வோட்டுப் பெறுவதைக் குதிரைக் கொம்பாக்கும்.

● ரேவதிப்ரியன், ஈரோடு - 1

? சினிமாவில் இடம் பெறும் ஆபாசப் பாடல் வரிகளை, தமிழக அரசு தடை செய்யப் போகிறதாமே... நல்ல காரியமல்லவா?...

! சென்ஸார் என்ற பெயரில் ஏற்கெனவே ஒரு தணிக்கை இருக்க, தமிழக அரசு சூப்பர் தணிக்கை அதிகாரியாக, தன்னையே நியமித்துக் கொள்ள முடியாது. சட்டம் இடம் தராது. கலைஞர்களும் படைப்பாளிகளும்தான், பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டும். மலிவான உணர்ச்சிகளைத் தூண்டுவது சுலபம். மனங்களை உயர்த்துவதுதான் சவால். நிற்க; அரசியல் மேடைகளில் ஆபாசம் தலைவிரித்தாடுகிறதே. அதற்கென்ன செய்ய!

• கோலார் கடமை



● அ. கஹைறல்ரஹ்மான், திருச்சி - 21.

? இதுவரை பதினாறு கட்சிகளுடன் கூட்டணி உறுதியாகிவிட்டது என்று காங்கிரஸ் அறிவித்திருக்கிறதே...?

! பதினாறும் பெற்றாகிவிட்டது. பெருவாழ்வு என்பது. உழைப்பையும் சாணக்கியத்தையும் பொறுத்துத்தான் அமையும்.

● எம். மாரிமுத்து, மதுரை - 21.

? 'காதலர் தினம் கொண்டாடுபவர்களே! உங்கள் சகோதரி காதலித்தால் ஆதரிப்பீர்களா...?' என்று மதுரை நகர் முழுதும் போஸ்டர் ஒட்டப்பட்டுள்ளது... உங்கள் கருத்து...?

! காதலையே ஏதோ தவறான, பாவச் செயல் போல் கருதுவது எவ்வளவு தவறோ, அவ்வளவு தவறு, காதலர் தினம் என்ற பெயரில் 'தற்காலிகக் காதல்' உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது. Dating என்ற பெயரில் இன்று அதுதான் நடக்கிறது. உங்கள் சகோதரியின் காதல் மெய்யானதாக இருந்தால் நிச்சயம் ஆதரிக்கலாம்.

● ஜி.ஹரிபாலாஜி, வேம்படிதாளம்

? இன்றைய அரசியலுக்குத் தேவை கூட்டணி பலமா? மக்கள் பலமா...?

! பண பலம்!

● வி.எஸ். அனந்தராமன், சென்னை - 78

? கண்டலேறு நீரைக் கண்டீர்களா...?

• நினைவு நாயகர்!



அடல்ஜி கனவுக்கு என்ன அர்த்தம்?

❑ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
வி.பி.கே.சரவணன்,
3/2, தேவர் நகர், நாலாவது சந்து,
தலைவர் தவசி வீடு எதிர்ப்புறம்,
சின்னமனூர் - 625 521

! நாயுடுகாரு வஞ்சனையின்றி மிஷின் வைத்து இறைத்து அனுப்பியதே கொஞ்சம்; அதில் ஆந்திர விவசாயிகள் வழியில் அபகரித்தது சொச்சம்; தமிழக எல்லையில் கால் வாய் நனைந்ததே மிச்சம்!

● வி.பி.கே. சரவணன், சின்னமனூர். ❐

? 'நானும் கனவு காண்பவன்தான். ஆனால், அந்தக் கனவை நனவாக்குவது எப்படி என்று தெரியும்' அடல்ஜி இப்படிச் சொன்னதற்கு அர்த்தம் என்ன...?

! இப்படியெல்லாம் மர்மமாகப் பேசினால் எப்படி...? 'அயோத்தியில் ராமர் கோயில் உருவாகும் என்ற கனவை நினைவாக்கி, பாபர் மசூதி இருந்த இடத்திலேயே கட்டுவது எப்படி என்பது எனக்குத் தெரியும்' என்று விளக்கமாகச் சொன்னால் தான், வி.எச்.பி., பஜ்ரங்தள், ஆர்.எஸ்.எஸ், சிவ சேனா பாராட்டு கிடைக்கும்; தேர்தலில் அவர்களது முழு ஆதரவும் கிடைக்கும்.

● வெ. ராணி, நாமகிரிப்பேட்டை. *

? மரபுக் கவிதை, புதுக் கவிதை இவற்றில் எது சிறந்தது? பாமர மக்களுக்கு எது விளங்கும்?

! இரண்டுமே சிறந்தவைதான் என்றாலும், மரபுக் கவிதை எழுத இலக்கண அறிவு வேண்டும். இருவகைக் கவிதைகளிலும் கையாளும் மொழியின் எளிமையைப் பொறுத்தே புரிதல் சாத்தியமாகிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக இன்று நிலைமை எப்படி இருக்கிறது என்றால், 'பாரதியின் பாஞ்சாலி சபதத்துக்கு உரை நூல் இருக்கிறதா?' என்று மாணவர்கள் கேட்கும் அளவில்!

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

? 'சொத்துக் குவிப்பு வழக்கில் 'ஜெ' கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்தது சரியில்லை' என்கிறாரே இல.கணேசன்?

! கூட்டணி உறுதியாகிவிட்டது என்பதற்காக, எல்லா விஷயங்களிலும் ஜெயலலிதாவுக்குச் சாதகமாகக் கருத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நீதிமன்றம் கூறியிருக்கும் காரணங்கள் வலுவானவை.

● வீ. முத்தையா, திருநெல்வேலி டவுன்.


*** ரூ. 50/- பரிசு பெறுபவர்:**
வெ. ராணி,
திருமாலகம்,
503/ஏ, மெயின் ரோடு,
நாமகிரிப்பேட்டை - 637 406



• 'ஜெ'போடு!



• செல்வாக்குத் தேடி...!



• ஈரமனமிருந்தும்...!



• மௌனத்தின் அர்த்தம்

? 'இஸ்ரோவின் பல லட்சம் மதிப்புள்ள ராக்கெட் வளையங்கள் பழைய இரும்புக் கடையிலிருந்து மீட்கப்பட்டிருப்பதைப் பார்த்தீர்களா...?

! அதைவிடக் கவலையும் அதிர்ச்சியும் தருவது, ஸ்ரீஹரிக் கோட்டாவில் நடந்துள்ள விபத்து!

● என். பாலகிருஷ்ணன், மதுரை - 1

? கோலார் தங்கச் சுரங்கத்தில் வேலை இழந்த நான்காயிரம் தமிழர்களுக்கு மறு வாழ்வு அளிக்கும்படி மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ள ஜெயலலிதாவின் கருணை பற்றி...?

! நல்ல காரியம்; நியாயமான கோரிக்கை. கருணை அல்ல; கடமை!

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? நேற்றுவரை கொடிய செயலாக இருந்த கோயில் உயிர்ப்பலி, இப்போது 'சமயச் சடங்காக' அங்கீகரிக்கப்பட்டதன் மர்மம் என்ன...?

! அம்மா கட்சி ஜெயிக்க வந்தா, 999 கடா வெட்டறதா யாராவது வேண்டப் பட்டவங்க நேர்ந்துக்கிட்டாங்களோ என்னவோ!

● ராணி டேவிட், சென்னை - 11

? கார்த்திக் அ.தி.மு.கவில் சேர்ந்துள்ளாரே...?

! சினிமாவில் பாபுலாரிடி படுத்துவிட்டால், அரசியலுக்கு வந்து ஆட்டம் போடுகிற நூற்றோடு நூற்றி ஒன்று!

செய்திகள்



பெரும் தலைவர்களைச் சந்தித்தும் ஃபோனில் தொடர்பு கொண்டும் பேசி, அலுப்புத் தட்டி விட்டது. எனது முஸ்லிம் நண்பர் ஒருவர், ஆழ்ந்த மதப்பற்று உள்ளவர். அதேசமயம் எங்கக் கிராமத்துக் கோயில் கும்பாபிஷேகத்துக்கு நன்கொடை அளித்ததுடன், வந்திருந்து, ஒதுங்கி நின்று கவனித்து, மகிழ்ந்தவர். பட்சி ஃப்ளூ பரவு முன்னரே சுத்த சைவம்!

"முஸ்லிம்கள் எல்லோரும் வோட்டுப் போடுவதற்கு முன் யோசிக்க வேண்டும் என்று பிரதமர் சொல்லியிருக்கிறாரே..." என்று ஆரம்பித்தேன்.

"ரொம்ப சந்தோஷம்."

"எதுக்கு?"

"நேற்று வரை 'அயோத்தி, மக்களின் உணர்வுபூர்வமான விஷயம்' என்று சொன்னவர், இன்று யோசிக்கச் சொல்கிறார். அதுவே முன்னேற்றம்தானே! உணர்ச்சிகளை அறிவு என்ற அங்குசத்தால் அடக்கி ஆளணும்கிறதுதானே பெரியவங்க அறிவுரை! அதனால சந்தோஷம்..."

"யோசிக்கிறப்ப என்ன தோணுது?"

"பிரதமர் யோசிக்கச் சொன்னதே, அவருக்கும் அவர் கட்சிக்கும் பின்னடைவுன்னு தோணுது."

"ஏன்?"

"யோசிக்க ஆரம்பிச்சா, நிறைய விஷயங்களுக்கு விடை கிடைக்காது..."

"உதாரணமா?"

"குஜராத் பூகம்ப நிவாரண நிதின்னு கோடிக்கணக்குல அயல்நாடுகள்ல வசூலித்த பணம், ஆர்.எஸ்.எஸ். செயல்பாடுகளுக்கு எப்படி பயன்படுத்தப்பட்டது? அதை பி.ஜே.பி தலைமையிலான அரசு எப்படி அனுமதித்தது...?"

"பாகிஸ்தானோடு உறவு பலப்பட்டிருப்பதாகச் சொல்றாரே, பிரதமர்...?"

"நல்ல ஆரம்பம்தான். ஆரம்பிச்ச உடனே தேர்தல் வந்துருச்சு. இனி தேர்தல் முடிஞ்சு, அடுத்து வர ஆட்சி பி.ஜே.பியாகவே இருந்தாக்கூட, மறுபடி பிள்ளையார் சுழியிலேர்ந்துதான் ஆரம்பிக்கணும்."

"இந்து - முஸ்லிம்களிடையே சின்னச் சின்ன சச்சரவுகள்தான் ஏற்பட்டுள்ளன; இதைப் பெரிதுபடுத்தக் கூடாது என்று பிரதமர் கூறியிருக்கிறாரே..."

"பாபர் மசூதி இடிக்கப்பட்டது சின்ன சச்சரவா? கோத்ரா நிகழ்வு சின்ன விஷயமா? குஜராத்தில் நடந்த அக்கிரமங்கள் அற்பமானவையா? இந்த சம்பவங்களுக்கெல்லாம் காரணமானவர்கள் இன்று வரை தண்டனை பெறாமலே இருந்து வருவதும், வழக்குகள் சரியானபடி நடத்தப்படாததும் சாமானிய விஷயங்களா?"

"'அயோத்தியில் ராமர் கோயில் என்று எந்தக் கட்சியின் தேர்தல் அறிக்கையில் இடம் பெறுகிறதோ, அந்தக் கட்சிக்குத்தான் வோட்டு' என்று தொகாடியா சொல்கிறாரே...?"

"அதையும் யோசிக்கத்தான் வேணும். பி.ஜே.பி பெரும்பான்மை பலம் பெறாத வரை, தேசிய ஜனநாயக முன்னணி அரசின் செயல்திட்டம் ஒரு மாதிரி இருக்கும்; அந்தக் கட்சிக்குப் பெரும்பான்மை கிடைத்துவிட்டால், வி.எச்.பி, பஜ்ரங்தல், சிவசேனா, ஆர்.எஸ்.எஸ் ஆகியவற்றின் செல்வாக்கு அதிகரிக்க, பி.ஜே.பி தலைமையில் அமையும் அரசாங்கத்தின் செயல்திட்டம் வேறு மாதிரி இருக்கும். நான் பிரதமரைக் குறை கூற மாட்டேன். அவர் நல்ல இதயம் படைத்தவர். ஆனா பி.ஜே.பியில் இருக்கிற எல்லாரையுமே அவரை வைத்து எடை போட முடியாது."

"நீங்க இப்படிச் சொல்றீங்க. ஆனா ஆரிஃப் முகமதுகான், நஜ்மா ஹெப்துல்லா போன்றவங்க பி.ஜே.பி பக்கம்தானே சாயறாங்க...?"

"நிஜம்தான். அறிவுக்கும் உணர்வுக்கும் நடக்கிற போட்டியில் பல சமயம் உணர்ச்சிகள்தான் வெற்றி பெறும்."

"நீங்க முடிவெடுத்தா அது அறிவு; ஆரிஃப், நஜ்மா போன்றவங்க முடிவெடுத்தா அது உணர்ச்சி... அப்படித்தானே?"

"தேர்தல் என்ற பேச்சுக்கு இடமில்லாத நேரத்தில் அவங்க இந்த முடிவெடுத்திருந்தால் அறிவு பூர்வமானது என்று நம்பலாம்.

ரிப்பது செம்பியன்

இப்ப, உணர்ச்சி பூர்வமான நடவடிக்கை என்றுதான் எண்ண வேண்டியிருக்கு. அல்லது உள்நோக்கமுடைய காரியம்..'

"ஓகே! பிரதமர் சொன்னதுக்கு மதிப்பளிச்சு இவ்வளவு தூரம் யோசிச்சுட்டோம்; இதுக்கு மேலே சிந்திச்சா மண்டை காய்ஞ்சுடும்'' என்று கூறி விடை பெற்றேன்.

• • •

"எஸ்.எம். கிருஷ்ணவா? செம்பியன் ஹியர்...!"

"யெஸ்...யெஸ்..!"

"'தேசிய ஜனநாயக் கூட்டணி அரசு மக்கள் வரிப் பணத்தை வாரி இறைத்து, தேர்தல் நேரத்தில் சாதனை விளம்பரங்களை வெளியிட்டது தப்பு'ன்னு சோனியா உள்பட பலரும் கூறிக்கிட்டிருக்கிறப்ப, கர்நாடக அரசின் சாதனை விளம்பரங்களை நீங்களும் மக்கள் வரிப் பணத்தில் வெளியிட ஆரம்பிச்சுட்டீங்களே! நியாயமா?"

"என்னப்பா செய்யறது? முள்ளை முள்ளால்தானே எடுக்கணும்? அவங்க செய்த தப்பின் தொடர்ச்சியாக நானும் தப்பு செய்ய வேண்டியிருக்கு..!"

"உங்களைப் பார்த்துட்டு ஜெயலலிதா அம்மாவும், தமது ஆட்சியின் சாதனை விளம்பரங்களை வரிப்பணத்தைப் பயன்படுத்தி வெளியிடத் தொடங்கிட்டாங்க..!"

"எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான், தேர்தல் தினம் அறிவிக்கப்பட்ட உடன் இது நின்னுடும். அப்புறம் கட்சிப் பணம் தான் செலவாகும்..!"

"அதற்கும் பஞ்சமில்லை போலிருக்கே... அரசு கஜானா காலியானாலும் கட்சி கஜானாக்கள் நிரம்பி வழியுதே - குறிப்பா ஆளுங்கட்சிகளின் கஜானாக்கள்!"

• • •

Email to Arun Shourie:


"அரசு நிறுவனங்களை ஒன்றன்பின் ஒன்றாக ஏலத்தில் விடறீங்க... சாதனை விளம்பரங்களுக்காக வாரி இறைக்கப்பட்ட மக்களின் வரிப்பணத்தை ஈடுகட்டக் கூட இந்த வருவாய் போதாது போலிருக்கே... அடி மாட்டு விலைக்குக் கேட்கிறாங்களே..!"

"சூழ்ச்சி! சூழ்ச்சி!" என்று அலறினார் ஷோரி.

"எது சூழ்ச்சி? ஒரு காபந்து அரசு, தேர்தலுக்கு முன்னதாக அவசரம் அவசரமாக அரசு நிறுவனங்களை விற்க முன் வருவதா, அல்லது அவற்றை அடிமட்ட விலைக்கு வாங்க, தொழிலதிபர்கள் கூட்டணி அமைத்துச் செயல்படுவதா? எதை சூழ்ச்சின்னு சொல்றீங்க?"

"இப்ப நீ கேட்கிற கேள்வி இருக்கு பாரு! இதுவே பெரிய சூழ்ச்சி!"

தொடர்ந்து, "end of message" என்றது கம்ப்யூட்டர்.



தொகுதி விசிட்-2

தமிழ்நாடு கூட்டணி விவகாரங்கள், தொகுதிப் பங்கீடுகள் தலைவலி என்றால், பாண்டிச்சேரி விவகாரம் திருகுவலி. தனி மாநிலமாக இருப்பதால், எல்லாவிதத்திலும் தனி கவனிப்பு வேண்டுமென்ற எதிர் பார்ப்பில், சிக்கலுக்கு மேல் சிக்கல், இடியாப்பச் சிக்கல்.

கலைஞர், பா.ம.கவுக்கு அந்தத் தொகுதியை பாகப்பிரிவினை செய்ததில் வந்தது வம்பு. "எங்கள் பரம்பரைச் சொத்தான பாண்டியை மீட்கப் போராடுவோம்" என்று உள்ளூர் காங்கிரஸ் மோத, வழக்கம் போல விழிக்கிறது காங்கிரஸ் தலைமை.

பா.ஜ.க. சார்பில், இந்தத் தொகுதியில் லலிதா குமாரமங்கலம் வேட்பாளராக நிற்கக் கூடும். அவர் இந்தத் தொகுதியைச் சேர்ந்தவரல்ல. அகில இந்திய பா.ஜ.க. செயலாளரான அவர், கடந்த இரண்டு வருடங்களாக பாண்டி மாநில பா.ஜ.க. விவகாரங்களை கவனித்து வருகிறார். மற்றபடி அவரது தந்தை மோகன் குமாரமங்கலம், 1970களில் காங்கிரஸ் சார்பாக இங்கே நின்று, வென்றவர்.



• நாராயணசாமி

குளறுபடியில்

பொறியில் அகப்பட்ட எலியின் நிலைதான் பா.ம.க.நிலை. பாண்டியில் காங்கிரஸ் தனித்து வேட்பாளரைப் போட்டால், கதை அதோகதி தான்.

1999ம் ஆண்டு தி.மு.க. கூட்டணியில் பா.ம.க பாராளுமன்றத்துக்குப் போட்டியிட்டபோது, இரண்டாவது இடத்துக்கு வர முடிந்தது. 2001 சட்டமன்றத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைந்து, பத்து சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட்டது. அதில் ஏழில் டெபாஸிட் கிடைக்கவில்லை. ஒரு இடத்தில் கூட வெற்றி பெறவில்லை.

"இங்கு வன்னியர்களும் மீனவர்களும் பெரும்பான்மையாக இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஒரு போதும் ஜாதி அபிமானத்தில் அவர்கள் வாக்களிக்க மாட்டார்கள். எனவே 'வன்னியர் கட்சி' முத்திரை பா.ம.கவுக்கு உதவுவது சந்தேகமே" என்கிறார் கனக செட்டிக் குளம் ராமு. சென்ற முறை மீனவ இனத்தைச் சேர்ந்த பேராசிரியர் ராமதாஸை நிறுத்தி வைத்தது பா.ம.க. இந்த முறை அவரோ, அல்லது டாக்டர் ராமதாஸின் அக்கா மகன் தன்ராஜோ பா.ம.க. வேட்பாளராகக் கூடும். பா.ம.கவின் வெற்றி என்பது காங்கிரஸின் செயல்பாட்டைப் பொறுத்தே இருக்கிறது.

ஒரு பக்கம் கண்ணன், சடுகுடு ஆடிக் கொண்டிருக்கிறார். புதுச்சேரி மக்கள் காங்கிரஸைக் கலைத்து, காங்கிரஸில் இணையும் போது, மேலிடம் அவருக்கு ராஜ்ய சபா உறுப்பினர் பதவி தருவதாக உறுதிமொழி கொடுத்தது. ஆனால் நடக்கவில்லை. அப்புறம் பாராளு மன்றத்துக்குப் போட்டியிட வாய்ப்புக் கிடைக்கும்



படம்: மீடியா ராமு

• லலிதா குமாரமங்கலம்


என்றார்கள். தொகுதி பா.ம.கவுக்குப் போய்விட, படபடத்துப் போய் பா.ஜ.க.பக்கம் தாவத் துணிந்து விட்டார்.

பாண்டி!


இப்போது காங்கிரஸ் மேலிடம் அவருக்கு தேர்தலுக்குப் பின் 'முதல்வர் பதவி கொடுக்கப்படும்' என்று ஆசை காட்டி இருக்கிறது.

''கண்ணன் இப்போது காலிப் பெருங்காய டப்பா ஆகிவிட்டார். கட்சி மாறுவது, பல்டியடிப்பது போன்ற தனது நடவடிக்கைகளால், அவரது தனிப்பட்ட செல்வாக்கு குறைந்திருக்கிறது'' என்கிறார், காசுக்கடை தொகுதியைச் சேர்ந்த சண்முகம். இந்தக் களேபரத்தில் முதல்வர் ரங்கசாமி, ஜாதி அபிமானத்தால் பா.ம.கவுக்கு ஜால்ரா அடிக்கிறார் என்கிறது ஒரு கோஷ்டி.

''தொகுதிப் பங்கீட்டில் எல்லாக் கட்சிகளும் அவரவர் ஏற்கெனவே வென்ற தொகுதிகளைத் தக்க வைத்துக் கொண்ட போது, நாங்கள் என்ன பாவம் செய்தோம்'' என்று நம்மிடம் பொங்கினார் மாநில காங்கிரஸ் தலைவர் நாராயணசாமி. ''ஒரு வேளை உங்கள் கோரிக்கையை காங்கிரஸ் மேலிடம் ஏற்காவிட்டால்?'' என்றபோது, ''கட்சிக் கட்டளையை ஏற்று செயல் படுவோம்'' என்றார் அவர். '1996ல் தமிழ் நாட்டில் த.மா.கா. பிரிந்தது போல் தனியாகப் போவீர்களா?'' என்ற போது,



• கண்ணன்



• ராமதாஸ்

''ஒரு போதும் அப்படிச் செய்ய மாட்டோம்'' என்றார் நாராயணசாமி.

'தமிழ்நாட்டுக் கூட்டணி முடிவுகள், பாண்டிக்குப் பொருந்தாது' என்று சொல்லி, காங்கிரஸ் தனி வேட்பாளரைப் போடும் என்பது பொதுவான எதிர்பார்ப்பு.

''காங்கிரஸ் மேலிடம் தனியாக நிற்கும் முட்டாள்தனமான முடிவை எடுக்காது. அப்படி ஏதும் முடிவை எடுத்தால், தமிழ் நாட்டில் காங்கிரஸ் நிற்கும் தொகுதிகளில் எங்களின் முழுமையான ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியாது. மேலும் மதவாத பா.ஜ.கவின் வெற்றிக்கே அது உதவும்'' என்கிறார் மூத்த பா.ம.க. பிரமுகர் ஒருவர்.

— கௌசி



குறையொன்றுமில்லை

மஹா யோகி என்று பெயர் நரசிம்ஹனுக்கு. சோளிங்க புரத்திலே போய்ப் பாருங்கள் - எப்படி உட்கார்ந்திருக்கிறான் அவன்! கார்த்திகை மாதம்தான் யோகத்தை விடுகிறான். அத னால் கார்த்திகை மாதம் அங்கே விசேஷம்.

யோகாரூடா: - ஆஸ்சர்யமாய், விசேஷ மாய் அமர்ந்திருக்கிறான், யோக நரசிம்ஹன் சன்னதியிலே, அவ்வளவு தூரமும் நாம் படிப்படியாக ஏற வேண்டும். மகான்கள் அவனை 'மிக்கானை' என்கிறார்கள். எல்லாரைக் காட்டிலும் மேம்பட்டவன் அவன் - மழையாய் விரிந்தவன் அவன். 'அனுபவிக்க அனுபவிக்கத் தெவிட்டாத தெள்ளமுது' என்று கொண்டாடுகிறார் திருமங்கையாழ்வார் - 'மிக்கானை' என்கிறார். 'தக்கானை' என்றும் அவனை அழைக்கிறார். அப்பேர்ப்பட்ட உயர்ந்த எம்பெருமான் அவன். உலகத்துக்கெல்லாம் தீபமாக ஜொலிக்கக் கூடியவன். அப்படிப் பட்ட உயர்ந்த எம்பெருமான், அக்காரக்கனி யாக இனிக்கிறான். அனுபவிக்க அனுபவிக் கத் தெவிட்டாத தெள்ளமுது.

ஆயிரத்து முந்நூறு படியும் (சோளிங்க புரத்தில்) ஏறி, அந்த யோக தசையிலே எம்பெருமானை ஸேவிக்க வேண்டு மானால், எவ்வளவு கஷ்டம் பாருங்கள்... அதிலே நாமாக ஏறிவிடமுடியுமா? அவனல் லவா ஏற்றி விடுகிறான்! நாம் இரண்டு படிகள் ஏறினால் போதும்; அவனே கொண்டுபோய் நம்மை ஏற்றிவிட்டு, திவ்ய தரிசனத்தைக் கொடுக்கிறான். யோகிகளின் ஹ்ருதயத்திலே நித்ய வாஸம் பண்ணுவ தால், யோக நரசிம்ஹன் என்று பெயர் அவனுக்கு.

மட்டபள்ளியிலே இருக்கிற நரசிம் ஹனுக்கும் யோகானந்தன் என்று பெயர். சோளிங்கபுரத்தில் ஏறவேண்டும்; இங்கே மட்டபள்ளியிலே, இறங்க வேண்டும்! பள்ளத்துக்குள்ளே உட்கார்ந்திருக்கிறான், மட்டபள்ளியிலே. சுற்றிலும் பர்வதங்கள், அதன் மத்தியிலே பள்ளத்துக்குள்ளே யுவாவாக, நித்யம் இளமை பொருந்தியவ னாகக் காட்சி தருகிறான்.

அவன் மிருகமும் அல்ல; மனிதனும் அல்ல... நரம் கலந்த சிம்ஹ ரூபமாகக் காட்சி தருகிறான். 'அவனை ஸ்தோத்திரம் பண்ணிக் கொள்... யார் அவனை விசேஷமாக ஸ்தோத்திரம் பண்ணுகிறார் களோ, அப்படிப்பட்டவர்களுக்கு விசேஷ மாக அனுக்ரஹம் பண்ணுகிறான் அவன்' என்று வேதமே சொல்கிறது. அவனை எங்கே ஸேவிக்க வேண்டும்...? 'குஹர விஹாரம பஜே!' என்று சொல்லியிருக்கிறது. பர்வத குகைக்குள்ளே நித்ய வாஸம் பண்ணுகிறான் அவன்; அங்கே போய் அவனை ஸேவியுங்கள்!

அந்த குகைக்குள்ளே இப்படியும் அப் படியுமாக நாலடி நடக்கிறான் மட்டபள்ளி நாதன்! சிம்ஹம், அப்படி நாலடி, இப்படி நாலடி நடக்கும்... அந்த மாதிரி இந்த மட்ட பள்ளி குகைக்குள்ளே இந்த நரசிம்ஹன் குறுக்கும் நெடுக்கும் செல்கிறான். அந்த

அழகை நாம் ஸேவிக்க முடியும்.

அஹோபிலம் என்ற க்ஷேத்திரத்திலேயும் நரசிம்ஹன் குகைக்குள்ளே பிரகாசிக்கிறான். 'அஹோ - பிலம்' (பிலம்-குகை) குகை என்றே அந்த ஊருக்குப் பெயர்! அப்படிப்பட்ட திவ்ய க்ஷேத்திரம் அது. யாதகிரி என்ற க்ஷேத்திரத்தில், பர்வத குகைக்குள்ளே நித்ய வாஸம் பண்ணுகிறான். நம் ஹ்ருதய குகைக்குள்ளேயும் அவனே நித்ய வாஸம் பண்ணுகிறான்!

அதனால்தான் ஆண்டாளும்,


'மாரி மலை முழைஞ்சில் மன்னிக்
கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரிமயிர் பொங்க எப்பாடும்
பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலேநீ பூவைப்
பூவண்ணா! உன்
கோயில் நின்றிங்ஙனே
போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்காசனத் திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந்து அருளேலோர்
எம்பாவாய்!'

என்று திருப்பாவையிலே கிருஷ்ணனைக் குறித்து, அவனை ஸேவித்து, அவனிடத்திலே பறை பெறுவதாகப் பாசுரங்கள் பாடுகிறபோதுகூட, நாம் கவனித்துப் பார்த்தோமேயானால், யாரிடத்திலே பிரார்த்தனை பண்ணுகிறாள் அவள்...?

'உள்ளே நீ இருக்க வேண்டாம், குகையை விட்டு வெளியிலே வா... வெளியிலே வந்து உட்கார்ந்து கொள் எம்பெருமானே, நரசிம்ஹனே... யான் வந்த காரியம் ஆராய்ந்து அருள்பவன் நீதான்...' என்கிறாள். ஆகையினாலே, நம் பிரார்த்தனை யாருடைய திருவடியிலே இருக்க வேண்டும் என்றால், நரசிம்ஹன் திருவடியிலே இருக்க வேண்டும். 'நம் காரியத்தை ஆராய்ந்து அருள்பவன் அவன் ஒருவனே' என்று திருப்பாவையிலே ஆண்டாள் அழகாகக் காட்டித் தருகிறாள்.

'மாரிமலை முழைஞ்சில்' என்ற பாசுரமே வேத வாக்கியம்தான். வேத வாக்கியத்தை மனத்தில் கொண்டுதான் ஆண்டாள் நரசிம்ஹனை தியானம் பண்ணுகிறாள்.

'ஏற்றமுடையவன், யோகிகளுக்குள்ளே, தலைசிறந்தவன் அவன் - எம்பெருமான், யோகாதி ரூடனாக அங்கே காட்சி அளிக்கிறான்' என்று



ஆண்டாள் பாடியவனே. இன்று அதே தோற்றத்தில், குணத்தில் அர்ச்சாவதாரத் திலே விளங்குகிறான்.

'யோகோ யோக விதாம் நேதா..' என்பது அந்த நரசிம்ஹனைக் குறிப்பதைப் பார்த்தோம். 'ப்ரதான புருஷேச்வர!' - என்பது யாரைக் குறிக்கும்...?

பிரதானம் என்று சொன்னால் இந்தப் பிரக்ருதி. இதிலே இருக்கும்படியான 24 தத்துவங்கள் - பிரக்ருதி, மகத் முதலான 24 தத்துவங்கள்.

கபில வாஸுதேவனாக அவதாரம் பண்ணி, தன் தாயார் தேவபூதிக்கு இந்த தத்துவங்களை எம்பெருமான் எடுத்துச் சொல்கிறான்.

நாராயண பட்டத்திரி கேட்கிறார் எம்பெருமானை: "நீ கபிலாவதாரம் பண்ணி இருபத்துநாலு தத்துவங்களையும் விளக்கி னாயாமே, அது வாஸ்தவமா?" என்று கேட்கிறார்!

அவ்வாறு விளக்கப்பட்ட இருபத்து நாலு தத்துவங்கள் என்னென்ன...?

பிரகிருதி, மகத், அகங்காரம் - இந்த மூன்று முதல் தத்துவங்கள். இவற்றிலிருந்து பஞ்சதன்மாத்ரைகள் உண்டாகின்றன. அந்த பஞ்சதன்மாத்ரைகளிலிருந்து பஞ்சபூதங்கள் உண்டாகின்றன. அந்த பஞ்சபூதங்களி

மகாமக அன்னதானம்

29.2.04 'கல்கி' இதழில் எனது பேட்டி வெளியாகியுள்ளது. கும்ப கோணம் மகாமகத் திருவிழாவில் நானே அன்னதானம் வழங்குவது போல் அந்தப் பேட்டி இருக்கிறது. இந்த அன்னதானத்துக்கான அனைத்துச் செலவுகளையும் சாஸ்த்ரா யூனிவர் சிட்டி, சண்முகா கல்லூரியே ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் பொது சேவையில் பங்கு கொள்ளும் பாக்கி யத்தை அளித்த சாஸ்த்ரா யூனிவர் சிட்டிக்கு நான் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன்.

- அறுசுவை அரசு நடராஜன்,
சென்னை - 30

லிருந்து கர்மேந்த்ரியங்கள் ஐந்து உண்டா யின. ஞானேந்த்ரியங்கள் ஐந்து, மனது ஒன்று... என, ஆகமொத்தம் பதினொரு இந்த்ரியங்கள் உண்டாயின.

இதைக் கவனித்துப் பார்த்தோமானால், பஞ்சபூதங்கள் முழுதாக உருவாகாத நிலை - இடைப்பட்ட நிலை என்று ஒன்று உண்டு.

பாலை நாம் தோய்த்து வைக்கிறோம் - இரவு. அது மறுநாள் பூரணமாக, கட்டிக் கட்டியாகத் தயிராகிவிடுகிறது. நடுவிலே, பாதி ராத்திரியிலே அதைத் திறந்து பார்த்தால், இளந்தோய்ச்சலாக இருக்கும். பூரணமாக, கெட்டியாக இராது.

இப்படிப்பட்ட இளம் தோய்ச்சல் நிலை இருக்கிறது பாருங்கள்... இதைத்தான் தன்மாத்ரம் என்று சொல்வது. இவ்வாறு,

சப்த தன்மாத்திரத்திலிருந்து ஆகாயம் உண்டாயிற்று,
ஸ்பரிச தன்மாத்திரத்திலிருந்து வாயு உண்டாயிற்று,
ரூப தன்மாத்திரத்திலிருந்து அக்னி உண்டாயிற்று,
ரஸ தன்மாத்திரத்திலிருந்து ஜலம் உண்டாயிற்று,
கந்த (மணம்) தன்மாத்திரத்திலிருந்து ப்ருத்வி (மண்) உண்டாயிற்று.

ஆக, தன்மாத்திரமென்பது ஐந்து. அதி லிருந்து தோன்றியது பஞ்சபூதங்கள்.

ஆக முதல் மூன்று தத்வங்கள் + தன்மாத்திரங்கள் + பஞ்ச பூதங்கள் = 13.

இவற்றோடு பதினொரு இந்த்ரியங்கள். (கர்மேந்த்ரியங்கள் ஐந்து, ஞானேந்த்ரியங்கள் ஐந்து, அவை அனைத்தையும் ஆட்டிப் படைக்கக் கூடிய மனம் ஒன்று)

பதிமூன்று + பதினொன்று = இருபத்தி நாலு.

இந்த இருபத்து நாலையும் சேர்த்துதான் பிரக்ருதி தத்துவம் என்று சொல்வது. இதற்குப் 'பிரதானம்' என்று பெயர்.

இந்த இருபத்து நாலைக் காட்டிலும் வேறான புருஷன், ஜீவாத்மா! இந்த ஜீவாத்மா, இருபத்தைந்தாவது தத்துவம்.

பிரதான புருஷேஸ்வர: என்பதில் பிரதான என்பது, இருபத்துநாலு தத்துவங் களையும், புருஷேஸ்வர: என்பது ஜீவாத் மாவையும் குறிக்கிறது. இந்த இரண்டுக்கும் ஈச்வரன் யார் என்று கேட்டால், அவன் தான் *'நாரசிம்ஹ வபு ஸ்ரீமான்'* - என்கிற நரசிம்ஹன்! இவைகளுக்கெல்லாம் அந்தர்

யாமியாக இருக்கக் கூடியவன், அவதார காலத்திலே சகல வஸ்துக்களிலேயும் அவன் அந்தர்யாமியாக இருக்கக் கூடியதனாலே, அவன் 'நாரசிம்ஹ வபு ஸ்ரீமான்'!

அவசரத் திருக்கோலம் என்று பெயர் இந்த அவதாரத்துக்கு! 'இந்தக் குழந்தை கூப்பிட்டுவிட்டதே, என்ன சொல்லுமோ?' என்று அதி வேகமாக வந்து சேர்ந்தவன் அல்லவா!

ராமாவதாரத்திலே, 'நமக்கு யார் தந்தையாக இருக்கக் கூடியவன்..?' என்று நிதானமாகப் பார்த்து, தசரதனை வரித்து, மெதுவாக அவதாரம் பண்ணினான், பன்னிரண்டு மாதங்கள் கழித்து!

அதே மாதிரி வஸுதேவர் கிருஹத்திலே வந்து பரமாத்மா அவதரிக்கப் போகிறான் என்பதை முன்கூட்டியே சொன்னான். தேவகியின் கர்பத்திலே வாஸம் பண்ணினான்.

இந்த நரசிம்ஹ அவதாரத்திலே இதற்கெல்லாம் அவகாசமே இல்லை!

அப்பா யார்? அம்மா யார்? என்றெல்லாம் யோசனையே பண்ணவில்லை. 'வித்யுபது!' என்று மின்னல்போல் அவதாரம் பண்ணினான். அதிவேகம் அந்த அவதாரத்திலே...

வேஷமும் வேகம்; அவதாரமும் வேகம். அவசரத் திருக்கோலம் என்று ஆசார்யர்கள் பணித்தார்கள். சில சமயங்களில், நாம் அவசரமாகப் பண்ணுகிற காரியம் ரொம்ப ரம்மியமாக அமையும்.

சமையல் செய்வதற்காக காய்கறிகளெல்லாம் வாங்கி வைத்து, ரொம்ப நன்றாகப் பண்ணவேண்டும், அவர் சாப்பிட வரப் போகிறார் என்று ஏகமாக ஏற்பாடு பண்ணி, கடைசியிலே பார்த்தால் ஒரே உப்பாக இருக்கும்! அல்லது காரமாகவோ புளிப்பாகவோ இருக்கும்! இல்லையானால் உப்பே போட்டிருக்க மாட்டார்கள்.

ஏகமாக முன்னேற்பாடு பண்ணிய பிறகு இப்படி அமையும். ஆனால், ஒருத்தர் திடீரென்று ஊரிலிருந்து வருவார்... மத்தியானம் இரண்டு மணிக்கு! அப்போது சாமானியமாக ஒரு சின்ன தளிகை - சின்ன சமையல் - பண்ணினால், அது பரம ருசியாக இருக்கும்!

ஆகவே திடீரென்று, அவசரத்திலே பண்ணக் கூடிய தளிகை அவ்வளவு ரம்மியமாக இருக்கிற மாதிரி, (பார்த்துப் பார்த்து நிதானமாக வராமல்) அவசரமாக, சாமானியமாக வந்த அவதாரமும் சிறப்பு. இந்த அவசரத் திருக்கோலத்துக்கு வந்த அழகு. அதை இன்னொரு விதமாகவும் முக்கூர் அழகியசிங்கர் சொல்லுவார். ஃபோட்டோ எடுப்பதற்காக ஏகமாக அலங்காரம் பண்ணிக் கொண்டேமானால், அப்போது எடுக்கிற போட்டோ நன்றாகவே இராது; வெயிலில் வியர்த்துக் கொட்டிக் கொண்டு வருவோம்... அப்போது எடுக்கிற போட்டோ பிரமாதமாக அமையும்!

ஆகவே, நரசிம்ஹ அவதாரம் திடீரென்று தோன்றிய அவதாரம். பிரஹ்லாதன் வார்த்தையை ரக்ஷிப்பதற்காக முன்னேற்பாடில்லாமல் ஏற்பட்டது.

நரசிம்ஹ அவதாரம் பிரஹ்லாதனை ரக்ஷிப்பதற்காகவா, அல்லது பிரஹ்லாதனுடைய வார்த்தையை ரக்ஷிப்பதற்காகவா என்று கேட்டால், பிரஹ்லாதனை ரக்ஷிப்பதற்காக அல்ல...! அவன் வார்த்தையை ரக்ஷிப்பதற்காகத்தான்.

(வளரும்)

மல்லிக்காப்பி மதுரைவீரன்!





ஐயோ-டேட்டா!


தேர்தல் நெருங்கி விட்ட நேரமிது. களத்தில் குதிக்கும் வேட்பாளர்களுக்கு மட்டும்தான் பயோ-டேட்டா இருக்க வேண்டுமா? அ.இ.அ.தி.மு.க தீவிரத் தொண்டர் ஒருவரது ஐயோ (பாவம்) டேட்டா!

பெயர்	மல்லிக்காப்பி மதுரைவீரன்
படிப்பு	பழைய எஸ்.எஸ்.எல்.சி.
குடும்பம்	மனைவி, நான்கு பிள்ளைகள், ஸ்ரீரங்கத்தில் வாடகை வீடு
எதில் ஈடுபாடு?	நத்தத்தில் இருந்தவரைக்கும் எம்.ஜி.ஆர். ரசிகர். 1983ல் ஸ்ரீரங்கம் வந்ததிலிருந்து அம்மாவின் தீவிரத் தொண்டர்
அகற்ற முடியாதது?	மனசுக்குள் இருந்து அம்மாவை, சைக்கிளில் இருந்து அ.இ.அ.தி.மு.க சின்னங்களை
அதனால் இழந்தது?	"உன் சைக்கிளில் கொடியையும், இரட்டை இலைச் சின்னத்தையும் எடுத்துவிட்டு வா. தினசரி எங்க ஆட்களே அறுபது ரூபாய்க்கு மல்லிக்காப்பி வாங்குவார்கள்" என்றிருக்கிறார் ஜவுளிக் கடைக்காரர் ஒருவர். மறுத்துவிட்டார் இந்த தன்மானச் சிங்கம்!
இதுவரை சாதனை	எவரிடத்தும் வசூல் செய்யாமல், தன் சொந்த வருவாயில் கட்சி வேலைகளில் ஈடுபடுவது.
முக்கியப் பிரசாரம்	இரட்டை இலையை உடம்பில் வரைந்து கொண்டு, தொகுதியை வலம் வருவது
பிரசாரம் செய்த தொகுதிகள்	அச்சரப்பாக்கம், சைதாப்பேட்டை (சாத்தான்குளம் 'அம்மா' வரக்கூடாது எனக் கட்டளையிட்டதால் போகவில்லை) ஆண்டிப்பட்டி (அம்மாவுக்காக இருமுறை சென்று வந்தது)
இதற்கெல்லாம் ஏது பணம்?	வட்டிக்குக் கடன் வாங்கறதுதான்!
சமீபத்திய கட்சித் தொண்டு	வேட்பாளர் பெயர் அறிவிக்கும் முன்பே, ஐந்நூறு ரூபாய் கடன் வாங்கி, சுவர்களில் சின்னம் வரைந்து தேர்தல் விளம்பரம் செய்திருப்பது
மனசுக்குள் பிரார்த்திப்பது:	அம்மா பிரதமர் ஆகணும்



பேட்டி, படங்கள்: இருள்நீக்கியான்







SWETHA JOGGER

அழகும் ஆரோக்கியமும் இனி உங்கள் கையில் !

நடுத்தர மக்களின் ஆரோக்கியமான உடலுக்கு உடற்பயிற்சி அவசியம். உடற்பயிற்சி மேற் கொள்ளாமல் போவதன் விளைவு பல வியாதிகளுக்கு ஆளாகின்றனர். 20 வயதிலிருந்து 55 வயதுக்குட்பட்ட வேலைக்குச் செல்பவர்கள் ஒரே இடத்தில் அமர்ந்து வேலை செய்வதால். போதிய நடை பயிற்சியோ. உடற்பயிற்சியோ கடைபிடிக்க முடிவதில்லை. இதையெல்லாம் மனதில் கொண்டே உங்களுக்காக நாங்கள் **"Swetha Jogger" / "Swetha Walker"** என்ற உடற்பயிற்சி சாதனங்களை வடிவமைத்துள்ளோம். இதற்கு 1 வருட உத்தரவாதமும் உண்டு. காலையும் மாலையும் 10 நிமிடம் பயிற்சி செய்தாலே **3km** நடைபயிற்சி செய்த பலன் கிடைக்கும். தினமும் தொடர்ந்து செய்தால் உடல் எடை நிச்சயம் குறையும்.

SWETHA walker

TRADE MARKS REGISTERED NO.997370



SWETHA WALKER

ASIAN ENTERPRISES

Mfrs of : Health Fitness Machines & Office Filling Systems
#25 (Old, #16), Perumal Koil South
1st Cross Lane, Vadapalani, Chennai - 26

Ph: 044 - 24847701

வியாபார விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka